தேவியின் கண்மணி

லட்சுமி பிரபா

ரூ.8/-



# இதயம் முழுதும் உனது வசம்!

# இதயம் முழுதும் உனது வசம்!

கறுத்த மேகக்கூட்டம் மழைக்கான திட்டத்துடன் இருந்ததால் வானம் சோம்பலாய் விடிந்து கொண்டிருந்தது.

மறைக்கப்பட்ட சூரியன்! ஆனாலும் வெளிச்சக்கசிவில் இருட்டை சுருட்டும் முயற்சி...! குற்றாலக்குளுமையுடன் இருந்தது, சென்னைக்கு அருகாமையில் உள்ள குன்றத்தூர்...!

வீட்டின் பின்புறத்தே உள்ள தோட்டத்தில் வந்து நின்றாள் கங்கா. பவளமல்லி மரத்தின் கிளையைப்பற்றி மெதுவாக உலுக்கினாள்.

பொலபொலவென்று பவளமல்லி பூக்கள் தரையில் உதிர்ந்தன.

கையிலிருந்த மூங்கில் கூடையில் பூக்களை எடுத்துப்போட்டுக் கொண்ட கங்கா.. செம்பருத்தி செடியின் அருகே சென்றாள்.

வெள்ளை நிறத்தில் பூத்திருந்த செம்பருத்தி பூக்களை ரசனையோடு ஒரு பார்வை பார்த்து விட்டு பூக்களுக்கு வலித்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் மிக மெதுவாய் கிள்ளியெடுத்தாள்.

தோட்டத்தின் மூலையில் போன மாதம் தான் மஞ்சள் வண்ணத்தில் பூக்கும் செம்பருத்தி செடியை நட்டு வைத்திருந்தாள்.

கங்காவுக்கு பூக்கள் என்றால் கொள்ளைப்பிரியம்...!

குன்றத்தூர் கோவிலுக்கு அடிக்கடி அவள் சென்று தரிசித்து விட்டு வருவாள்.

அப்படி கோவிலுக்குப் போகும் போதெல்லாம் சன்னதி தெருவின் கடைசியில் உள்ள நர்சரிக்கும் தவறாமல் சென்று விடுவாள்.

நர்சரியில் உள்ள பூச்செடிகளை நிதானமாய் ரசனையுடன் பார்த்து சுற்றி வருவாள்.

வித்தியாசமான வண்ணத்தில் பூக்கும் செடிகள் கண்ணில் பட்டு விட்டால் போதும் அவளுக்கு தூக்கமே வராது.

குருவி போல் தான் சேமித்து வைத்த பணத்திலிருந்து சிறிதளவை எடுத்துக் கொண்டு போய் தோட்டக்காரரிடம் பேரம்

**-லட்சுமி பிரபா**

பேசி செடியை வாங்கிக் கொண்டு வந்து தனது தோட்டத்தில் மண்வெட்டியால் குழி தோண்டி எருவையும், வேப்பம் புண்ணாக்கையும் கலந்து போட்டு உற்சாகமான குரலில் அம்மா பர்வதத்திற்கு அழைப்பு விடுப்பாள்.

''அம்மா... அம்..மா! கொஞ்சம் சீக்கிரம் வாயேன்மா!'' ஜன்னல் வழியே தோட்டத்தை எட்டிப்பார்த்து விட்டு, ''என்ன கங்கா? நான் தான் சமையல் வேலையா இருக்கேன்ல? நீயே செடியை நட்டு வச்சுடேன்'' என்பாள் பர்வதம்.

''ஊகூம்.. உன்னோட ராசியான கையால நட்டு வச்சா செடி நல்லா தழைக்கும் ஒருக்காலும் வாடி பட்டுப்போகவே போகாதும்மா.. ரெண்டு நிமிஷம் கூட ஆகாதும்மா.. நட்டு வச்சுட்டு போயிடு... மத்ததை நான் பார்த்துக்கிறேன்.. பிளீஸ் அம்மா..''

கொஞ்சும் தோனியில் கேட்டாள் கங்கா.

அதற்கு மேல் பர்வதத்தால் மறுக்க முடியாது.

''அந்தச்செடியைக் கொண்டா.. உம்! நட்டு வச்சுட்டேன் இப்போ உனக்கு திருப்தியா? என்னோட ராசியான கையால நட்டு வச்சா செடி நல்லா தழைக்கும் பட்டுப்போகவே போகாதுன்னு சொல்றியே? அது தப்பு கங்கா!''

''எதுக்கும்மா இப்படி சொல்றே?''

''நிஜத்தைத்தானே சொல்றேன். உன்னோட அக்கறையான கவனிப்புமேல பராமரிப்புலே தான் செடிங்க பட்டுப்போகாம இருக்கு.காலங்கார்த்தால எழுந்ததுமே தோட்டத்துக்கு தானே ஓடி வர்றே? குழந்தைகளைப் பேணி பாதுகாக்கிற மாதிரி கவனிச்சுக்கிடறே.. செடிங்க தளதளன்னு வளர்கிறதுக்கும் வாடிப்போகாம இருக்கிறதுக்கும் நீதான் காரணம் கங்கா''

''ஓ நீ அப்படி சொல்றியா? இருந்தாலும் கைராசின்னு ஒண்ணு இருக்குல்ல அம்மா?''

''என்னமோ ராஜாத்தி! நீ ரொம்ப வித்தியாசமா தான் இருக்கே. இந்தக்காலத்து பொண்ணுங்க கொஞ்சம் படிச்சுட்டாலே...

பெத்த அம்மாவை மதிக்கமாட்டேங்கிறாங்க. ஏதாவது எடுத்துச்சொன்னாக்கூட.. உனக்கெல்லாம் என்னம்மா தெரியும்? கம்முனு இருங்கம்மான்னு பெத்த அம்மாவை எடுத்தெறிஞ்சு பேசி அடக்கிடறாங்க...

எங்களுக்கு எல்லாம் தெரியுமாக்கும் அப்படிங்கிற தான் தோன்றித்தனம் வந்துடுது. கர்வமா, ஆணவமா, அகங்காரமா நடந்துக்கிடறாங்க.. ஆனா நீ யுனிவர்சிட்டி ரேங்க் எடுத்தவள் கோல்டு மெடல் வாங்கினவள்.

உங்க கல்லூரிக்கு நான் வந்தப்போ.. உன்னோட லெக்சரர்ஸ் எல்

லாருமே பாராட்டு தெரிவிச்சாங்க..

உங்க பொண்ணு சாதிச்சிருக்கா.. அதுக்கு நீங்க தான் காரண மாமே?ன்னு கேட்டாங்க.. எனக்கு ரொம்ப பெருமிதமா இருந்துச்சு. நீ படிச்சே.. கண்முழிச்சு அக்கறையா சிரத்தையா படிச்சு இதை ச ாதிச்சிருக்கே. ஆனா எல்லாத்துக்கும் எங்கம்மா தான் காரணம்னு சொல்றே பாரு? இந்தப் பெருந்தன்மை யாருக்கு வரும்? உன் னோட நல்ல குணத்துக்கு உனக்கு ஒரு குறையும் வராது ராஜாத்தி! உனக்கு நல்ல மனசுடா நீ தொட்டா எல்லாமே தழைக்கும் நீ தொட் டதெல்லாமே துலங்கும்''

''என்னைப் பெத்து வளர்த்து உருவாக்கி சாதிக்க வச்சது நீதா னேம்மா? எல்லாப் பெருமைக்கும் காரணமானவள் நீதானே?''

''அப்படி சொல்லாதே கங்கா! உங்க அக்கா துர்காவையும் தான் நான் உன்னை வளர்த்தது மாதிரியே வளர்த்து ஆளாக்கினேன்? அவ என்ன சாதிச்சா? அவ பிளஸ்-டூவைத் தாண்டினதே பெரிய விஷய மாச்சே? எப்படியோ பார்டர் மார்க் வாங்கி கரை சேர்ந்தா.. இதுக்கு மேல இவளைப்படிக்க வைக்கிறதை விட பேசாம கல்யாணம் பண்ணி தந்துடறது எவ்வளவோ மேல் அப்படிங்கிற அபிப்பிராயம் உங்கப்பாவுக்கும் எனக்கும் வந்துடுச்சு. உங்கக்கா அப்படி வர வச்சு ட்டா..

''இந்தக்காலத்துல ஒரு டிகிரி கூட முடிக்காம பொண்ணைக் கட்டித்தர்றோமேன்னு எங்களுக்கு கழுத்து மட்டும் குறை தான்.. படிப்பு மண்டையில ஏறாதவளை வச்சுக்கிட்டு என்ன செய்ற துன்னு மனசைத் தேத்திக்கிட்டு கவுரவமா கட்டிக்குடுத்துட்டோம். அவளையும் தான் வளர்த்தேன். அவ ஒண்ணும் சாதிக்கலையே? இதுக்கு என்ன சொல்றே கங்கா?''

படிப்பு மண்டையில ஏறலைன்னா என்னம்மா? அக்காவுக்கு என்ன குறைச்சல்? ரொம்ப நல்லா சமைக்கிறா.. அழகா தைக் கிறா.. குடும்பத்தை நல்லா நிர்வகிக்கிறா... அவளோட மாமியார் வீட்டுலே இவளைத் தலையில தூக்கி வச்சு கொண்டாடுறாங் கல்ல? பொண்ணை ரொம்ப நல்லா வளர்த்திருக்காங்கன்னு உங்க ளுக்கு நல்ல பேரு எடுத்துக்குடுத்துட்டா இல்லையா? அது உனக்கு தானேம்மா பெருமை?''

விட்டுக் கொடுக்காமல் பேசும் இளைய மகளைக்காணும் போது அம்மா பர்வதத்திற்கு உள்ளூர பெருமிதம் பொங்கத் தான் செய்யும்.

''உங்கக்காவை விட்டுக் கொடுக்க மாட்டியே?நீ சொல்றதெல் லாம் சரிதான்.. ஆனா.. ஒண்ணு தெரிஞ்சுக்கோ கங்கா! சமையல் வேலை செய்யறதும், தைக்கிறதும் குடும்பத்தை நல்லபடியா நிர்வ



கிக்கிறதும் ஒரு பொண்ணோட கடமை தானே? இது எல்லாம் ஒரு பொண்ணா பொறந்துட்டா செய்ய வேண்டிய கடமைகள் கங்கா! இதை எப்படி சாதனைன்னு சொல்ல முடியும் சொல்லு?

நீயும் தான் நல்லா படிச்சே மார்க் வாங்கினே.. இதோ இப்போ பி.ஈ. இன்ஜினீயரிங் முடிச்சுட்டே.. படிச்ச பொண்ணு இது நாள் வரைக்கும் காலேஜுக்கும் போயிட்டு தான் இருந்தே உனக்கும் அருமையா சமைக்கத் தெரியுமே? கண் பார்த்தா கை செய்யும் வகையைச் சேர்ந்தவ நீ..

கலெக்டர் கையால கோல்டு மெடல் நீ வாங்கினே பாரு! மேடையில அந்தக் காட்சியைப் பார்க்கும் போது ஆனந்தத்துல கண் கலங்கி பெத்த மனசு பூரிச்சு போச்சு பாரு! நீ பண்ணினது தான்டா சாதனை! உன் குணத்துக்கும் படிப்புக்கும் ஏத்த மாப்பிள்ளை வாய்க்கணும். அதுதான் எழுங்க பிரார்த்தனை! நல்ல மாப்பிள்ளை கிடைச்சு உன்னை அவரு கையில பிடிச்சுக் கொடுத்துட்டா எங்க கடமை முடிஞ்சு போயிடும் இல்லையா?''

''என் கல்யாணத்துக்கு என்னம்மா அவசரம்? நல்ல மார்க்ஸ் இருந்ததால கேம்பஸ் இன்டர்வியூ நடத்தி ஒரு பெரிய நிறுவனம் என்னை செலக்ட் பண்ணி அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் குடுத் திருக்கே.. கொஞ்ச காலத்துக்கு வேலைக்குப்போயி சம்பாதிக்க ணும்னு ஆசையா இருக்கும்மா பிளீஸ்''

''கங்கா! உன் ஆசைக்கு என்னிக்குமே நாங்க முட்டுக்கட்டை போட்டதில்லை. உன் இஷ்டப்படியே கொஞ்ச காலத்துக்கு வேலைக்குப் போயிட்டு இரு.. ஆனா.. ஒரு கண்டிஷன்! நல்ல சம்பந்தம் தகைஞ்சு வந்துட்டா சட்டு புட்டுன்னு கல்யாணத்தை முடிச்சுடுவோம். தள்ளிப்போட மாட்டோம். அதுக்கு நீ சம்மதிக் கணும். சரியா?''

''சரிம்மா என்னோட வார்த்தைக்கு இவ்ளோ தூரம் நீங்க மதிப்பு குடுக்கிறப்போ.. உங்க பேச்சை நான் மீறுவேனா? அம்மா இதோ பாரேன்! விருட்சிப்பூச்செடி! இது வித்தியாசமா ரோஸ் வண்ணத்துல பூக்குமாம். நர்ஸரியிலேர்ந்து வாங்கிட்டு வந்தேன்''

''அதீத ரசனை கொண்ட பொண்ணாச்சே நீ! வித்தியாசமா எதை யாச்சும் பார்த்தா.. விரும்பி வாங்கிட்டு வந்துடுவியே? கலா ரச னை கலையார்வம்னு எல்லாமே உனக்கு ஜாஸ்தியா தான் வாய்ச் சிருக்கு.

உனக்கேத்தபடி நல்ல மாப்பிள்ளையா வாய்க்கணுமே? அது தான் எனக்கு ரொம்ப கவலையா இருக்கு.. பக்கத்து கோவிலுக்கு தினமும் கார்த்தால போயி விளக்கேத்திட்டு வாம்மா.. தொடர்ந்து ஒரு மாசத்துக்கு விளக்கேத்தினா நல்ல பலன் கிடைக்கும். செய்

றியா கங்கா?''

''நாளைக்கே ஆரம்பிச்சுடறேன். போதுமா?''

''என் ராஜாத்தி! அடுத்த மாதத்திலிருந்து வேலைக்குப்போகப் போறே நாளைக்கு இருந்து விளக்கேத்த ஆரம்பிச்சுடு. எல்லாம் நல்ல படியா நடக்கும்''

அம்மாவின் விருப்பத்திற்கிணங்க விளக்கேற்றி வந்தாள். இன்று முப்பதாவது நாள்.

செம்பருத்தி பூக்களையும், பவள மல்லி பூக்களையும், பன்னீர் புஷ்பங்களையும் இருவாட்சி மலர்களையும் சம்பங்கி பூக்களையும் மூங்கில் கூடை நிறைய பறித்துப் போட்டுக் கொண்டு தோட்டத்து வேலியோரமாய் வந்து நின்றாள் கங்கா.

குன்றத்தூர் கோவில் கோபுரம் பளிச்சென்று தெரிந்தது. அதையும் தாண்டி தூரத்தில் திருநீர்மலைக்கோவிலின் கோபுரம் மங்கலாய் அவுட் லைன் போல் தெரிந்ததை ஊன்றி கவனித்த கங்கா.. சில கணங்கள் விழிகளை மூடி மனதுக்குள் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

அவசரமாய் வீட்டிற்குள் புகுந்தாள்.

இட்லிப்பானையை அடுப்பிலேற்றிக் கொண்டிருந்தாள் பர்வதம்.

''அம்மா! சாம்பாரும், தக்காளி சட்னியும் செய்து வச்சுட்டு நான் கோவிலுக்கு கிளம்பறேன்..''

மூங்கில் கூடையை கூடத்தில் சாமி மாடத்தின் கீழே வைத்து விட்டு வந்த மகளை ஏறிட்டாள் பர்வதம்.

''நீ முதல்லே கோவிலுக்கு கிளம்பற வழியைப் பாரு! சாம்பாரையும் சட்னியையும் நான் செஞ்சுக்கிறேன் கங்கா''

''இல்லம்மா நீ தனியாவே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்துட்டு இருக்கியே?''

''இதெல்லாம் ஒரு வேலையா? முப்பது நாள் ஆகப்போகுது. இன்னிக்கு மேகமூட்டமா வேற இருக்கு. இதுநாள் வரைக்கும் தங்கு தடை இல்லாம தொடர்ந்து விளக்கேத்திட்டு வந்துட்டே... இன்னிக்கும் ஏத்திட்டு வந்துடு... குடையை எடுத்துட்டுப்போம்மா...

இன்னிக்கு கடைசி நாளுங்கிறதால... அர்ச்சனை பண்ணிட்டு வந்துடு.. அப்பாடா! இன்னும் ரெண்டொரு நாள்லே நீ வேலைக்குப்போக ஆரம்பிச்சுடுவே அதுக்குள்ளே இந்த வேண்டுதலை எந்த வித விக்னமும் இல்லாம முடிச்சுட்டே... இதுவே நல்ல சகுனம் தான்.. மசமசன்னு நிக்காம, வேண்டியதை எடுத்துக்கிட்டு சீக்கிரமா கோவிலுக்குப் போயிட்டு வாம்மா..''

அம்மா உரிமையுடன் அதட்டினாள்.



''இ.. இதோ கிளம்பிட்டேன்..''

நெய்பாட்டில், திரி, தீப்பெட்டி, தேங்காய், பழம் இத்யாதிகளை அவசரமாக எடுத்து வைத்துக் கொண்டு கிளம்பினாள் கங்கா.

குன்றத்தூர் மலைக்கோவில்!

படிக்கட்டுகளில் புள்ளிமானைப்போல் தாவி ஏறினாள் கங்கா. மழையைப் பொழிந்து விடுவேன்' என்று கருமேகங்கள் உறுமலாய் சொல்லிக் கொண்டிருந்தன.

காற்றில் ஈரப்பதம் மிகுந்திருந்தது.

வழக்கம் போல்.. கோவில் வாசலை நெருங்குவதற்கு முன் சட்டென்று நின்று கோபுரத்தை அண்ணாந்து பார்த்தாள்.

கோபுர மாடங்களில் புறாக்களும், பஞ்சவர்ணக்கிளிகளும் கலவையாய் ஒற்றுமையாய் அமர்ந்து சிறகுகளை சடசடத்தன. அந்த அழகை ஒரு கணம் நின்று நிதானித்து ரசித்து விட்டு கோவிலுக்குள் புகுந்தாள்.

விளக்கேற்றி அர்ச்சனை செய்து முடித்து திருப்தியாய் மனமுருக தரிசித்து விட்டு பிரகாரத்தை சுற்றி வந்தாள் கங்கா.

'அம்மாவின் விருப்பத்துக்கு இணங்க தொடர்ந்து விளக்கேற்றி முடித்து விட்டேன்'

ஒரு பெண்ணுக்கு பிறந்த வீடு நிரந்தரம் இல்லை அல்லவா? படித்து முடித்து விட்டேன். எனது விருப்பத்திற்கு ஏற்ப தற்காலிகமாக வேலைக்குச் சென்று வர வீட்டில் அனுமதி கிடைத்து இருக்கிறது.

வெளியூரிலிருந்தோ.. அல்லது தொலைதூரத்தில் வெளிநாட்டிலிருந்தோ மாப்பிள்ளை எனக்கு வாய்த்து விட்டால்...?

மாதக்கணக்கில் ஏன்? வருடக்கணக்கில் அம்மா, அப்பாவை நேரில் பார்க்க முடியாமல் போனில் குரலை மட்டுமே கேட்டுக் கொண்டு பாசத்தில் பரிதவிக்க என்னால் இயலுமா?

ஊகூம் என்னால் முடியவே முடியாது.

அக்கா துர்காவை கூப்பிடு தூரத்தில் மாங்காட்டில் தானே கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்?

அவளும் நினைத்த மாத்திரத்தில் சட்டென்று பிறந்ததிற்கு ஓடி வந்து விடுகிறாளே?

அவளைப்போலவே எனக்கும் புகுந்த வீடு கிட்டத்தில் வாய்க்க வேண்டுமே?

உள்ளூரிலிருந்தோ.. அக்கம் பக்கத்து ஊரிலிருந்தோ மாப்பிள்ளை வாய்த்து விட்டால் நன்றாக இருக்குமே?

அப்படிப்பட்ட மாப்பிள்ளை எனக்கு கிடைப்பாரா? கிடைத்து விட்டால் நான் அதிர்ஷ்டசாலிதான்!

இதென்ன? ஒருநாளும் இல்லாத திருநாளாய் இன்று எதிர்காலத்தைப் பற்றி வரப்போகும் கணவரைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேனே?

இது காலம் வரை..நெல் முனையளவு கூட இதைப்பற்றி எண்ணிப் பார்த்ததில்லையே?

இன்று மட்டும் ஏனிந்த நினைப்பு வருகிறது.

ஒருவேளை இன்று கடைசி நாளாய் விளக்கேற்றி வேண்டுதலை முடித்து இருக்கிறேனே?

அதனால் தான் இப்படியொரு எண்ணம்.. இதயத்தில் திடீரென்று உதித்துவிட்டது போலும்!

அப்படித்தான் இருக்க வேண்டும்,

யாருக்கு மாப்பிள்ளை யாரோ? அவர் எங்கே பிறந்திருக்கிறாரோ? என்று கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தன.

கொடிமரத்திற்கு அருகே விழுந்து கும்பிட்டு விட்டு மூங்கில் கூடையை எடுத்துக் கொண்டு வேகமாய் நடந்தாள்.

மழை பெய்வதற்குள் வீட்டுக்குப்போய் சேர்ந்து விட வேண்டும் என்ற அவசரம் அவளுக்கு..!

கோவில் வாசல்படியைத் தாண்டும் போது.. அவசரத்தில் கவனம் சிதறி கால் இடறியது.

கையிலிருந்த அர்ச்சனைக்கூடை எகிறி விழுந்தது.

தலை குப்புற விழப்போனவள்.. பயத்தில் விழிகளை மூடிக் கொண்டு வீலென்று அலறினாள்.




கங்காவை இருகரங்கள் சட்டென்று தாங்கின.

அர்ச்சனைக் கூடை பொத்தென்று கவிழ்ந்து விழுந்த சப்தம் கேட்டது.

அதிர்ச்சியில் அவளது மலர்மேனி கிடுகிடுவென்று நடுங்கியது. "நல்ல வேளை! பார்த்து கவனமா வந்திருக்கக்கூடாதா?" மென்மையான இதமான குரல் செவிகளை ஸ்பரிசித்ததும்.. சுதாரித்து படக்கென்று மூடிய விழிகளைத்திறந்தாள்.

மந்தகாசமான முகத்துடன் அவளை ஒரு குழந்தை போல் கரங்களில் தாங்கிய வண்ணம் கனிவாய் பார்த்துக் கொண்டிருந்தான் சிவகுரு.

சங்கோஜத்தில் சட்டென்று அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு.. மூன்றடிகள் பின்னே விலகி நடந்து நின்றாள்.

"சாரி! கொஞ்சம் கவனக்குறைவா இருந்துட்டேன். எனி ஹவ் தேங்க்யூ"



"சாரி தேங்க்யூ" இந்த ரெண்டு வார்த்தைகளும் சொல்றதுக்கு நான் என்ன வேத்து மனுஷனா கங்கா? வாசல்படி கிட்டே நான் வர்றதுக்கும் நீ வேகமாக வெளிப்பட்டதுக்கும் சரியா இருந்ததால என்னால உன்னை சட்டுன்னு கைத்தாங்கலா பிடிக்க முடிஞ்சது இல்லைன்னா இந்த செங்குத்தான படிக்கட்டுகள்லே தடதடன்னு கீழே வரைக்கும் உருண்டு விழுந்திருப்பே கடவுளே! நெனச்சாலே பகீர்னு இருக்கு..

இப்படி நடக்கும்னு தெரிஞ்சுதான் கடவுள் இன்னிக்குப் பார்த்து என்னை கோவிலுக்கு வாடான்னு உத்தரவு போட்டுட்டாரு போலிருக்கு. இன்னிக்கு கோவில்லே அர்ச்சனை பண்ணிட்டுத்தான் வரணும்னு வீட்டுலே அப்பாவும், அம்மாவும் கண்டிஷனா சொல்லிட்டாங்க. அவங்க வார்த்தையை என்னிக்கும் நான் தட்டினதே இல்ல அதான் கிளம்பி வந்தேன்.."

ஆஜானுபாகுவாய் உயரத்திற்கு ஏற்ற பருமனுடன் சிவந்த நிறத்துடன் இருந்த சிவகுரு மிகச்சாதாரண கண்ணாடி அணிந்திருந்தான் பட்டு வேஷ்டி சட்டையில் மாப்பிள்ளை போன்ற தோரணையில் நின்றிருந்ததைப் பார்த்த கங்கா தயக்கத்துடன் அவனை ஏறிட்டாள்.

"இ.. இன்னிக்கு என்ன விசேஷம்?"

இன்னிக்கு அப்படியொண்ணும் பெரிய விசேஷம் இல்ல இந்த தினத்துல பிறந்து இந்திய ஜனத்தொகையில ஒரு எண்ணிக்கையை நான் கூட்டியிருக்கேன். அவ்வளவு தான்.

"ஓ இன்னிக்கு உங்க பிறந்த நாளா? மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் தடே..."

முறுவலித்தாள் கங்கா.

"நன்றி கங்கா! நேத்தைக்கே அப்பா போன் பண்ணி சிறப்பு பூஜைக்கு ஏற்பாடு பண்ணிட்டாரு.. கொஞ்ச நேரம் வெயிட் பண்ணி பூஜையைப் பார்த்துட்டு பிரசாதத்தை வாங்கிட்டுப் போயேன் கங்கா!"

"இல்ல நான் இப்போ தான் அர்ச்சனை பண்ணிட்டு வர்றேன். மழை வேற வர்ற மாதிரி இருக்கு. நான் சீக்கிரமா வீட்டுக்குப் போகணும்"

அப்போது தான் ஞாபகம் வந்த தினுசில்.. அர்ச்சனை கூடையைத் தேடினாள்.

படிக்கட்டுகளில் உருண்டு போய் விட்டதா? என்று விழிகள் விரியத் தேடினாள்.

"என்ன தேடறே கங்கா? அர்ச்சனை கூடையா?"

"ஆமா.."

''இதோ.. என்னோட காலடியில கிடக்கு பாரு'' கூறியவன் குனிந்து கவிழ்ந்து கிடந்த அர்ச்சனை கூடையை எடுத்தான்.

தீபாராதனைக்குப்பின் குருக்கள் அவளுக்கு அளித்த அரை முழம் முல்லைச்சரமும் அரை மூடித்தேங்காயும் வாழைப்பழமும் அவளது பாதத்துக்கு அருகில் கிடந்தன. அவற்றை கூடையில் எடுத்துப் போட்டான்

''நல்ல வேளையா பிரசாதம் என் கால்லே படலை'' அர்ச்சனை கூடையைத் தொட்டு கும்பிட்டு விட்டு அவளிடம் நீட்டினான்.

''தேங்க் யூ! நா.. நா.. வரேன்..'' அவசரமாய் இறங்கினாள்.

''நில்லு கங்கா! மழையில நனையறதுன்னா.. உனக்கு ரொம்பவும் பிடிக்குமே? மூணு வருஷத்துக்கு முந்தி.. காலேஜ் பஸ்ஸை விட்டு நீ இறங்கினே.. அப்போ தூறல் போட்டுட்டு இருந்துச்சு. புத்தகங்கள் அடங்கின சிறு பேக்கை தோளிலே மாட்டிக்கிட்டு மழைத் துளிகளை முகத்துலே ஏந்திய படி நீ நிதானமா நடந்து போயிட்டிருந்தே.. தற்செயலா நான் கார்லே வந்தேன் ஞாபகமிருக்கா?''

'அட ஆமாம்!'

ஒரு கணம் நிதானித்து தன்னையும் அறியாமல் ஆமோதிப்பதாய் மெல்லத் தலையாட்டி அவனை ஏறிட்டாள் கங்கா.

அவள் தலையாட்டியதும் சிவகுருவின் முகத்தில் விளக்கு போட்டாற்போல் வெளிச்சம் பரவியது.

நினைவுகளின் மடிப்பில் பொக்கிஷமாய் புதைத்து வைத்திருந்த பழைய தருணங்களை இதமாய் வலிக்காமல் புரட்டிப் பார்ப்பவனைப்போல் அவனது முகத்தில் தனி விகசிப்பு!

அன்று கங்கா..

கருநீல வண்ணத்தில் சில்க் காட்டன் புடவை கட்டியிருந்தாள்.

ஒங்கி உயரமாக தாழம்பூ நிறத்துடன் இருந்தவளுக்கு அந்த கருநீல வண்ணம் புடவை எடுப்பாக பாந்தமாக பொருந்தியதை ரசித்த படி காரை விட்டு இறங்கி வேகமாக அவளருகே சென்றான் சிவகுரு.

''கங்கா! வா கார்லே ஏறு''

மூக்கிலிருந்து நழுவப்பார்த்த கண்ணாடியை ஆள்காட்டி விரலால் அழுத்தி விட்டுக் கொண்டு அவளை ஏறிட்டான்.

கங்கா பின்னால் திரும்பி சாலையோரமாய் நிறுத்தப்பட்டிருந்த காரை ஒருகணம் நோட்டமிட்டாள்.

''இ இல்ல பரவாயில்லை பக்கத்து சந்து வழியா புகுந்து போனா வீட்டுக்கு சீக்கிரமா போயிடுவேன்...''

அவள் தவிர்க்கப் பார்த்தாள்.

**அவன் விட**வில்லை



''நோ கங்கா! மழை வலுக்கிற மாதிரி இருக்கே?

எந்த வழியா போனாலும் வீட்டுக்குப் போறதுக்குள்ளே நீ நனைஞ்சுடுவே.. வா! தயங்காம கார்லே ஏறு! பிளீஸ்''

''உங்க அக்கறைக்கு நன்றி! உங்க கார்லே வர்றதுக்கு எனக்கு எந்த விதமான தயக்கமும் இல்ல.. உங்கப்பாவும் எங்கப்பாவும் பால்ய காலத்துலேர்ந்து சிநேகிதர்கள், இன்னிக்கு வரைக்கும் நகமும் சதையுமா இணை பிரியாம இருக்காங்க

நம்ம ரெண்டு குடும்பமுமே உறவுக்காரங்க மாதிரி தானே பழகிட்டிருக்கோம்?''

''அப்புறம் என்ன கங்கா? வந்து கார்லே ஏற வேண்டியது தானே''

முகத்தில் விழுந்த மழைத்துளிகளை மெல்லக்கையால் துடைத்த படி பேசினான் சிவகுரு

''ரொம்ப வற்புறுத்துறீங்களே? உண்மையை சொல்லட்டுமா? மழையில நனையறதுன்னா எனக்கு கொள்ளைப் பிரியம் போதுமா? நல்ல வாய்ப்பை நழுவவிடக்கூடாதுன்னு பார்க்கிறேன். பிளீஸ் புரிஞ்சுக்கோங்க..''

''ஓ புரியுது உன்னோட ரசனையை மதிக்கிறேன். மழையில நனைஞ்சா உடம்புக்கு ஏதாச்சும் வந்துடுமோங்கிற பயத்துல தான் நான் உன்னை வற்புறுத்தினேன்...''

''என்மேல நீங்க காட்டற கரிசனத்துக்கு நன்றி! நீங்க சொல்றதும் சரி தான்.. ஆனா மழைங்கிறது பூமிக்கு கிடைக்கிற வரமாச்சே?

மழையில்லேன்னா பூமியில்ல.. மழை வரணும்னு தவம் கிடக்கிறோம். வேண்டிக்கிறோம். அது அரிதாக பெய்யறப்போ ஓடிப்போய் ஒளிஞ்சுக்கிறோம். ஏனிந்த முரண்பாடு?ன்னு அடிக்கடி எனக்கு நானே கேட்டுப்பேன். மனுஷங்க தான் இப்படி இருக்கோம். பறவைகளும், மிருகங்களும் அப்படியில்ல...'' இதை மழைக்குருவிங்கிற தலைப்புல கவிஞர் எவ்ளோ அழகா எழுதியிருக்காரு தெரியுமா?

**காட்டு மழைக்குருவி - போர்த்தக்**
**கம்பளி ஏதுமில்லை**
**ஓட்டை வான் மறைக்க அதன்**
**உயரே கூரையில்லை**
**கூட்டை மறந்து விட்டுக்-குருவி**
**கும்மியடித்தது காண்**
**வானப்பெருவெளியில் -கொட்டும்**
**மழையில் குளித்தது காண்**

**கானக்கனவுகளில் - அது**
**கலந்து களித்தது காண்**
**சொட்டும் மழை சிந்தும் - அந்தச்**
**சுகத்தில் நனையாமல்**
**எட்டிப் போனவனை - அது**
**எண்ணி அழுதது காண்!**

கவிதை நல்லாயிருக்குல்ல? வீட்டுக்குப்போனா.. அம்மா கண்டிப்பா திட்டுவாங்க தான்.. 'இப்படி தொப்பலா நனைஞ்சுட்டு வந்திருக்கியே?ன்னு சத்தம் போடுவாங்க தான்.

திட்டு வாங்கினாலும் பரவாயில்லை.. மாமழையில நனையற பரம சுகத்தை இழக்கிறதுக்கு என் மனசு ஒப்பவே இல்ல''

''உன்னோட அலாதியான ரசனையை பாராட்டறேன். இதுக்கு மேல உன்னை வற்புறுத்தமாட்டேன். உன் ஆசைப்படியே நல்லா நனைஞ்சுக்கோ.. அதே சமயத்துல உன் உடம்பையும் பார்த்துக்கோ''

''தேங்க் யூ.. நா வரேன்...'' தலையாட்டி விட்டு பக்கத்து சந்தில் புகுந்து நடக்க ஆரம்பித்தாள்.

அவளது உருவம் மறையும் வரை அவளையே கண்கொட்டாமல் பார்த்து விட்டு தனது காரை நோக்கி நடந்தான் சிவகுரு.

''ஆச்சரியமா இருக்கா?''

கங்கா கேள்வி கேட்டதும்...நினைவுச்சங்கிலி பட்டென்று அறுபட சட்டென்று அவளை ஊன்றிப் பார்த்தான் சிவகுரு.

''இல்ல.. அன்னிக்கு அப்படி பேசினாளே? இன்னிக்கு மழை வர்றதுக்கு முன்னே விழுந்தடிச்சு வீட்டுக்கு ஓடப்பார்க்கிறாளேன்னு ஆச்சரியமா இருக்கா?''

''கண்டிப்பா''

''அதுக்கு காரணம் இருக்கு.மழையில நனையணும்னு கழுத்து மட்டும் ஆசை இருக்கு தான் மழையில நனைஞ்சுட்டா ஒவ்வொரு வாட்டியும் ஜலதோஷம் காய்ச்சல் வந்து ஒருவாரம் வரைக்கும் ஆளை ஆட்டிப்படைச்சுடுது. எனக்கும் அவஸ்தை. அம்மாவுக்கும் கஷ்டம்.. இது எல்லாத்தையும் விட.... இன்னும் ரெண்டே நாள்லே நான் ஆபீசுலே ஜாயின் பண்ணி ஆகணும், வேலை கிடைச்சுடுச்சு

மழையில நனைஞ்சு உடம்புக்கு முடியாம வந்து எடுத்த எடுப்பிலேயே லீவு போட்டா நல்லா இருக்காது இல்லையா? அதான்''

''வேலைக்குப்போகப் போறியா? கங்கிராட்ஸ்''

''தேங்க் யூ''

''ஓகே கங்கா.. மழை வர்றதுக்குள்ளே நீ வீட்டுக்குப் போயிடு.. நடேசன் மாமாவையும், அத்தையையும் விசாரிச்சதா சொல்லு...''

''கண்டிப்பா சொல்றேன்.. நா வரேன்''

மூங்கில் கூடையை பிடித்தபடி சேலைக் கொசுவத்தை லாவகமாக உயர்த்திப்பிடித்துக் கொண்டு படிகளில் வெகு வேகமாய் இறங்கிச் சென்றாள் கங்கா.

நல்ல காலமாய் அவள் வீட்டுக்கு வந்து சேரும் வரை மழை பெய்யவில்லை.

அர்ச்சனை கூடையை சாமி மடத்திற்கு கீழே வைப்பதற்கும் பலத்த காற்றுடன் கூடிய மழை தொடங்குவதற்கும் சரியாக இருந்தது.

''குடை எடுத்துட்டு போகலாமா?ன்னு யோசிச்சுட்டிருந்தேன். மழை பிடிக்கிறதுக்கு முன்னே நல்ல காலமா நீயே வந்துட்டே'' நிம்மதி பெருமூச்சு விட்டபடி அப்பா நடேசன் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தார்.

''அப்பா! கோவில் வாசல்லே வச்சு சிவகுருவைப் பார்த்தேன். அவருக்கு பிறந்த நாள் போலிருக்கு கோவில்லே விசேஷ பூஜைக்கு ஏற்பாடு பண்ணியிருப்பாங்க போல கொஞ்சம் வெயிட் பண்ணிபிரசாதம் வாங்கிட்டுப் போயேன்னு சொன்னாரு.. மழை பேய்ஞ்சுடும்னு பயந்து மறுத்துட்டு வந்துட்டேன். உங்களையும் அம்மாவையும் விசாரிச்சதா சொல்லச் சொன்னாரு''

பிரம்புக் கூடையிலிருந்த அரை மூடி தேங்காயை எடுத்து பிரிஜ்ஜில் வைத்த படி பேசிய மகளை ஆர்வமாய் ஏறிட்டார் நடேசன்

''சிவா தங்கமான புள்ளை! பெரியவங்களை மதிக்கத்தெரிஞ்சவன். இந்தக் காலத்துல பணிவும் பவ்யமுமா அடக்கமா இருக்கிற இளைஞனை நாம்ப பார்க்கிறது ரொம்ப அபூர்வம். அதுவும் சிவா பெரிய பணக்காரக்குடும்பத்துல பொறந்த புள்ளை மெத்தப்படிச்சவன். அவனோட பேச்சுல நடவடிக்கையில துளி கூட பந்தாவோ அலட்டலோ கர்வமோ தென்படாம நடந்துக்கிறானே? அதான் எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு.. எல்லாம் என் நண்பன் சுப்பிரமணியத்தோட வளர்ப்பு!''

''என்னதான் நல்ல படியா வளர்த்தாலும் சில பசங்க உருப்படாம போயிடறாங்க.. அதை நாம்ப கண்கூடா நிறைய வீடுகள்லே பார்த்திருக்கோம். சிவாவை தங்கமான புள்ளைன்னு சொன்னீங்க.. ஒரு சின்ன திருத்தம்! சிவாவை சொக்கத்தங்கம்னு தான் சொல்லணும் என்னை எங்க பார்த்தாலும் சரி.. சட்டுன்னு கிட்டக்க வந்து கை கூப்பி வணக்கம் தெரிவிப்பான்.

படிச்ச படிப்புக்கு ஏத்தபடி நல்ல வேலையா தேடிக்கிட்டு ஜம்முனு ஆபீசுக்கு போயிட்டு வர்றதை விட்டுட்டு பரம்பரை சொத்துக்களை நிர்வாகம் பண்ணிக்கிட்டு நஞ்சை புஞ்சை நிலங்கள்லே விவசாயம் பார்த்துக்கிட்டு இருக்கானே? இவனைப் போல ஒரு புள்ளை கிடைக்கிறதுக்கு சுப்பு அண்ணா ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும் அந்த புள்ளைக்குப் போய் இப்படியொரு நிலைமை வந்துடுச்சே?

வட்டில்களில் சூடான இட்லிகளை வைத்து தக்காளி சட்னியைப் பரிமாறியபடியே பேசினாள் பர்வதம்.

''நீ சொல்றது ரொம்ப சரிதான் பர்வதம்! வருஷா வருஷம் முதல் நாளே சிவாவோட பிறந்த நாளைப் பத்தி.. என்கிட்டே சுப்பு சொல்லிடுவானே? இந்த வாட்டி இந்தக்கவலையில தான் சொல்லாம விட்டுட்டான். பரவாயில்ல.. கங்கா மூலம் அது தெரிஞ்சு போச்சுல்ல...? டிபன் சாப்பிட்டுட்டு குடையை எடுத்துட்டுப் போயி சுப்பு வீட்டுக்குப் போயி சிவாவை மனசார வாழ்த்திட்டு வர்றேன் பூஜையை முடிச்சுட்டு நேரா சிவா வீட்டுக்கு தானே வருவான்.''

''சுப்பு அண்ணா நம்ம குடும்பத்துக்கு எவ்வளவோ உதவிகள் செஞ்சிருக்காரு. வியாபாரத்துல நஷ்டம் வந்து நீங்க கதி கலங்கிப் போய் நினைப்போ ஆபத்பாந்தவரா வந்து உதவி இருக்காரு. நம்ம துர்கா கல்யாணத்துக்கு நாம்ப கேட்காமலேயே உதவினாரு.. நாம் பளும் நிறைவா சீர் செஞ்சு அவளைக் காரை ஏத்தி விட்டோம். இந்த வீடு கடன்லே மூழ்க இருந்தப்போ அவரு தான் மீட்டு குடுத்திருக்காரு.

அந்த குடும்பத்துக்கு கால முச்சூடும் நாம்ப கடமைபட்டிருக்கோம். அதனால மறக்காம சிவாவுக்கு பிடிச்சதா ஏதாச்சும் பரிசுப்பொருள் வாங்கிட்டுப் போய் குடுங்க''

''சரி! வாங்கிட்டுப்போறேன். அவன் கிட்டே இல்லாத பொருளா? சிவா எந்தப்பொருளுக்கும் ஆசைப்படவே மாட்டான்னு அடிக்கடி சுப்பு சொல்லுவான். இன்னிக்கு ஒரு நாள் தான் அவனை பட்டு வேட்டி சட்டையில பார்க்க முடியும். அது கூட பெத்தவங்களோட விருப்பத்துக்காக தான்...

மத்த நாட்கள்லே ரொம்ப சாதாரண பேண்ட் சட்டை தான்... அதுவும் வீட்டுலே இருக்கும் போது சுப்பு மாதிரியே வேட்டி சட்டையில்ல போட்டுட்டு திரியறான்?..

வித்தியாசமான இளைஞன் தான்.! குசேலனுக்கு கிருஷ்ண பரமாத்மா கிடைச்ச மாதிரி.. எனக்கு சுப்பு கிடைச்சிருக்கான்.

சிவா அப்படியே குணத்துல சுப்புவை கொண்டு பிறந்துட்டான். அத்திப்பூத்தாப்போல தான் காரை உபயோகப்படுத்தறான். தினமும்



வயல்வெளிக்கு குடோனுக்கு, கம்பெனிக்கு போக வர்றதுக்கு அரதப் பழசான ஸ்கூட்டரைத் தானே பயன்படுத்தறான்.

ஒரு விபூதி பொட்டலத்தை பரிசா கொடுத்தாக்கூட.. அதைப் பெரிசா மதிச்சு பணிவா வாங்கி பாக்கெட்டுல போட்டுப்பானே? அவனோட நல்ல மனசுக்கு அவன் அமோகமா இருப்பான். பாரேன்''

இட்லியைப்பிட்டு தக்காளி சட்னியில் தோய்த்து அதை வாய்க்குள் மெல்லத்திணித்து மென்றபடியே.. விழிகள் விரிய அப்பா நடேசன் சிலாகித்துப் பேசுவதை செவி மடுத்துக்கொண்டிருந்தாள் கங்கா.

அப்பா சொல்வது வாஸ்தவம் தான்!

அயர்ன் கூட செய்யாத சட்டையை எடுத்து அணிந்து கொண்டு.. அவசரமாக சிவகுரு ஸ்கூட்டரில் அரக்கப்பரக்க பயணித்ததை.. இரண்டொரு முறை நேரில் கவனித்திருக்கிறாள்.

அப்போது எல்லாம் அவளுக்குள் ஆச்சரியம் தான் தலை தூக்கும்.

அதுவும் சிவகுரு சதா அணிந்திருக்கும் கண்ணாடியைப் பார்க்கும் போதெல்லாம்.

கொஞ்சம் பேன்ஸியா இல்லேன்னா காஸ்ட்லியா முகத்துக்கு எடுப்பா இருக்கிற மாதிரி கண்ணாடி வாங்கி அணியறதை விட்டுட்டு.. இவர் ஏன் இப்படி அம்மாஞ்சி மாதிரியான கண்ணாடியைப் போட்டுட்டிருக்காரு? இந்தக்கண்ணாடி இவரோட முக அழகையே கெடுக்கிற மாதிரி இருக்கே? என்று உள்ளூர ஆதங்கப்பட்டிருக்கிறாள்.

இன்று... நடேசனும், பர்வதமும் மாறி மாறி சிவகுருவை சிலாகித்துப் பாராட்டியதைக் கேட்டதும்.. சிவகுருவின் மீது ஒருவித பிரமிப்பு ஏற்பட்டது நிஜம்.

பளிங்கு போல் தெளிவாக இருந்த அவளது மனமாகிய குளத்தில் கல்லை விட்டெறிந்து குழப்புவதற்காக காத்திருந்த விதி... அவளது தோழி அகிலாவின் ரூபத்தில் வீட்டிற்குள் புகுந்தது.




''கங்கா!''

உரத்த குரலில் அழைத்தபடியே வாசலில் செருப்புகளைக் கழற்றிவிட்டு குடையை மடக்கி சுவர் ஓரமாக நிறுத்தி வைத்து விட்டு உள்ளே நுழைந்தாள் அகிலா.

''வா..அகிலா!... வா.. சேர்ந்து சாப்பிடலாம்'' கங்கா சட்டென்று எழுந்து அடுக்களைக்குள் சென்று ஒரே தட்டைக்கழுவி எடுத்துக் கொண்டு வந்தாள்.

''சாப்பிட்டு தான் வந்தேன்.. இருந்தாலும் நான் வேணாம்னு சொன்னா.. நீ கேட்கவா போறே? உன் திருப்திக்கு ஒரே ஒரு இட்லி

சாப்பிடறேன்.. தக்காளி சட்னியைப் பார்க்கும் போதே நாக்குல ஜலம் ஊறுதே...''

சப்பு கொட்டியபடி நடேசனின் அருகில் அமர்ந்தாள் அகிலா ''என்னம்மா அகிலா? இந்த மழையில குடையை எடுத்துக்கிட்டு புறப்பட்டு வந்திருக்கே? ஏதாவது முக்கிமான விஷயமா?''

தக்காளி சட்னியை பரிமாறியபடியே கேட்டாள் பர்வதம்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா.. காலையிலேர்ந்து கங்காவோட செல் போன் எண்ணுக்கு பல முறை டிரை பண்ணினேன்.. ஸ்விட்ச் ஆப்னு அறிவிப்பு தான் வந்துட்டே இருந்துச்சு.. பொழுதும் போகலை.. சரி.. நேர்லே இவளைப்பார்த்து பேசிட்டு போகலாம்னு புறப்பட்டு வந்துட்டேன்.. வேற ஒண்ணுமில்லை..''

அகிலா சிறு வயதிலிருந்து கங்காவுடன் ஒன்றாகப்படித்தவள் இருவரும் ஒரே கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்தவர்கள்.

கங்காவை விட்டு பிரியாமல் நிழல் போல் தொடர்ந்து வருபவள் அகிலா.

அகிலாவின் தந்தையார் கனகசபை, சுப்பிரமணியத்தின் கணக்குப்பிள்ளையாக பல வருட காலமாகப்பணியாற்றி வந்ததால் அவரது பங்களாவுக்கு அருகில் அவுட்ஹவுஸில் தங்கிக்கொள்வதற்கு அனுமதித்ததோடு,... அகிலாவையும் அகிலாவின் அண்ணனையும் தமது சொந்த செலவிலேயே படிக்க வைத்தார் சுப்பிரமணியம்.

தனது அப்பா அந்த பங்களாவில் கணக்குப்பிள்ளையாக வேலை செய்து வருவதால்... பங்களாவுக்குள் உரிமையுடன் சென்று வருவாள் அகிலா.

சுப்பிரமணியமும் அவரது மனைவி தவமணியும் தாயில்லா பெண்ணான அகிலாவிடம் பரிவும் பாசமும் கொண்டிருந்தார்கள்.

அந்த உரிமையில் சொந்தப்பெண்ணைப் போல் தவமணியின் அறையிலும் மற்ற அறைகளிலும் புகுந்து புறப்படுவாள் அகிலா.

''என்னம்மா அகிலா? சுப்புவோட புள்ளை சிவாவுக்கு இன்னிக்கு பிறந்தநாள் போலிருக்கு.. விருந்து அது இதுன்னு பங்களா தடபுடல் பட்டிருக்குமே? கூடமாட தவமணிக்கு உதவாம நீ இங்க புறப்பட்டு வந்துட்டியே? இதோ நான் இப்போ அங்க தான் போகப் போறேன்...''

தட்டில் கையைக் கழுவிக்கொண்டபடி பேசினார் நடேசன்.

''ஆ..மா.! என்ன பெரிய தடபுடல்? ஒரு மண்ணாங்கட்டியும் இல்லப்பா.. வழக்கம் போல வடை பாயசத்தோட சாப்பாடு அவ்ளோதான்! இந்தக்காலத்துல யாரராச்சும் இப்படி இருப்பாங்களா? கேக்வெட்டி மணக்க மணக்க பிரியாணி பார்ட்டின்னு நிறைய பேரைக் கூப்பிட்டு கிராண்டா கொண்டாடறதை விட்டுட்டு.. என்னவோ போங்க..மிஞ்சி மிஞ்சிப்போனா உங்களோடு சேர்ந்து அஞ்சு பேரு தான் வருவாங்க.. அப்படியொரு சிக்கனம்.!..''

சலிப்புடன் பேசியவளைக் கூர்ந்து பார்த்த நடேசன் '' சிக்கனம்னு சொல்லாதம்மா அது தப்பு'' என்றார்.

''தப்பு தான் அப்பா! கஞ்சப்பிசினாறின்னு நான் சொல்லி இருக்கணும்..'' கூறிவிட்டு 'க்ளுக்' என்று சிரித்தாள் அகிலா.'

''ஊகூம்.. உனக்கு உலகம் புரியல அகிலா! அதனால தான் இப்படி பேசறே.,, இது சிக்கனமோ கஞ்சத்தனமோ இல்ல.. சுப்புவுக்கும் சரி.. சிவாவுக்கும் சரி.. ஆர்ப்பாட்டம் ஆடம்பரம் பண்ணத்தெரியாது.. அலட்டல் படாடோபத்தை ரெண்டு பேருமே அறவே வெறுக்கிறாங்க.. அதான் உண்மை!

நீயும் எனக்கொரு மகள் மாதிரிதான். ஆனா சுப்புவைப் பத்தியோ சிவாவைப்பத்தியோ இளக்காரமா நீ பேசறதை நான் சகிச்சுக்க மாட்டான்.. என்கிட்டே மட்டுமில்ல. மத்தவங்க கிட்டேயும் நீ இப்படி பேசறது தப்பு! ஏன்னா... உங்கப்பா சுப்புவுக்கு இன்னமும் கணக்குப்பிள்ளையா வேலை பார்த்துட்டிருக்காரு.

சுப்புவோட தயவுலதான் நீயும் உங்கண்ணனும் படிப்பை முடிச்சிருக்கீங்க.. அந்த விசுவாசம் உங்கப்பா கனகசபையிடம் நிறைய இருக்கு, உனக்கும் அந்த நன்றி விசுவாசம் இருக்கணும் அதுதான் நல்லது...''

முகத்தைக் கடுமையாக்கிக்கொண்டு திட்டவட்டமாக கறாராகப் பேசிய நடேசனை ஏறிட்டுப் பார்க்கவே,.. அகிலாவுக்கு சங்கடமாக இருந்தது.

''மன்னிச்சுக்கோங்க அப்பா! நம்ம கங்காவோட வீடுதானேன்னு ஒரு உரிமையில நான் பாட்டுக்கு இப்படி பேசிட்டேன்.. நான் அப்படி சொல்லியிருக்கவே கூடாது. தப்பு தான்.. தயவு செஞ்சு இந்த விஷயத்தை...''

அவள் பேசி முடிக்கும் முன் கையமர்த்தினார் நடேசன்..

''இல்ல..இந்த விஷயம் சுப்புவோட காதுக்கு எட்டாது. நீ இப்படி பேசினது தெரிஞ்சா அவன் ரொம்பவே வருத்தப்படுவான். நான் எதுவும் சொல்லமாட்டேன்.. பயப்படாதே...! அந்த பங்களாவுல பெண் குழந்தை இல்ல.. சுப்புவும் தவமணியும் உன்னை வேலைக்காரனோட பொண்ணா நடத்தலை... உன் மேல தனி வாஞ்சையோட இருக்காங்க... அதுக்கு நீ கொடுத்து வச்சிருக்கணும்... அதை மட்டும் புரிஞ்சுக்கோ...''

''சரிங்கப்பா...இனிமே நான் இப்படி நடந்துக்க மாட்டேன்''

'' ஒரு அப்பா ஸ்தானத்துல இருந்து தான் நான் உன்னைக் கண்டிச்சிருக்கேன்.. தப்பா எடுத்துக்காதே...''

''இல்லப்பா..இல்ல..''

தனது நண்பனைப் பற்றிப் பேசியதும் சுரீர் என்று நடேசனுக்கு கோபம் வரும் என்றோ அவர் தாடை இறுக கண்டித்துப் பேசுவார் என்றோ... அகிலா எள்ளளவும் எதிர்பார்க்காததால் உள்ளுக்குள் விதிர் விதிர்த்து தான் போனாள்.

பணிவாய் பயந்து நயந்து அவள் பேசினாலும்.. உள்ளூர அவளுக்கு உலை கொதித்தது.

'ஏய் கிழவா! என்னை ஒரு வேலைக்காரனோட பொண்ணுன்னா சொல்லிக்காட்டறே.. வெளிப்பார்வைக்கு தான் உன் பொண்ணு கங்காவை என்னோட ஆருயிர் சிநேகிதின்னு சொல்லிட்டு திரியறேன்... ஆனா உள்ளூர இவளை என்னோட பரம விரோதியா ஜென்ம எதிரியா தான் நான் பார்க்கிறேன்.

எப்பவும் படிப்பில் இவதான் நம்பர் ஒன்! நான் எப்பவும் ரெண்டாவது ரேங்க் தான்..

நானும் தலைகீழா நிக்காத குறையா பல முயற்சி செஞ்சு பார்த்தும்.. இவளை என்னால முந்தவே முடியலையே?

எப்போ பார்த்தாலும் நான் இவகிட்டே தோத்துப்போயிட்டு தானே இருக்கேன்?

ஒரு நாளாவது நம்ம பிரண்டுக்கு விட்டுத்தருவோம்கிற எண்ணம் இவளுக்கு வந்திருக்குமா?

என்னோட டியரஸ்ட் பிரண்ட் நீ ஒருத்தி தான் அப்படின்னு இவ சொல்றதெல்லாம்... வெறும் வாய் வார்த்தை தானே?

எனக்கு விட்டுக்கொடுக்க இவளுக்கு மனசு வந்ததே இல்லையே? படிப்புல மட்டுமா? ஸ்கூல்லே காலேஜுல.. எங்க பார்த்தாலும் மதிப்பும் மரியாதையும் பாராட்டும் இவளுக்கு தான் கிடைக்குது. எல்லோருடைய மனசுலேயும் இவதான் சீக்கிரமா இடம் பிடிச்சுடறா..

அப்படி என்ன தான் முகராசியோ?

நானும் அழகி தானே? என் அழகுக்கு என்ன குறைச்சல்? கண்ணாடியில பார்த்தா மூக்கும் முழியுமா களையாதானே இருக்கேன்?

ஆனா... இவளுக்கு பக்கத்துல வந்து நின்னா.. இவளோட பேரழகுக்கு முன்னாடி.. என் அழகு எடுபட மாட்டேங்குதே?

அப்படியே டல்லடிச்சு ரொம்ப சுமாரா போயிடறேனே?

அது என்னமோ தெரியலை... இவளை எந்த விதத்திலாவது பழி வாங்கியே தீரணும்னு உள்ளூர வைராக்கியமா இருக்கேன்.

உள்ளுக்குள்ளே ஏற்கனவே திகு திகுவென்று தீயா எரிஞ்சுட்டு தான் இருந்துச்சு..



இதுல நீ வேற என்னைக் கண்டிச்சு பேசி அவமானப்படுத்திட்டே... எரியற நெருப்புல எண்ணெயை ஊத்திட்டே... நான் தான் எதிரி.. அவளோட வருங்கால வாழ்க்கையை சீரழிக்காம.. நான் ஓயப் போறது இல்ல...

வேலைக்காரனோட பொண்ணுன்னு பேசி, என்னை நீ வேதனைப்படுத்திட்டேயில்ல?

உன் பொண்ணை நான் கதற வைக்கிறேன் பாரு! அவளைப் பார்த்து பார்த்து நீ கதறப் போறே... கூடிய விரைவில் குடும்பத்தோட உட்கார்ந்து கதறத்தான் போறீங்க...,

உள்ளுக்குள் எரிமலையாய் குமுறினாள் அகிலா..

நடேசன் வீட்டை விட்டு வெளியேறிய போது.. மழை சற்று குறைந்திருந்தது.

சாப்பிட்டு முடித்ததும் அடுக்களைக்குள் பாத்திரங்களை எடுத்து வைத்துவிட்டு.. சாப்பிட்ட தட்டுக்களை தேய்த்துக் கழுவி வைத்துவிட்டு... ஈரக்கைகளை புடவை முந்தானையில் துடைத்தபடியே வந்தாள் கங்கா.

முகம் வாடிப்போய் அமர்ந்திருந்த தோழி அகிலாவைப் பார்க்கவே பாவமாய் இருந்தது.

''வா அகி! மாடியில என்னோட அறையில உட்கார்ந்து பேசலாம்...''

மாடியில் ஒரே ஒரு விஸ்தாரமான அறைதான்.. வலதுபுறத்திலிருந்த கதவைத்திறந்தால்.. விசாலமான வெட்ட வெளி.. நான்கு புறமும் மூங்கில் கழிகள் நடப்பட்டு துணிகள் காயப்போடுவதற்காக கயிறு கட்டப்பட்டிருந்தது.

மொட்டை மாடியின் சுற்றுச்சுவரில் தென்னங்கீற்றோலை ஒன்று கொஞ்சிப் புரண்டு கொண்டிருந்தது.

''அகி! எனக்கு ரொம்ப தர்ம சங்கடமா இருக்கு.. ஒரு பக்கம் அப்பா ஒரு பக்கம் என்னோட சிநேகிதி.. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை.. எதையும் மனசுல வச்சுக்காதே அகி! அப்பாவுக்கு சுப்பிரமணியம் மாமான்னா உயிர்! அவர் மேலேயும் அவரோட புள்ளை சிவகுரு மேலேயும் அலாதி பிரியமும் மரியாதையும் வச்சிருக்கிறவ.. அதனால தான் நீ அப்படி பேசினதும் அவர் சட்டென்று கோபப்பட்டு பேசிட்டாரு.. சாரி... வெரி சாரி!''

தயங்கி நிறுத்தினாள் கங்கா.

''சரி விடு, கங்கா! அவர் யாரு? நம்ம அப்பாதானே? நம்ம அப்பாவுக்கு நம்ம மேல உரிமையில்லையா என்ன? இதுக்குப் போய் சாரி கேட்கிறியே? நான் என்ன மூணாம் மனுஷியா?...''

''அப்புறம் என்னத்துக்கு முகத்தை உம்முனு வச்சிருக்கி

யாம்?''அவளது மோவாயைத் தடவியபடி கேட்டாள் கங்கா.

''அதான் இப்போ நார்மலாயிட்டேன் இல்ல? இன்னிக்கோட உன்னோட வேண்டுதல் நிறைவு பெறுது இல்லியா? கோவிலுக்கு போயிட்டு வந்துட்டியா?''

''உம்.. போயிட்டு வந்து தான் சாப்பிடவே உட்கார்ந்தேன் கோவில் வாசல்லே வச்சு.. சிவகுருவைப்பார்த்தேன்.. அந்த விஷயத்தை அப்பா கிட்ட சொன்னேனா? அப்பாவும் அம்மாவுமா சேர்ந்து சிலாகிச்சுப்போய் மாத்தி மாத்தி சிவாவுக்கு பாராட்டுப் பத்திரம் வாசிக்க ஆரம்பிச்சுட்டாங்க... அந்த நேரத்துல தான் நீ வந்தே...''

அகிலா கங்காவை ஊன்றிப் பார்த்தாள்.

''கங்கா! சிவாவைப்பத்தி நீ என்ன நினைக்கிறே?''

''படிச்சவர். பண்பான மனிதர். அதிலும் பணக்கார வீட்டு வாரிசு.. அந்தப்பகட்டும் படாடோபமும் இல்லாம ரொம்ப எளிமையா இருக்கிறாரே... இது பெரிய விஷயம் தானே? அதனால தானே அப்பாவும் அம்மாவும் உருகி உருகிப் பாராட்டறாங்க?''

''நீங்க எல்லோருமே எட்ட இருந்து சிவாவைப்பார்க்கிறீங்க நான் கிட்டக்க இருந்து பார்க்கிறவ.. எனக்கு தானே அந்த ஆளோட சுயரூபத்தைப் பத்தித்தெரியும்?''

கங்கா திடுக்கிட்டு தோழியை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவளதுவிழிகளை ஆழமாக ஊடுருவினாள்.

''அகி!நீ என்ன சொல்றே? சிவா நடிக்கிறாருன்னு சொல்றியா? அவரைப்பார்த்தா அப்படித்தெரியலையே? சரி.. அவரு எதுக்காக நடிக்கணும்? அதுக்கு என்ன அவசியம் இருக்கு ?''

''அப்படி நடிச்சிட்டு இருக்கிறதால தானே.. உங்களைப்போல எல்லோருமே அவரை 'நல்லவன்' 'உத்தமன்' 'மனிதகுலமாணிக்கம்'னு புகழ்ந்து பேசிட்டிருக்கீங்க...''

''நல்ல பேரை சம்பாதிக்கிறதுக்காக.. இயல்பான குணத்தை மறைச்சு இத்தனை வருஷமா நடிக்கிறாருன்னு சொல்றியே அகி? என்னால இதை நம்பவே முடியலை.. அகத்தின் அழகு முகத்துல தெரியும்னு சொல்வாங்க.. சிவாவோட முகத்தைப்பார்த்தா நடிக்கிற மாதிரியே தெரியலையே!''

''அதுதான் சிவாவோட டெக்னிக்! எல்லோருமே அவரை ஆணித்தனமா நல்லவர்னு நம்ப வச்சுட்டிருக்கிறாரே? கில்லாடி தான்! சிவா ஒரு பசுத்தோல் போர்த்திய புலி. அவரைப்பத்தி முழுசா தெரிஞ்சுக்கிட்டதால தான்..அவரோட ஒய்ப் கல்யாணமாகி ரெண்டே நாள்லே அவரை விட்டு ஓடியே போயிட்டா..''

''**என்னது?** சிவா மோசமானவருன்னு தெரிஞ்சதால தான்.,.. அவரோட ஒய்ப் போயிட்டாள்னு சொல்றியா?'' ஈனஸ்வரத்தில் கேட்டாள் கங்கா

அதுவரை அவளது மனதில் கோபுரமாய் உயர்ந்திருந்தான் சிவகுரு.. அகிலா சொன்னதைக்கேட்டதும் அவன் மீது வைத்திருந்த மதிப்பு மளமளவென்று மணல் கோபுரம் போல் இடிந்து சரிந்து தரை மட்டமானது நிஜம்




**ப**ட்டு வேஷ்டி சட்டையைக் களைந்துவிட்டு... வழக்கம் போல் வெகு சாதாரணமான எளிய உடையை **அணிந்து** கொண்டு வெளிப்பட்டான் சிவகுரு..

**பலாக்**காயை அரிந்து மணக்க மணக்க குருமா தயா**ரித்து விட்**டு.. சிவகுருவுக்கு மிகவும் பிடித்த அவல் கேசரியை கிண்டி முடித்து.. கைகளை அலம்பிக் கொண்டு அடுக்களையை விட்டு வந்த தவமணி, மகனை ஏற இறங்க நோட்டமிட்டாள்.

''சிவா.. என்னப்பா இது? பிறந்த நாளும் அதுவுமா.. இன்னிக்கு ஒருநாளாவது அந்தப்பட்டு வேஷ்டி சட்டையைப் போட்டுட்டு இருக்கக்கூடாதா? அதுக்குள்ளே கழட்டிட்டு இப்படி இந்தக்கோலத்துல வந்து நிக்கிறியேப்பா?'' தழுதழுத்தாள் தவமணி.

''உங்க ஆசைக்காக இவளோ நேரம் அதைத்தானே போட்டிட்டுருந்தேன்.. கோவிலுக்குப் போயிட்டு வந்துட்டேன். கசகசன்னு வேர்த்துட்டே இருக்கும்மா... அதான்.. இந்த டிரஸ்லே தான். ப்ரியா நிம்மதியா இருக்கு..''

முறுவலித்தான் சிவகுரு.

''இருந்தாலும் எங்க திருப்திக்காக..'' அவள் பேசி முடிக்கும் முன் குறுக்கிட்டான் சிவகுரு.

''எனக்குப்பிடிச்ச பலாக்காய்லே குருமா பண்ணியிருக்கியா அம்மா கமகமன்னு வாசனை ஊரையே தூக்குது.. மலை மேல இருக்கிற கோவிலுக்கு வேற போயிட்டு வந்திருக்கேன்.,. படி ஏறி இறங்கினதிலே பசி வயித்தைக் கிள்ள ஆரம்பிச்சிடுச்சு.. சீக்கிரமா இலையைப் போடறியா அம்மா?''

''இ... இதோ போடறேன் சிவா! நீ போய் உட்காரு...''

சிவாவின் சட்டைப்பையில் இருந்த செல் போன் சிணுங்கத்தொடங்கியது.

செல்போனை கையில் எடுத்தபடி வாசலை நோக்கி நடந்தான்.

''சிவா! முக்கியமான வேலை வந்திடுச்சுன்னு.. அப்படியே அவசரமா கிளம்பிடாதே.. நீ சாப்பிட்டுட்டு தான் போகணும்.. உன்னோட பிறந்த நாள்ன்னு பார்த்து பார்த்து என் கையாலே சமைச்சிருக்கேன்..''

''சரிம்மா.. சாப்பிடாம வெளியில நான் போக மாட்டேன். போதுமா?''

ஹாலிலிருந்த பிரமாண்டமான ஊஞ்சலில் அமர்ந்தபடி மனைவியையும் மகனையும் அதுவரை பார்த்துக்கொண்டிருந்த சுப்பிரமணியம் பெருமூச்சு விட்டபடி ஊஞ்சலை விட்டு இறங்கினார்.

மெதுவாக அடுக்களைக்குள் எட்டிப்பார்த்தார்.

வேலைக்காரியின் உதவியுடன் சமைத்த பாத்திரங்களை டைனிங் டேபிளில் பரத்திக்கொண்டிருந்த தவமணி கணவரை பார்த்ததும் வேலைக்காரியை சைகையால் வெளியேறச் சொன்னாள்.

வேலைக்காரி அந்த இடத்தை விட்டு அகன்றதும், தொண்டையை மெல்ல செருமிக்கொண்டு மனைவியை ஏறிட்டார்.

''என்னங்க! ஏதோ சொல்ல நினைக்கிறீங்க? தயங்கிறீங்க எதுவா இருந்தாலும் பளிச்சுன்னு வெளிப்படையா சொல்லிடுங்க அதான் நல்லது''

''சிவாவை, அவன் போக்குல கொஞ்ச காலத்துக்கு விட்டுப் பிடிக்கலாம் தவமணி! அவன் இஷ்டப்படி உடுத்திக்கட்டும் நடந்துகட்டும் சும்மா நச்நச்சுன்னு ஏதாச்சும் சொல்லிட்டே இருந்தா எப்படி? எரிச்சல் வந்து மறு கல்யாணத்துக்கு ஒத்துக்கவே மாட்டேன்னு.. ஒரே போடா போட்டுடப் போறான்.. வாழையடி வாழையா தழைக்க வேண்டிய வம்சம்... இப்படி ஒரேயடியா பட்டுப்போச்சேன்னு..நீயும் நானும் கதற வேண்டியது தான்..''

மெல்ல முணுமுணுத்தார் சுப்பிரமணியம்.

''அவன் போக்குலேயே விட்டோம்னா.. சிவன் போக்கு சித்தம் போக்குன்னு எதிலேயும் ஒட்டாம விலகிப் போயிடுவானோ? ன்னு பயமா இருக்கே?''

கண்களில் துளிர்த்த கண்ணீரை புடவைத்தலைப்பால் ஒற்றிக் கொண்டாள் தவமணி.

''நாம்ப கொஞ்சம் பொறுமையா தான் இருக்கணும் தவமணி! அவன் மனசுல பட்ட காயம் ஆற வேணாமா? எப்பேர்ப்பட்ட அவமானத்தை தேடி தந்துட்டுப் போயிருக்கா.. நம்ம வீட்டுக்கு விளக்கேத்த வந்தவ...? கொஞ்ச நாள் போகட்டும்.. பொறுமையா இரு!''

''காலா காலத்துல மறு கல்யாணத்தைப் பண்ணி வச்சுட்டோம்னா நம்ம கடமை முடிஞ்சுடும். எனக்கு இந்தக்கவலையில ராத்திரியெல்லாம் தூக்கம் வர மாட்டேங்குது.. சரியா சாப்பிட முடியலை.. நான் மட்டுமா? நீங்களும் சிவாவும் கூட இப்படித் தானே இருக்கீங்க.. கேட்கிறவங்களுக்கு என்னால பதில் சொல்ல முடியலைங்க..''



''கிழிச்ச கோட்டை நம்ம புள்ளை என்னிக்காவது தாண்டியிருக்கானா? அவனுக்கு இந்த அவமானம் யாரால வந்தது? இப்படிப் பட்ட பொண்ணைப்பார்த்து நாம்ப தானே..அவன் தலையில கட்டி வச்சோம்? போயும் போயும் இப்படிப்பட்ட ஓடுகாலியை எனக்கு கட்டி வச்சீங்களே அப்பான்னு.. என்னிக்காவது சிவா ஒரு வார்த்தை கேட்டிருப்பானா?

குற்ற உணர்வு தாங்காம நாம்பளே புலம்பினாலும்.. எல்லாம் என்னோட தலைவிதிப்பா.. விதிப்படி தானே எல்லாம் நடக்கும்? நீங்களோ அம்மாவோ இதுக்கு எப்படி காரணமாக முடியும்? இது நான் வாங்கி வந்த வரம் அப்பா!ன்னு நம்மளை அவன் ஆறுதல் படுத்தியிருக்கான்.. கேட்கிறவங்களுக்கு என்னத்தையாவது சொல்லி வைக்க வேண்டியது தான்.. இன்னொரு வாட்டி எந்தத்தப்பும் நடந்துடக்கூடாதுல்ல.. இவ நல்ல பொண்ணு சிவாவுக்கு ஏத்த மனைவியா இருப்பாள்னு.. அந்த ஓடுகாலியை அவசரமா பேசி முடிச்சதுக்கு.. வேண்டிய பலனை அனுபவிச்சுட்டு இருக்கோமே.. போதாதா?

ஒரு ஆம்பிளைக்கு இது எவ்ளோ பெரிய அவமானம் தெரியுமா? மனசுக்குள்ளே இவ்ளோ பெரிய கவலையைப் புதைச்சுக்கிட்டு நம்மகிட்டே எதையும் வெளிக்காட்டாம ஓடி ஓடி தன்னோட கடமையை செய்துட்டே இருக்கான். பத்து தலைமுறைக்கும் உட்கார்ந்து சாப்பிடற அளவுக்கு சொத்து பத்து இருந்தும்.. அதையெல்லாம் நினைச்சுப்பார்க்காம.. தன்னோட முயற்சியில உழைப்புல ஆறை நூறாக்கணும்னு பாடுபட்டிட்டிருக்கிறான். இவனை இவனோட அருமையை நல்லா உணர்ந்த பொண்ணா பார்த்து தான்.. நாம்ப மறுகல்யாணத்தைப் பண்ணி வைக்கணும் தவமணி! என்ன சொல்றே...?''

''நீங்க சொல்றதும் சரிதாங்க.. சிவாவோட அருமையை உணர்ந்த பொண்ணா தான் பார்க்கணும்.. அப்படின்னா.. நம்ம சொந்த பந்தத்துல தானே பார்க்க முடியும்?''

''சொந்தத்துலேயோ இல்லேன்னா.. பழகின வட்டாரத்திலேயோ பார்க்க வேண்டியது தான்.. கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கலாம். வலைவீசித் தேடணும்... சிவாவும் மனசு மாறி இறங்கி வரட்டும்... நல்லதே நடக்கும்னு நம்பிக்கை வைப்போம்.. நல்லதே நடக்கும்...''

''நாம்ப சின்ன ஈ எறும்புக்கு கூட துன்பம் குடுத்ததில்லே... சிவாவும் அப்படித்தான்.. நம்மளை விட ரொம்பவும் இளகின மனசு படைச்சவன்.. அவனுக்குப் போய் இப்படியொரு நிலைமை வரணுமா? ஊரே பார்த்து கொல்லுன்னு சிரிக்கிறாப்பல பெரிய தீராத

களங்கம் வந்து சேரணுமா? என்ன பாவம் செய்தான் நம்ம சிவா? கடவுளுக்கே இது அடுக்குமா?''

மூதுகு குலுங்க தேம்பினாள் தவமணி.

''உஷ்! தவமணி.. சிவா பசிக்குதுன்னு சொன்னான் இல்ல? அவன் சாப்பிட வர்ற நேரத்துல நீ இப்படி துக்கப்பட்டுட்டு இருந்தா... என்ன நினைப்பான்? அவனுக்கு இன்னிக்கு பிறந்த நாளு... அதை மறந்துடாதே.. நல்ல நாளும் அதுவுமா அவன் மனசு சங்கடப்பட்டா நல்லாயிருக்குமா?''

அதட்டினார் சுப்பிரமணியம்.

''அம்மா! இலை போட்டாச்சா? சாப்பிடலாமா?'' குரல் கொடுத்தபடியே உள்ளே நுழைந்தான் சிவகுரு.

சட்டென்று மறுபுறம் திரும்பி புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு.. அடுப்பங்கரை மேடை மீது வைத்திருந்த தோட்டத்து தலைவாழையிலையை எடுத்துக்கொண்டு வந்தாள் தவமணி!

''வாழையிலை போட்டு அம்மாவோட கை மணத்துல சாப்பிடறதே தனிருசி தான். ஆயிரம் சமையற்காரங்க வந்தாலும்... அம்மா சமைக்கிறதுலே உள்ள சுவைக்கு ஈடாகவே முடியாது. இல்லையாப்பா?''

''சரியா சொன்னே சிவா! அம்மா சமைக்கும் போது அன்பும், பாசமும் அக்கறையும், கவனமும், ஈடுபாடும் கொண்டு சமைக்கிறதாலே.. அந்த சமையல்லே ருசியும் அலாதி திருப்தியும் நிறைவும், உடம்புக்கும் மனசுக்கும் ஒரு தெம்பும் கிடைக்குது. சமையல்காரங்க ஒப்புக்கு கடமைக்கு ஏனோ தானோ?ன்னு அள்ளிப்போட்டு சமைப்பாங்க...'' புன்னகைத்தார் சுப்பிரமணியம்.

''உன்னோட பிறந்த நாளைப்பத்தி.. உன்னோட சிநேகிதர்களுக்கு கூட சொல்லாம விட்டுட்டியே சிவா? கோபுவும், மாதவனும் வரவே இல்லையே...?''

இலையில் பதார்த்தங்களைப் பரிமாறியபடியே கேட்டாள் தவமணி.

''கோபுவும்,, மாதவனும் காலையிலேயே போன்லே வாழ்த்து தெரிவிச்சுட்டாங்கம்மா.. அவங்க ரெண்டு பேரும் இப்போ ஊர்லே இல்ல.. போடி மெட்டுக்கு பக்கத்துல இருக்கிற 'நெடுங்குண்டம்' எஸ்டேட்டுக்குப் போயிருக்காங்க.. வர்றதுக்கு நாலுநாள் ஆகும்... பலாக்காய் குருமா ரொம்ப ரொம்ப ருசியா இருக்கும்மா...''

பச்சரிசி சாதத்தில் குருமாவைப் பிசைந்து ஆவலுடன் அவன் சாப்பிடுவதைக் கண்டு.. தவமணிக்குள் சிறு திருப்தி ஜனித்தது.

''எஸ்டேட்டுக்கு என்ன விஷயமா போயிருக்காங்க சிவா? ''



''இதென்னம்மா கேள்வி? அவங்க ரெண்டு பேர் சுபாவத்தைப் பத்திதான்.. உங்களுக்கே தெரியுமே? சும்மா ஜாலியா சுத்தி பார்த்துட்டு என்ஜாய் பண்ணிட்டு வரலாம்னு கிளம்பியிருக்காங்க.. மூணு மாசத்துக்கு ஒரு வாட்டி இப் படி தான்.. அம்மா கெஜம், 'மாஞ்சோலை எஸ்டேட்' ' வால்பாறை எஸ்டேட்' மூணாறுக்குப் பக்கத்துல தேவிகுளம் எஸ்டேட், வெள்ளிங்கிரி எஸ்டேட்டுன்னு எங்கேயாச்சும் போய் நிம்மதியா அஞ்சாறு நாள் தங்கிட்டு வந்துடறாங்க...

இந்த மாதிரி போயிட்டு வந்தா.. மனசுக்கும் உடம்புக்கும் சார்ஜ் ஏத்திக்கிட்ட மாதிரி புத்துணர்வா இருக்காம்.. என்னைக்கூட ஒவ்வொரு வாட்டியும் வற்புறுத்துவாங்க.. நான்தான் மறந்துடுவேன்.. '' பேசிவிட்டு அவசரமாய் அவன் தண்ணீரை குடித்த போது.. புரையேறி விட்டது. தவமணி பதறிப்போய் மகனின் உச்சந்தலையில் ரெண்டு தட்டு தட்டினாள்.

''பார்த்து சிவா! மெல்ல..'' புரையேறியதில் மகனின் கண்களில் கண்ணீர் ஜனித்ததைப் பார்த்துவிட்டு.. சோகமாய் அருகில் அமர்ந்தாள்.

''ஏன் சிவா? நீ ஏன் மறுக்கிறே? அவங்களை மாதிரி நீயும் ஏன் ஜாலியா இருக்க மாட்டேங்கிறே? நமக்கு என்ன காசு பணத்துக்கு குறைச்சலா? இத்தனைக்கும் கோபுவும் மாதவனும் நடுத்தர வர்க்கம் தான்.. இவனுங்க சம்பாத்தியத்தை தான்.. குடும்பமே நம்பியிருக்கு.. அப்படியிருந்தும் இந்தப்பசங்க எப்படி சந்தோஷமா இருக்காங்க பாரேன்..''

''அவனுங்க கிட்டே எனக்குப் பிடிக்காத சமாச்சாரமே இது தான்.. கடமையை உதறிட்டு அப்படி என்னம்மா அஞ்சாறு நாளைக்கு சந்தோஷம் வேண்டிக்கிடக்காம்?''

''சந்தோஷம்கிறது என்னம்மா? அது நம்ம மனசுல இருக்கு.. குடும்பத்தை கடமையை மறந்துட்டு.. எங்கேயோ தூரமா இயற்கை சூழல்லே போய் தங்கினா தான் ஜாலி கிடைக்குமா? சந்தோஷம்கிறது நமக்குள்ளேயே இருக்கு... கடமையை ஒருவித ரசனையோட செய்யணும்.. அப்படி செய்தா சலிப்பே வராதும்மா.. சலிப்பு வந்தா தானே மனசுக்கு சந்தோஷம் தேவைப்படும்? அந்த சந்தோஷத்துக்காக எங்கேயாவது போகத்தோணும்?''

எனக்கு சலிப்பு தட்டவே இல்லைம்மா.. எனக்கு என் கடமை தான் முக்கியம்.. அலாதி திருப்தியோட நம்ம கடமையை செய்து முடிக்கிற போதோ.. ஒரு புத்துணர்வும், தெம்பும் எனக்கு கிடைச்சுடுதோ? சார்ஜ் தன்னாலேயே உடம்புலே ஏறிடுதே? அப்புறம் நான் என்னத்துக்கு அந்த முட்டாள்கள் மாதிரி எஸ்டேட்டைத் தேடி

போகணும்? பணமும் விரயம்.. நேரமும் விரயம்...''

''ரொம்ப சரியா சொன்னே சிவா!'' என்ற குரலை கேட்டு.. மூவரும் திகைத்துப்போய் திரும்பிப்பார்த்தனர்.

பூரிப்புடனும் நின்று கொண்டிருந்தார் நடேசன்.

## 5

''அடடே வாங்க மாமா!'' எழுந்து நின்று கைகளைக் கூப்பினான் சிவகுரு.

''நீ பேசினதைக் கேட்டுட்டு அப்படியே எனக்கு கை தட்டணும் போல இருக்கு சிவா! கடமையை கண்ணாக நெனக்கிற இளைஞன் நீ.. இந்தக்காலத்து இளைஞர்கள் கடமையை ஏதோ கடனேன்னு தானே செய்றாங்க? பணத்தை ஜாலிக்காக தண்ணியா செலவு பண்றப்போ... எதைப்பத்தியும் சிந்திக்கவே மாட்டேங்கிறாங்க... பொன்னான நேரத்தை வீணாக்கி பணத்தையும் விரயமாக்கி உடம்பையும் மனசையும் கெடுத்துக்கிட்டு குட்டிச்சுவரா போறாங்க...!

அந்த மாதிரி இளைஞர்கள் மத்தியில நீயொரு கலங்கரை விளக்கமா உயர்ந்து நிக்கிறே சிவா! உன்னோட குணத்துக்கும் பண்புக்கும் மரியாதைக்கும் நீ அமோகமா இருப்பே.. பிறந்தநாள் வாழ்த்துக்கள்! உனக்கு ஏதாச்சும் பரிசு வாங்கிட்டுப் போங்கன்னு.. பர்வதம் சொன்னா.. தெரு முனைவரைக்கும் நானும் வந்துட்டேன்...''

''என்ன மாமா நீங்க? பரிசு என்னத்துக்கு மாமா? நெறஞ்ச மனசோட வாழ்த்தறீங்களே? இது எனக்கு கோடிக்கு சமானம்..'' இடைமறித்துப் பேசினான் சிவகுரு..

ஒரு கணம் நெகிழ்ந்து போய் அவனை ஏற இறங்கப் பார்த்தார் நடேசன்.

''அதான்..நீ இப்படி சொல்வேன்னு தெரிஞ்சுதான்.. நான் திரும்பவும் வீட்டுக்குப் போனேன்.. சிவா பரிசுப்பொருள் எதையும் விரும்ப மாட்டான். அதனால முந்தாநேத்து கங்கா நம்ம தோட்டத்துல காய்ச்ச கடாரங்காய்லே காரசாரமா ஊறுகாய் போட்டு வச்சாளே... அதை எடுத்துட்டு வா' ன்னு சொல்லி.. இந்த கடாரங்காய் ஊறுகாயை எடுத்துட்டு வந்துட்டேன்..'' பேசியபடி சம்புடத்தை டைனிங் டேபிள் மீது வைத்தார் நடேசன்.

''பரவாயில்லையே? கங்கா படிப்புல தான் கெட்டிக்காரின்னு நெனச்சேன்.. ஊறுகாய் போடற அளவுக்கு சமையல்லே கூட கெட்டிக்காரியா இருப்பாள்னு.. எனக்கு தெரியாம போச்சே?'' தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு அடக்கி விழுங்கினான் சிவகுரு.

''கடாரங்காய் ஊறுகாய்னா.. சிவாவுக்கு ரொம்பப்பிடிக்கும்.. நீங்க இதைக்கொண்டு வந்தது நல்லதா போச்சு..'' சிரித்தபடியே சம்புடத்தைத் திறந்து, கடாரங்காய் துண்டை எடுத்து சிவகுருவின் இலையில் வைத்தாள் தவமணி.

கங்காவின் பெயரைக் கேட்டதும் சிவாவின் மனதிற்குள் வண்ணத்துப்பூச்சி ஓசையின்றி படபடத்தது.

கடாரங்காய் ஊறுகாயைப்பார்த்ததுமே... நாக்கில் ஜிவ்வென்று ஜலம் ஊறியது.

இலையில் வைக்கப்பட்ட ஊறுகாய் துண்டை எடுத்து ... படக்கென்று வாயில் போட்டுக் கொண்டான்.

''ஆஹா.. என்ன சுவை! என்ன மணம்?''

சமையலில் கங்கா இவ்வளவு கெட்டிக்காரியாக இருக்கிறாளே? சமைத்த கைக்கு வைர மோதிரம் தான் போட வேண்டும் என்று மனதாரப்பாராட்ட வேண்டும் போலிருந்தது.

''ஊறுகாய் எப்படி சிவா இருக்கு? கங்கா பக்குவமா போட்டிருக்காளா?'' முறுவலித்தபடி எதிரே அமர்ந்து கொண்டார் நடேசன்.

''அபாரமா இருக்கு மாமா! பெருங்காய வாசமும் வெந்தய மணமும் ஆளைத்தூக்குது..கடுகுப்பொடியை தூக்கலா போட்டு காரசாரமா பண்ணியிருக்கா.. கரண்டியால அள்ளிப்போட்டுக்கிட்டு சாதத்துல பிசைஞ்சு சாப்பிடலாம் போல இருக்கு... ருசியா சமைக்கிறதுங்கிறது ஒரு கலை இல்லையா? நான் கங்காவுக்கு பாராட்டு தெரிவிச்சேன்னு சொல்லுங்க மாமா''

''கண்டிப்பா.. சொல்றேன் சிவா..! '' என்ற நடேசன் சுப்பிரமணியத்தின் கையைப்பிடித்துக்கொண்டார்.

''உன் மேல எனக்கு வருத்தம் சுப்பு! சிவாவோட பிறந்த நாளைப்பத்தி ஏன் என்கிட்டே நீ சொல்லவே இல்ல? கங்கா வந்து சொன்னதுக்கு அப்புறம் தான்.. எனக்கு விஷயமே தெரியும்... அவ கோவில்லே வச்சு சிவாவைப்பார்த்திருக்கா..''

நண்பர்கள் இருவரும் மும்முரமாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

சிவா அவசரமாக சாப்பிட்டு முடித்துவிட்டு '' என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க மாமா! வேலை இருக்கு. வெளியில அவசரமா போக வேண்டியிருக்கு.. தப்பா எடுத்துக்காதீங்க..'' என்று நடேசனின் பாதங்களைத்தொட்டுப் பணிந்து விட்டு வேகமாய் கிளம்பி விட்டான்.

வானம் இலேசாக பன்னீர் தெளித்துக் கொண்டு தான் இருந்தது.

போர்டிகோவிலிருந்து காரை வெளியில் எடுப்பதற்கு சிவகுரு

வுக்கு மனம் ஒப்பவில்லை.

தனது பழைய ஸ்கூட்டரை மெல்லத்தள்ளிக் கொண்டு கேட்டை தாண்டும் போது... பங்களாவுக்குள் இருந்து அப்பா சுப்பிரமணியத்தின் குரல் கேட்டது.

''சிவா! கார்லே போயிட்டு வந்துடுப்பா... மழைக்காலமா இருக்கு.. ஸ்கூட்டர்லே போகாதே...''

''மழை நின்னுடுச்சுப்பா... கவலைப்படாதீங்கப்பா... நா வரேன்...''

குரல் உயர்த்தி பதிலளித்து விட்டு கிளம்பினான் சிவகுரு.

முதலில் குடோனுக்கும், கம்பெனிக்கும் சென்று ஒரு பார்வை பார்த்து விட்டு... போரூர் நெடுஞ்சாலையில் உள்ள தனது அலுவலகத்திற்கு வந்தான்.

பைல்களை எல்லாம் சரிபார்த்து கையெழுத்து இட்டு விட்டு... விரல்களை நெட்டி முறித்து விட்டு சுழல் நாற்காலியில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

மனக் கண்ணில் அன்றலர்ந்த மலர்களுக்கு இடையில் பெரிய தாமரை மொட்டாய் வந்து நின்றாள் கங்கா.

பூவாய் சிரிப்பை உதிர்த்தாள். அவளது மோகன உருவைக் கண்டதும்... மனதுக்குள் மத்தாப்பூ சிதறியது.

''கங்.. கா! மனசு முழுக்க நீ தான் இருக்கே... கடந்த நாலு வருஷத்துக்கும் மேலாக மனசுல நீ தான் குடி இருக்கே.

இதை நான் வெளியில சொல்ல முடியலை.

அப்பாவும், அம்மாவும் எனக்கு வேற பொண்ணைப் பார்த்த போது... நான் உள்ளுக்குள்ளே புழுவா துடிச்சேன்.

வெளியில இதை நான் சொல்லவும் முடியலை. சொல்லாம இருக்கவும் முடியலை.

அந்த சமயத்துல நீ இன்னமும் உன்னோட படிப்பை முடிக்கவும் இல்ல... எல்லாத்துக்கும் மேல உன்னோட மனசுல நான் இருக்கிறதாகவும் தெரியல...

எந்த தைரியத்துல.. என் மனசுல இருக்கிற ஆசையை நான் வெளியில சொல்ல முடியும்?

அப்பா அம்மா கிழிச்ச கோட்டை... இது வரைக்கும் நான் தாண்டினதே இல்ல... அவங்க பார்த்துட்டு வந்த பொண்ணை... வேண்டாம்னு நிராகரிக்கிற துணிவு என் கிட்ட இல்ல...

ஆசையை வெளியில சொன்னா... அது நிறைவேறும்கிற நம்பிக்கை எனக்கு முதல்லே வரல்லே...

அப்பாவும் நடேசன் மாமாவும் நகமும் சதையுமா இருக்கிற நெருங்கின நண்பர்கள்...



அவர்களுக்கு இப்படியொரு அபிப்பிராயம் இது வரைக்கும் ஏன் வரலை, நண்பர்கள் ரெண்டு பேரும் சம்பந்தம் செய்து உறவுக்காரங்களா மாறணும்கிற எண்ணமே.. அவங்களுக்குள்ளே தோணலை...

கடைசி வரைக்கும் இந்த நல்ல நட்புலே எந்த விரிசலும் இல்லாம.. தொடரணும்கிறது தான் அவங்க நோக்கமே...!

நான் மனசுல இருக்கிற ஒரு தலைக்காதலை வெளியில சொல்லப்போக... அதனால நண்பர்களுக்கு மத்தியில் மனக்கசப்பு ஏற்பட்டுருச்சுன்னா.. என்ன பண்றது? இந்த பயத்துல தான்... என் காதலை மனசுலேயே போட்டுப் புதைச்சு வச்சுட்டேன்.

அப்பாவும் அம்மாவும் என் மேல உயிரையே வச்சிருக்காங்க தான்...

என்னோட விருப்பத்துக்கு அவங்க முட்டுக்கட்டை போட மாட்டாங்க தான்..

தனக்கான துணையை அவனே தேர்ந்தெடுத்துட்டானே?

கடைசியில இவனும் மத்த பசங்க மாதிரி காதல் கத்திரிக்காய்னு மனசை அலை பாய விட்டிருக்கானே?

இந்த வீட்டுக்கு விளக்கேத்த வேண்டிய மருமகளை தேர்வு செய்யற உரிமையை.. நமக்கு தராம போயிட்டானே?

தானே முடிவு எடுத்துட்டானே? நமக்கு இவன் தர்ற மரியாதை இவ்வளவு தானா? ன்னு..... அவங்க மனசளவில் நொறுங்கிப் போயிடுங்களேங்கிற பயம்...

என்னைப் பேச விடாம தடுத்துடுச்சு...

அவங்களும் பொண்ணைப் பார்த்துட்டு பிடிச்சுப்போயி...

பொண்ணு தலையில பூவை வச்சுட்டு வந்துட்டாங்க...

பொண்ணை நாங்க எங்க வீட்டுக்கு மருமகளாக்கிக்கிறோம்னு வாக்கு குடுத்துட்டு வந்துட்டாங்க... இதுக்கு அப்புறம் நான் உண்மையை சொல்ல முடியாமலே போயிடுச்சு.

குடுத்த வாக்கில் தவறிட்டோம்கிற குற்றவுணர்ச்சிக்கு... அவங்களை ஆளாக்க நான் விரும்பலை... அவங்களோட விருப்பப்படி நடக்கட்டும்னு மவுனமா இருந்துட்டேன்.

மனசுல உள்ள காதலை புதைச்சுட்டு... அவங்க கை காட்டின பொண்ணோட கழுத்துல நான் தாலி கட்டினேன்.

சத்தியமா சொல்றேன்.. என்னோட உணர்வுகள் எல்லாம் அப்பவே செத்து கிட்டத்தட்ட நான் ஒரு நடைப்பிணமாயிட்டேன்.

ஒப்புக்கு ஒரு வாழ்க்கையை வாழ நான் தயாராயிட்டேன். பெத்தவங்களோட மனசு கோணக் கூடாதுன்னு... என்னோட காதலை.. மறைச்சு... ஊமை கண்ட கனவு மாதிரி உள்ளுக்குள்ளே மருகிட்டு

கல்யாண மாப்பிள்ளையா நான் நின்னேன்.

விரும்பின பொண்ணை கைப்பிடிக்க முடியலை. சரி... நாம்ம நேசிச்ச.. உருகி உருகி மனசுல காதலிச்ச கங்கா.. எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்னு.. பகவான் கிட்டே வேண்டிக்கிட்டேன்.

இன்னொரு பெண்ணுக்கு கணவனாயிட்டேன். இனி மனசுல உன்னைப் பத்தின நெனப்பு வர்றது மகா தப்புன்னு தோணுச்சு. மனசைக் கல்லாக்கிக் கிட்டு உன் ஞாபகம் இனிமேல் வரவே கூடா துங்கிற வைராக்கியத்தை வரவழைச்சேன்.

பெத்தவங்க விருப்பத்துக்காக கல்யாணம் பண்ணிக்கிட்டாச்சு. மனசுக்கு பிடிக்கலைன்னாலும்.. யதார்த்தத்தைப் புரிஞ்சுக்கிட்டு வாழ்ந்து தானே ஆகணும்?

மனசை சிரமப்பட்டு தயார்படுத்திக்கிட்டேன். ஆனா... அப்ப டியொரு சம்பவம் நடக்கும்னு... நான் கொஞ்சம் கூட எதிர்பார்க் கவே இல்ல..

அடுத்தவங்க மனசைப் புரிஞ்சு நடந்துக்கணும். நம்மால இயன்ற அளவுக்கு அவங்களுக்கு நன்மையை செய்யணும். இதைத் தான் நானும் செய்தேன்.

என் மனசாட்சிக்கு கட்டுப்பட்டு ஒரு நல்ல காரியம் தான் செஞ் சேன். அது எனக்கு மட்டும் தெரிஞ்சா போதும்.

ஊர் உலகத்துக்கு இது தெரியணும்னு அவசியம் இல்லைன்னு... என் மனசுக்கு பட்டுச்சு.

அதான்.. உண்மையை மூடி மறைச்சுட்டேன். விளைவு..?

சிவாவோட புது மனைவி ரெண்டே நாள்லே... அவனை விட் டுட்டு ஓடிப் போயிட்டா.. இதுக்கு என்ன காரணம்னு உனக்குத் தெரியுமா?ன்னு.. பலரும் பலவிதமா காது மூக்கு வச்சு இட்டுக் கட்டிப் பேச ஆரம்பிச்சாங்க...

இது எங்க குடும்பத்துக்கு மிகப் பெரிய அவமானம்னு... என் னைப் பெத்தவங்க உள்ளூர வேதனைப்பட்டு மருகிட்டு இருக் காங்க...

ஆனா... எனக்கு அந்த வருத்தம் துளி கூட இல்ல கங்கா! ஏன்னா... நான் செய்தது நல்ல காரியமாச்சே? எப்போ அந்தப் பொண்ணு... என்னை விட்டு.. என் வாழ்க்கையை விட்டு நிரந்தரமா போயிட் டாளோ?

அப்பவே அந்தக் கல்யாண பந்தத்துலேர்ந்து எனக்கு விடுதலை கிடைச்சுடுச்சு இல்லையா? சுதந்திரமா மனசளவில தான்... உன்னை மறுபடியும் என்னோட காதல் தேவதையை வழக்கம் போல ஆரா தனை செய்துக்கிட்டிருக்கேன்.

இப்பவாவது என் மனசுல உள்ள காதலை.. அவங்க கிட்டே





சொல்லிடலாமா? சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டாங்க...

இந்த மட்டும் புள்ளை கல்யாணத்துக்கு ஒத்துக் கிட்டானே?ன்னு சந்தோஷம் தான் படுவாங்கன்னு... புரியுது.

அதே சமயம்... உள்ளூர பயமாவும் இருக்கு. இந்தக் காலத்துப் பொண்ணு நீ... என்னை... அதுவும் எனக்கு ரெண்டாம் தாரமா வாழ்க்கைப் படறதுக்கு சம்மதிப்பியா?

நடேசன் மாமாவுக்கு என் மேல தனிப் பிரியம் தான்... இருந்தாலும் தன் பொண்ணை இரண்டாம் தாரமா கட்டிக்குடுக்க சம்மதிப்பாரா?ன்னு தெரியலையே..

முகம் சுளிச்சு நீங்க ரெண்டு பேருமே இதுக்கு மறுப்பு தெரிவிச்சு ட்டா.. அதை என்னால தாங்க முடியாதே?

ஆனா... ஒண்ணு மட்டும் நிச்சயம் கங்கா! உன்னைத் தவிர இனி வேற எந்தப் பெண்ணுக்கும் என் வாழ்க்கையில நான் இடம் தர மாட்டேன். இது சத்தியம்...!

கடவுள் புண்ணியத்துல.. எனக்கும் அதிர்ஷ்டம் இருந்து.. நீ எனக்கு கிடைச்சா... நான் ரொம்ப ரொம்ப சந்தோஷப்படுவேன். இல்லேன்னா.. கால முச்சூடும் என் இதயத்துல சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிற காதல் தேவதையை ஆராதனை செய்துக் கிட்டே.. என் வாழ்நாளை நான் கடத்திடுவேன்.

என் பிறந்த நாளும் அதுவுமா உன்னை கோவில்லே எதேச்சையா நான் சந்திச்சேன்.அதுவும் எதிர்பார்க்காத தருணத்துல.. மலர்க்கொடி போல் இருக்கிற உன்னைக் கீழே விழாம தாங்கிப் பிடிச்சேன்.

அந்த ஒரு கணத்தை... என் வாழ்நாள்லே நான் மறக்கவே முடியாது.

அந்தப் பொன்னான தருணம்... திரும்பத் திரும்ப என் மனக் கண்ணுல வந்து வந்து போய்... என்னை சிலிர்க்க வைக்குது.

அதை.. என் வாழ்க்கையிலேயே.. ரொம்ப சந்தோஷப் பட்ட தருணமா.. நான் நெனக்கிறேன் கங்கா!

நீ எனக்கு கிடைப்பியா? உன்னைக் கைப் பிடிக்கிற பாக்கியம் எனக்கு கிடைக்குமா?ன்னு... எனக்கு தெரியலை.

இப்பவும் என் மனசுல இருக்கிறதை... பெரியவங்க கிட்டே நான் சொல்லப் போறதில்ல...

நான் உன்னை ஆத்மார்த்தமா நேசிக்கிறேன். இல்லையா? உண்மையான காதலுக்கு ஒரு சக்தி இருக்கும்னு.. நான் புக்ஸ்லே வாசிச்சிருக்கேன்.

என் காதலுக்கும் அப்படியொரு சக்தி இருந்தா.. அது நம்மை சேர்த்து வைக்கட்டுமே..!

**நம்பிக்கை** தானே வாழ்க்கை? எனக்கு நம்பிக்கை இருக்கு. இந்த



ஆத்மார்த்தமான நேசம்... தோல்வியில முடியாது. கண்டிப்பா ஜெயிக்கும்னு.. நா நம்பறேன்.

என்னைப் பெத்தவங்க கிட்டேயோ... என்னோட நண்பர்கள் கோபி, மாதவன் கிட்டேயோ.. நான் மனம் திறந்து பேசினது கிடையாது.

உன்கிட்டே மட்டும் தான்.... மனசு விட்டுப் பேசறதா நெனச்சு.. என் நெஞ்சுல உள்ள பாரத்தை.. இப்படி டைரியில எழுத்து வடிவமா கொட்டித் தீர்க்கிறேன்...'

வீட்டிலிருந்து கையோடு எடுத்துக் கொண்டு வந்த டைரியில் தனது உள்ளக்கிடக்கை எல்லாம் தெளிவாக எழுதி முடித்து டைரியை மூடி... தன் மார்போடு அணைத்தபடி விழிகளை மூடி நிம்மதி பெருமூச்சு விட்டான் சிவகுரு.

கங்கா எப்படியாவது எனக்கு கிடைத்து விடுவாள். என் காதலில் உள்ள ஆதர்ஷண சக்தி... எங்களைச் சேர்த்து வைக்கும்.

அவனது உள் மனம் அறுதியிட்டு உறுதி கூறியது. விதி சிரித்தது!

கங்காவுக்கு, அடுத்த மாதமே வேறொரு நபருடன் நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறது என்பதை.. சிவகுரு கனவிலும் கருதவில்லை என்பது நிஜம்..!




கங்கா கடந்த மூன்று வாரங்களாக வேலைக்குப் போய் கொண்டிருந்தாள்.

பர்வதம் தக்காளி சட்னியை மிக்ஸியில் அரைத்தபடியே மகளைக் கூர்ந்து பார்த்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால்... தலைக்கு குளித்து கூந்தலை தளரப் பின்னி முடித்திருந்தாள் கங்கா.

வெளிர் நீல சில்க் கார்ட்டன் புடவையை அணிந்திருந்தாள் அவளது கூந்தலிலிருந்து ஈரம் கொட்டி புடவையை இலேசாக நனைத்திருந்ததை கவனித்த பர்வதம்... மிக்ஸி ஜாரை வைத்து விட்டு கைகளைக் கழுவி விட்டு அவசரமாக வந்தாள்.

''அம்மாடி கங்கா! தலையை நல்லா உலர்த்தலையா? இன்னமும் ஈரம் வடிஞ்சுட்டு இருக்கு. நீ என்னடான்னா பின்னி முடிஞ்சுட்டே.. தலையில நீர் கோர்த்துக்கப் போகுதும்மா.. நீர் கோர்த்துட்டா... ஜல தோஷம் தலைவலி வந்து ஆட்டிப் படைச்சுடுமே...''

''அதான் தளர பின்னியிருக்கேன்ல? காத்துக்கு மாயமா உலர்ந்துடும். கவலைப் படாதேம்மா...''

''இப்படி அசட்டையா இருக்கக் கூடாது. அஞ்சு நிமிஷம் பொறு... சாம்பிராணி புகை போட்டு விடறேன்...''

''ஊகூம்... நேரமாச்சும்மா... டிபன் ரெடியாயிடுச்சா?''

''தக்காளி சட்னிக்கு தாளிச்சுக் கொட்டணும். ஹூம்...!

படிக்கிற காலத்துல தான் அரக்கப் பரக்க ஓடுவே... வேலைக்குப் போகும் போதும்... இப்படி அவசரப்படறியே கங்கா?''

''கொஞ்சம் லேட்டானாலும் பஸ் மிஸ் பண்ணிடுவேன். அப்புறம் லேட்டா தானே போகணும்? எப்பவும் பங்க்ச்சுவலா இருக்கணும். வேலை பார்க்கிற இடத்துலேயும் நல்ல பேர் எடுக்க வேணாமா?''

''உன்னோட குணத்துக்கு கூடிய சீக்கிரத்துல எல்லோர்கிட்டேயும் நல்ல பேரு சம்பாதிச்சுடுவே...''

தட்டில் மூன்று இட்டிலிகளை எடுத்து வைத்து தக்காளி சட்டினியை ஸ்பூனால் அள்ளிப் போட்டுக் கொண்டாள் கங்கா.

''இரும்மா.. இன்னும் சட்னிக்கு தாளிக்கலை தாளிக்கும் கரண்டியை அடுப்பில் வைத்து அவசரமாய் கடுகையும் கறிவேப்பிலையையும் உருவிப் போட்டாள் பர்வதம்.

''எனக்கு இதுவே போதும்மா.. சட்னி காரசாரமா ருசியா இருக்கு..''

''கங்கா! ஞாபகம் இருக்குல்ல? மதியம் மூணு மணிக்கு..'' அவள் முடிக்கும் முன் இடை மறித்தாள் கங்கா.

''உம்.. ஞாபகம் இருக்கு.. மூணு மணிக்கு டாண்ணு பெர்மிஷன் வாங்கிட்டு ஆபீஸை விட்டு நா வந்துடுவேன். சரியா?''

''நீ தான் சின்ஸியர் சிகாமணியாச்சே? வேலையில மூழ்கிப் போயிட்டா... இந்த உலகத்தையே மறந்துடுவியே? அதான் பயப்படறேன். நான் ரெண்டே முக்காலுக்கு உனக்கு ஃபோன் பண்ணி ஞாபகப்படுத்தட்டுமா?''

இட்லி துண்டத்தை மென்றபடி இதமாய் முறுவலித்தாள் கங்கா.

''அதெப்படி நான் மறப்பேன்? நீயும் அப்பாவுமா இதோட இருபது வாட்டி மாத்தி மாத்தி சொல்லிவிட்டீங்க.. நீங்க சொன்ன டயத்துக்கு கரெக்டா வந்து நிப்பேன்.போதுமா? ஆபீஸ் நேரத்துல செல்போன் சைலண்ட் மோட்லே தான். போட்டு வச்சிருப்பேன். நீ ஃபோன் பண்ண வேணாம். நான் நேரத்துக்கு வந்துடுவேன். சரியாம்மா? என்றபடி தயக்கமாய் ஒரு பார்வை பார்த்தாள் கங்கா.

''என்ன கங்கா? எதையோ சொல்ல வர்றே.. என் கிட்ட என்ன தயக்கம் உனக்கு? சொல்லுடா...?''

''இல்ல... இப்பத் தான் வேலைக்குச் சேர்ந்தேன். கொஞ்ச காலத்துக்கு வேலை பார்த்துட்டிருக்கணும்கிற ஆசைக்கு.. நீங்க மறுப்பேதும் தெரிவிக்கலை.

இப்போ வேலையில ஜாயின் பண்ணி... முதல் மாசம் சம்பளம் கையில வாங்கறதுக்குள்ளே.. எனக்கு இப்படி அவசரமா கல்யாண ஏற்பாட்டை ஆரம்பிச்சுட்டீங்க.. அதான் கொஞ்சம் வருத்தமா இருக்கும்மா...''

குரலில் வருத்தம் தொனிக்கப் பேசிய மகளின் நெற்றியில் வந்து புரண்ட முடிக்கற்றையை... ஒதுக்கி விட்ட பர்வதம் மலர்ந்த முகத்தோடு பேசத் தொடங்கினாள்.

''உன்னோட ஆசைக்கு.. நாங்க குறுக்கே நிக்கலையே? அதே சமயத்துல.. நான் என்ன கண்டிஷன் போட்டேன்?

ஞாபகம் இருக்கா.. இல்லையா? நல்ல சம்பந்தம் தகைஞ்சு வந்துச்சுன்னா.. சட்டு புட்டுன்னு நிச்சயம் பண்ணி பேசி முடிச்சிடுவோம். அதுக்கு நீ சம்மதிக்கணும்னு நான் சொன்னேன் இல்ல...?''

''சொன்னீங்க தான்... இருந்தாலும்... இவ்ளோ சீக்கிரத்துல..'' அவள் முடிக்கும் முன் இடை மறித்தாள் பர்வதம்

''நல்ல சம்பந்தம் வந்திருக்கு. இதை விட்டா.. இப்படியொரு வரன் வாய்க்கிறது கஷ்டம்னு.. உங்க அக்கா துர்கா படிச்சு படிச்சு சொல்லிட்டுப் போயிட்டா... விசாரிச்சுப் பார்த்த வரைக்கும் மாப்பிள்ளை வீட்டைப் பத்தி.. எல்லாரும் நல்ல விதமாத் தான் சொல்றாங்க.. எங்க மனசுக்கு ரொம்பவும் திருப்தியா போச்சு.

மாப்பிள்ளை நமக்கு அந்நியம் கிடையாது. துர்காவோட சின்னமாமனாரோட புள்ளை. துர்கா வீட்டுக்கு பக்கத்துல பெரிய பங்களாவுல வசிக்கிறாங்க... துர்காவை குடுத்த இடத்தை விட இது பெரிய இடம். கார், பங்களான்னு ஓஹோன்னு இருக்கிறாங்க... நிறைய சொத்து பத்து இருக்காம். எல்லாத்துக்கும் மேல மாப்பிள்ளை எம்.பி.ஏ. படிச்சிருக்காரு.

உன்னோட படிப்புக்கும் தகுதிக்கும் ஏத்த மாப்பிள்ளையா இருக்காரு.

தூர தேசத்துல இருந்து மாப்பிள்ளை வாய்ச்சுட்டா.. நீ எங்களை விட்டுப் பிரிஞ்சு வெகு தூரம் போறதுக்கு... உனக்கும் மனசில்லை...எங்களுக்கும் அதுலே உடன்பாடு இல்ல..

இங்க உன்னைக் கட்டிக் குடுத்தோம்னா.. துர்கா மாதிரியே நீயும் நெனச்ச மாத்திரத்துல பொறந்த வீட்டுக்கு ஓடி வரலாம். சீராடிட்டுப் போகலாம். இல்லையா?

இந்த நாலையும் யோசிச்சுப் பார்த்ததுலே... எங்களுக்கு இந்த வரன் ரொம்பவே பிடிச்சு போச்சு... மாப்பிள்ளை அரவிந்த் அம்சமா இருப்பாராம்...

உன் அழகுக்கு ஏத்த மாதிரி பொருத்தமா இருப்பாராம். நம்ம பெரிய மாப்பிள்ளை சொன்னாரு. துர்காவை விட நம்ம மாப்பிள்ளைக்கு இதுலே ரொம்ப சந்தோஷம்.. நம்ம மைத்துனியை தன்

னோட தம்பிக்கு கட்டி வச்சு... ஒண்ணுக்குள்ளே ஒண்ணா ஒத்துமையா இருந்துக்கலாம்னு துடிக்கிறாரு...

இந்த வரனை உதறித் தள்ளறதுக்கு... எங்களுக்கு தேடிப் பார்த்தாலும் ஒரு காரணமும் கிடைக்கலை.. சகல விதத்துலேயும் சிறந்த வரனா இருக்கிறப்போ... அது தட்டிப் போகாம.. காலா காலத்துல முடிச்சுடறது தானே நல்லது?

நம்ம துர்காவோட குழந்தைக்கு மொட்டை போட்டு காது குத்தினோமே... அந்த விசேஷத்துல வச்சு உன்னை இந்த மாப்பிள்ளை பார்த்தாராம்... பார்த்ததுமே பிடிச்சு போச்சாம்... அவருக்கு மட்டுமில்ல... அவரோட அம்மா, அப்பா, அண்ணன், அண்ணின்னு எல்லோருக்கும் திருப்தியாம்...

நம்ம துர்காவோட மாமனார் கிட்டே கலந்து பேசியிருக்காங்க... அவர் எங்களுக்கு ஃபோன்ல விஷயத்தை சொன்னதோட துர்காவையும் மாப்பிள்ளையையும் வீட்டுக்கே அனுப்பி விவரமா எடுத்துச் சொல்ல வச்சுட்டாரு...

பெரிய சம்பந்தியே தலையிட்டிருக்காரு... வரனும் நல்ல வரன்! அவங்க குடும்பத்துல எல்லாருமே ரொம்ப சோஷியலா இருப்பாங்களாம்.

நீ விருப்பப் பட்டா... தொடர்ந்து வேலைக்குப் போகலாமாம்.

மாப்பிள்ளை, பெரிய நிறுவனத்துல நல்ல பதவியில இருக்காராம்.

ஆபீஸ் சார்பா அடிக்கடி வெளிநாடுகளுக்கு போயிட்டு வர்றாராம்.

அவர் ரொம்ப மேம்போக்கா நடந்துக்கிடறவரு.. போலிருக்கு தடையே விதிக்க மாட்டாருன்னு... பெரிய மாப்பிள்ளை உத்திரவாதமே தர்றாரு...

அதனால நாங்களும் சம்மதிச்சுட்டோம். இன்னிக்கு சாயந்தரம் நாலுமணிக்கு மேல அவங்க முறைப்படி பொண்ணு பார்க்க வர்றாங்க... உன்னைக் கரையேத்திட்டா... அதுவும் நல்ல இடத்துல ஒப்படைச்சுட்டா... எங்க பாரம் இறங்கிடும் இல்லையா?

எங்க மனசைப் புரிஞ்சு நடந்துப்பேன்னு நம்பி தான்... நாங்க இன்னிக்கு வரச் சொல்லிட்டோம்... எல்லாம் உன் நன்மைக்குத் தான் கங்கா!''

நீளமாய் பேசி முடித்து மகளின் தாடையைத் தொட்டு தடவினாள் பர்வதம்.

''சரிம்மா'' கங்கா மெல்ல தலையாட்டிய தருணத்தில்... அவசரமாய் கூடத்திலிருந்து நடேசன் குரல் கொடுத்தார்.

'' பர்வதம்....! கங்கா..! இங்க வாங்க... நம்ம வீட்டுக்கு யாரு வந்திருக்காங்கன்னு பாருங்க...''

துர்கா. தனது கணவன் குழந்தையுடன் ஆட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள்.

''அடடே... மதியத்துக்கு மேல புறப்பட்டுவர்றேன்னு சொல்லியிருந்தா.. நல்லதா போச்சு! சீக்கிரமா கிளம்பி ஒத்தாசை பண்ண வந்துட்டா...''

பர்வதத்திற்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

''வாங்க மாப்பிள்ளை! வாம்மா துர்கா... ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை.. இது பிள்ளையில்லாத வீடு! நீங்க தான் இந்த வீட்டுக்கு மூத்த பிள்ளையா இருந்து... எல்லாத்தையும் முன்ன நின்னு நல்ல படியா நடத்திக் குடுக்கணும்...''

கைகளைக் கூப்பினார் நடேசன்.

மூத்த மாப்பிள்ளை குமார் சட்டென்று அவரது கரங்களைப் பற்றிக் கொண்டான்.

''இது என் கடமை மாமா! என்ன மாமா இப்படி பேசறீங்க? கங்கா, என் தம்பிக்கு மனைவியாகப் போறா... எங்க வீட்டுல எல்லாருக்கும் ரொம்ப திருப்தி... ரெட்டிப்பு மகிழ்ச்சியும் கூட....

எங்க வார்த்தைக்கு மதிப்பு தந்து... நீங்களும் சம்மதம் தெரிவிச்சதுக்கு நான் தான் நன்றி சொல்லணும் மாமா''

''அட.. என்ன மாப்பிள்ளை நீங்க? இப்படியொரு நல்ல சம்பந்தம் எங்களுக்கு உங்க மூலமா கிடைச்சிருக்கு... இதுக்கு நாங்க தான் நன்றி சொல்லணும்...''

நெகிழ்வாய் பேசினார் நடேசன்.

''குட் மார்னிங் மாமா! வா துர்கா...'' வரவேற்றாள் கங்கா...

''என்ன கங்கா? ஆபீசுக்கு கிளம்பிட்டியா? இன்னிக்கு ஒரு நாள் லீவு போடக்கூடாதா? நாங்க வீட்டுல போட்டது போட்டபடி கிடக்கட்டும்னு... இங்க வந்திருக்கோம். நீ என்னடான்னா.. ஆபீசுக்கு ஓடறியே?''

சலித்துக் கொண்டாள் துர்கா.

''மூணு மணிக்கு பர்மிஷன் வாங்கிட்டு டாண்ணு வந்துடுவேன் ஆபீசுல முக்கியமான வேலை இருக்கு. அதான்...''

''இந்த சின்ஸியர் சிகாமணியை தடுக்க வேணாம். போயிட்டு வரட்டும். படிக்கிற காலத்துலேயும் சாமானியத்துல லீவே போடமாட்டாளே... உனக்கு தெரியாதா?''

பர்வதம் பெருமிதமாய் சிரித்தாள்.

அந்த சமயத்தில் நடேசனின் செல் போன் கிணுகிணுத்தது.

சட்டைப் பையில் இருந்து போனை எடுத்து நம்பரை கவனித்தவரின் முகம் மலர்ந்தது.

''சுப்புவுக்கு நூறு ஆயுசு! நானே போன் பண்ணணும்னு நெனச்சுட்டிருந்தேன். அவனே பண்ணிட்டான்...''

சிரித்தபடி செல் போனை ஆன் செய்தார்.

''என்ன சுப்பு? நல்லாயிருக்கியா? நானே பேசணும்னு தான் இருந்தேன். நீ யே கூப்பிட்டுட்டே.. உனக்கு ஆயுசு கெட்டிப்பா...''

சிரித்துக் கொண்டே உரக்கப் பேசினார்.

''என்னது? முக்கியமான விஷயம் பேசணுமா? முதல்லே நீ சொல்லு சுப்பு! அப்புறமா நானும் ஒரு சமாச்சாரத்தை உன்கிட்ட சொல்லணும்...''

''நேர்லே தான் பேசணுமா? சரி.... என்ன? நீ வீட்டுக்கு வர்றியா? என்னத்துக்கு உனக்கு சிரமம்? நான் உன் பங்களாவுக்கு இதோ....

10 நிமிடத்தில் ஓடி வந்துடறேன்....''

''நல்ல நேரம் பத்தரை மணிக்கு தான் ஆரம்பிக்குதா... சரி... பத்தரைக்கே அங்க வர்றேன்.போதுமா? வச்சுடவா?''

செல்போனை அணைத்து சட்டைப் பையில் திணித்த படி ஏதோ முக்கியமான விஷயமாம்... அதை நல்ல நேரமா பார்த்து தான் பேசணும்னு... சுப்பு சொல்றானே? பீடிகை பலமா இருக்கு.... என்றார் நடேசன்.

''இப்போ என்னங்க? பத்தரை மணிக்கு நேர்ல போனீங்கன்னா.. என்னன்னு தெரிஞ்சுடப் போகுது. பேச வேண்டியதைப் பேசிட்டு...

மறக்காம சுப்பு அண்ணாவையும் தவமணியையும் சாயந்தரமா நம்ம வீட்டுக்கு வரச் சொல்லுங்க...

கங்காவைப் பொண்ணு பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரும் போது... இவங்க இங்க இருந்தாங்கன்னா.. நமக்கு கவுரவமா இருக்குமில்லையா.?''

''கண்டிப்பா.. நம்ம உறவுக்காரங்களை விட..சுப்பு குடும்பம் தான் நமக்கு எப்பவும் நெருக்கமா இருக்கு... நட்டாத்துல நான் நின்னப்போ... கை தூக்கி விட்டவனே சுப்பு தானே?''

''அப்பா! எனக்கு நேரமாச்சு... நான் கிளம்பட்டுமா?''

ஹேண்ட் பேக்கை தோளில் மாட்டிக் கொண்டு அருகில் வந்து நின்றாள் கங்கா.

''சரிம்மா.... கிளம்பு! வா... உன்னை பஸ் ஸ்டாப்புலே இறக்கி விட்டுடறேன்...''

தனது டி.வி.எஸ். பிப்டியை நோக்கி விரைந்தார் நடேசன்.

பஸ் ஸ்டாப்பை நெருங்குவதற்கு முன்... பின்னால் அமர்ந்திருந்த மகளிடம் ''மறக்காம மூணு மணிக்கு வந்துடும்மா..

உங்கம்மா வாசல் மேலேயே கண்ணை வச்சு காத்திட்டிருப்பா..''



என்றார்.

''சரிங்கப்பா...'' என்றவள்... ஒரு கணம் தயங்கிவிட்டு ''அப்பா! பத்தரை மணிக்கு சுப்பு மாமா வீட்டுக்குப் போறீங்கல்ல? போயிட்டு வந்ததும்.. எனக்கு போன் பண்றீங்களாப்பா?'' என்று ஆர்வமாய் கேட்டு விட்டாள்.

''சுப்பு என்ன சமாச்சாரத்தை சொல்லப் போறான்? அதுவும் நல்ல நேரத்துல பேசணும்னு சொல்றானே?ன்னு... எனக்கு ஆர்வம் தாங்கலைம்மா.. உனக்கும் அதே ஆர்வம் தான்... சரி.. கண்டிப்பா.. போன் பண்ணி... உனக்கு சொல்லிடறேன்...'' என்ற படி பஸ் ஸ்டாப்பில் வண்டியை நிறுத்தினார் நடேசன்.

''நான் ஏற வேண்டிய பஸ்... இதோ வந்துடுச்சுப்பா... நா வரட்டுமா?''

தலையாட்டி விட்டு ஓட்டமும் நடையுமாக விரைந்து பஸ்ஸில் ஏறி விட்டாள் கங்கா.

அருமைத் தோழி அகிலாவின் மூலமாக... மிகப்பெரிய இக்கட்டில் தான் மாட்டப் போவதை அறியாத கங்கா... அப்பாவியாய் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து பயணித்தாள்.

விதியும் கூடவே பயணித்தது...!




சிவகுருவின் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் ததும்பிக் கொண்டிருந்தது.

நேற்று இரவு அப்பா சுப்பிரமணியம்.. அவனிடம் தனிமையில் பேசுவதற்காக மொட்டை மாடிக்கே வந்து விட்டிருந்தார்.

மொட்டை மாடியில் தூக்கம் பிடிக்காமல் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டும்... பாலாய் பொழிந்த வெண்ணிலாவில்.. தனது காதல் தேவதையின் முகம் அவ்வப் போது அவனுக்கு மட்டும் தரிசனம் தருவதை ரசித்துக் கொண்டும் இருந்த சிவகுரு... நடைச் சத்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான்.

''எ... என்னப்பா! ஒரு குரல் குடுத்திருந்தா.. நான் ஓடி வந்திருப்பேன்ல? பாவம்... நீங்க ரெண்டு மாடி ஏறி வர்றீங்களே? ஏற்கனவே உங்களுக்கு மூட்டு வலி.. பதினொரு மணிக்கு மேல இருக்கும் போலிருக்கே.. பி.பி.மாத்திரை

போட்டிருப்பீங்க.. இன்னமும் தூங்காம இருக்கீங்களேப்பா?''

அப்பாவின் தோளில் ஆதுரமாய் கை வைத்தான் சிவகுரு. வெள்ளை வேட்டி, பனியன் அணிந்து கொண்டு இருந்த மகனை ஏற இறங்கப் பார்த்தார்.

''நீ உடுத்தியிருக்கிற உடையில மட்டும் வெள்ளை இல்ல... உன்

மனசும் வெள்ளை தான்... என்னைப் பத்தி விசனப்படறியே? நீ ஏன்ப்பா இன்னமும் தூங்கலை?

நீ அலையற அலைச்சலுக்கும் உழைக்கிற உழைப்புக்கும் வேற எவனாவது இருந்தா... எட்டு மணிக்கே தூங்கிடுவான். தெரிஞ்சோ தெரியாமலோ எங்க மூலமா உனக்கு தீராத மனக்கஷ்டம் வந்து தொலைஞ்சுடுச்சு.அதை நாங்க தானேப்பா நிவர்த்தி பண்ணணும்?

நம்ம குடும்பத்துக்கு... நம்ம கவுரத்துக்கு அந்தப்பாவி களங்கத்தை ஏற்படுத்திட்டு ஓடிப் போயிட்டா... ஓடிப் போனவ எங்கேயோ கண்டிப்பா சந்தோஷமாத்தான் இருப்பா... ஆனா நாம்ப தான் அவளால அசிங்கப்பட்டு கவலைப்பட்டு உருகி நொந்துக்கிட்டிருக்கோம்.

பட்டதெல்லாம் போதும்! போனது போகட்டும். உன்னோட பிறந்த நாள் அன்னிக்கு... எங்களுக்கு ஒரு பொறி தட்டுச்சுப்பா... சிவா! உன் கிட்ட நான் மன்றாடி கேட்கிறேன். கெஞ்சறேன். தயவு செய்து நீ இதை... எனக்காக... இல்ல எங்களுக்காக இந்தக் குடும்பத்துக்காக செய்யணும்பா... செய்வியா?''

பரிதாபமாய் அவனை ஏறிட்டார் சுப்பிரமணியம்,

''அப்பா...என்னப்பா நீங்க...? ஆமா... உங்களுக்கு என்ன பொறி தட்டுச்சு?''

''செய்வியா?ன்னு நான் கேட்டேன். நீ பேச்சை மாத்தறே பாத்தியா? உனக்கு பயம்... அப்பாவும் அம்மாவும் மறுபடியும் வேற எந்தப் பொண்ணையாவது பார்த்துட்டு வந்து... ரெண்டாம் கல்யாணத்துக்கு வற்புறுத்தறாங்களோ?ன்னு பயப்படறே... அப்படி தானே?''

''எதுக்குப்பா உங்க கிட்ட நான் மறைக்கணும்? உங்க யூகம் சரி தான்... இன்னமும் பட்ட காயமே ஆறலை... அதுக்குள்ளே... வேணாம்பா... என்னை தர்ம சங்கடத்துக்கு ஆளாக்காதீங்கப்பா... ப்ளீஸ்...''

கெஞ்சும் தொனியில் பேசியவனின் குரல்.. பிசிறியடித்ததைக் கேட்டதும் பதறிப் போனார் சுப்பிரமணியம்.

''இல்லயில்ல,... அப்படி எதுவும் நடந்துடக்கூடாதுன்னு தான் நானும் உங்கம்மாவும் ஆயிரம் வாட்டி யோசிச்சு.. கடைசியில இந்த முடிவுக்கு வந்தோம். காயப்பட்ட உன் மனசுக்கு.. கண்டிப்பா இது மருந்தா இருக்கும்கிற நம்பிக்கையில தான்.. நான் இப்போ உன்கிட்ட இதைப்பத்தி பேச வந்தேன் சிவா!

நான் சொல்லப்போறதை ரெண்டு நிமிஷம் நின்னு செவி மடுத்துட்டு அப்புறமா உன்னோட முடிவைச்சொல்லுடா கண்ணா!''

நீண்ட பெருமூச்செறிந்துவிட்டு '' சரி! சொல்லுங்கப்பா'' என்



றான் அசுவாரஸியமாய்...!

''உன்னோட பிறந்த நாளன்னிக்கு தான்.. நாங்க ஒரு விஷயத்தை கவனிச்சோம்... நடேசன் உன்னை வாழ்த்த வந்தானே? ஒரு சம்புடத்துல கங்கா போட்ட ஊறுகாயை எடுத்துட்டு வந்திருந்தானே?

அதை ருசிச்சு சாப்பிட்டுட்டு சிலாகிச்சு கங்காவைப் பாராட்டி நீ பேசினே இல்லையா? உன்னோட விழிகள்லே ஒரு அலாதியான பளபளப்பை பார்த்தோம். அப்புறம் எங்களுக்கு பொறி தட்டுச்சு உனக்கேத்தவள் கங்கா தான்..

அவள் உனக்கு சகல விதத்திலேயும் பொருத்தமானவளா இருப்பாள். இந்த வீட்டுக்கு மருமகளா வரக்கூடிய தகுதியும் அவளுக்கு மட்டும் தான் இருக்குன்னு.. நாங்க புரிஞ்சுகிட்டோம்.

இது முன்னாடியே நமக்கு புரியாம போயிடுச்சுன்னு.. ரொம்ப வருத்தப்பட்டோம்... சரி.. இப்படித்தான் நடக்கணும்னு விதி இருக்கிறப்போ.. அதை யாரால மாத்த முடியும்.?

இப்பவாவது நமக்கு இந்தத்தெளிவு வந்துச்சேன்னு.. மனசை நாங்க தேத்திக்கிட்டோம். நடேசன் என்னோட ஆத்ம சிநேகிதன் கங்கா அவனோட பொண்ணு...

அவனை மாதிரியே அவனோட பொண்ணும் தங்கமான குணம் படைச்சவள். கையில வெண்ணெயை வச்சுக்கிட்டு.. முட்டாள்தனமா, நானும் அம்மாவும் நம்ம சொந்தத்துக்குள்ளே வலைவீசி தேடிக் கிட்டிருந்தோம்.

அந்த குன்றத்தூர் முருகன்தான்.. ரொம்ப சரியான நேரத்துல அதுவும் உன்னோட பிறந்த தினத்துலேயே.. எங்களுக்கு இதைப் புரிய வச்சாரு. கங்காவை உனக்குப் பேசி முடிக்க... நாங்க பிரியப்படறோம்.

சின்ன வயசிலேர்ந்து கங்காவை உனக்கும் நல்லாத் தெரியும். கண்டிப்பா அவ உனக்கு நல்ல மனைவியா இருப்பா... இந்த மகாலெட்சுமியை நாம்ப தவற விட்டுடக் கூடாதுப்பா... என்ன சொல்றே சிவா?

நாளைக்கு நம்ம நடேசன் கிட்ட பேசி முடிவு பண்ணிடலாமா? அவளும் படிப்பை முடிச்சுட்டாள் இல்லையா? நடேசன் மறுப்பேதும் சொல்ல மாட்டான்....'' சிவாவுக்கு இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது.

பனியில் நனைந்த மலர்களை... ஒரு கூடை நிறைய வாரி அப்படியே அவனது தலையில் கவிழ்த்தாற் போலிருந்தது.

நெஞ்சுக்குள் சிலீர் என்று இன்பம் பொங்கி வழிந்தது. 'உண்மையான காதலுக்கு ஒரு சக்தி இருக்கும். அந்த சக்தி என்னோட

காதலை ஜெயிக்க வைக்கும்' என்று நம்பியிருந்தேனே...!

அந்த நம்பிக்கை வீண் போகவில்லை.

'மலர்ந்த மல்லிகையின் வாசத்தை மூடி வைக்க முடியாது. அதைப் போல் தான் காதலும்...! அதை மனதுக்குள் பூட்டி வைத்தாலும்... அது வெளியில் காட்டிக் கொடுத்து விடும் என்று புத்தகத்தில் வாசித்திருக்கிறேன்.

அது உண்மை தான் போலும்...!

அப்பாவும் அம்மாவும் கண்டு பிடித்து விட்டார்களே...! நான் கங்காவைப் பாராட்டிப் பேசும் போது... விழிகளில் அலாதி பளபளப்பு கூடியதை உன்னிப்பாய் கவனித்து விட்டார்களே என்னையும் அறியாமல்... என்னுள் இருந்த காதல் வெளிப்பட்டு விட்டதே...!

அதுவும் நன்மைக்குத் தான்...!

எனக்கு ஏற்ற துணை கங்கா தான் என்ற முடிவுக்கு இவர்கள் வந்து விட்டார்களே...!

நானும் என்னோட காதலை வெளிப்படையாக கடைசி வரை சொல்லப் போவதில்லை என்று உறுதி பூண்டிருந்தேன்.

கடவுளே...! உனக்கு ஆயிரமாயிரம் நன்றி... இவர்களுக்கு இப்படியொரு எண்ணத்தை விதைத்து.. என் மனதில் பாலை வார்த்து... என் காதலை வாழ வைத்ததற்கு... அனந்த கோடி நன்றி...!

சந்தோஷம் தாளாமல் என் இதயத்துடிப்பு பன்மடங்காகி எகிறித் துடிக்கிறதே...

கால்கள் தரையில் ஊன்றாமல் ஜிவ்வென்று அந்தரத்தில் பறப்பது போலிருக்கிறதே...

கங்கா! என் அன்பு தேவதையே...! அழகோவியமே...! ரசனையின் சிகரமே...!

நீ எனக்கு கிடைச்சுட்டே... என் மனசுக்குள்ளே ஜதி போட்டுக்கிட்டு கங்கை வெள்ளம் பாயற மாதிரி... மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்துல இருக்கேன்.

உனக்கு ஏத்தவனா... உன் மனசைப் புரிஞ்சுக்கிட்டு... உன்னை என் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப்பேன்டா...

நீ கிடைச்சதே எனக்கு பெரிய விஷயம்... உன்னை என் உள்ளங்கையிலவச்சு தாங்கப் போறேன்....

இந்த உலகத்துலேயே அதிர்ஷ்ட சாலி நான் தான்னு... குன்றத்தூர் மலை உச்சியில் நின்னு ஊர் முழுவதும் கேட்கும்படியே கத்தனும் போல இருக்கு கங்கா...

ஐ லவ் யூ ஸோ மச் கங்கா!...

கண நேரத்திற்குள் ஆயிரம் எண்ண அலைகள் எழும்பி அவனது இதயத்தில் மோதிச் சிதறின.



''சிவா.. என்னப்பா..? நான் கேட்டதுக்கு இன்னமும் நீ பதிலே சொல்லலையே? என்ன யோசிக்கிறே...?''

அவனது தோளை சுப்பிரமணியம் அழுத்தியதும்... சட்டென்று நினைவுச் சங்கிலிஅறுபட... சகஜ நிலைக்கு திரும்பினான்.

''இல்லப்பா... ஆயிரம் தான் இருந்தாலும்... நான் ஏற்கனவே கல்யாணம் ஆனவன் இல்லையாப்பா? கங்காவை ரெண்டாம் தாரமா எனக்கு கட்டித் தர்றதிலே.. நடேசன் மாமாவுக்கு உடன்பாடு இருக்குமா?ன்னு சொல்ல முடியாதே..?

ஒரு வேளை.. அவருக்கு உடன்பாடு இருந்தாலும்... கங்காவுக்கு இஷ்டம் இல்லைன்னா...?''

''கண்டிப்பா... நடேசன் இதுக்கு ஒத்துக்குவான். அவனுக்கு உன்மேல அலாதி பிரியம் மட்டுமில்ல மரியாதையும் இருக்கு... உன்னோட தங்கமான குணத்தைப் பத்தி அறிஞ்சவன்... சந்தோஷமா சம்மதிச்சுடுவான்.. பாரேன்...''

''எப்பவும் நாம்ப ரெண்டு பக்கத்தையும் யோசிக்கனும் இல்லையா அப்பா? எதிர்பார்ப்பு ஜாஸ்தியாகி... ஒரு வேளை அது நடக்காம போயிட்டா... ரொம்ப ஏமாற்றமாயிடும். மனசு ரொம்பவே வருத்தப்படும். அதனால தான் சொல்றேன்....''

''சின்ன வயது தான்... ஆனா உனக்கு வயசுக்கு மீறின பொறுப்பும் பக்குவமும் இருக்கு... அதனால தான் இப்படி பேசறே..! கேட்கப் பெருமையா தானிருக்கு...

இந்த விஷயத்துல உன்னோட கணிப்பு தப்பு சிவா! ஏன்னா... நடேசனை நான் கை தூக்கி விட்டிருக்கேன். துர்காவோட கல்யாணத்துக்கு கூட நான் நிறைய உதவியிருக்கேன்.

அந்த நன்றி உணர்ச்சி நடேசனுக்கு நிறையவே இருக்கு. அவனுக்கு மட்டுமில்ல... பர்வதத்துக்கு கங்காவுக்கு... எல்லோருக்குமே இருக்கு கண்டிப்பா என் ஆசையை அவன் நிராகரிக்க மாட்டான்....''

குரலில் உறுதி தொனிக்கப் பேசியவரை... வியப்புடன் ஊன்றி கவனித்தான் சிவகுரு.

''என்னப்பா... இப்படி பார்க்கிறே?''

''இல்ல... எங்கப்பாவா இப்படி மாறிப் போயிட்டாருன்னு... வருத்தமா இருக்கு... இதை நான் உங்க கிட்ட எதிர்பார்க்கவே இல்லைப்பா.. ரொம்ப வேதனையா இருக்கு...''

சட்டென்று அவரை விட்டு விலகி நாலடி நகர்ந்து சென்று மொட்டை மாடியின் விளிம்புச் சுவரை தொட்டு வளைந்திருந்த வேப்பமரக்கிளையை... இறுகப் பிடித்துக் கொண்டான்.

திகைத்துப் போன சுப்பிரமணியம்... முதுகுகாட்டி நின்றிருந்த

மகனருகே சென்று அவனது புஜத்தில் கை வைத்தார்.

''என்ன சிவா இது? அப்படி என்ன நான் தப்பா சொல்லிட்டேன்னு... நீ வருத்தப்பட்டு பேசறே...?''

''வலது கை குடுக்கிறது... இடது கைக்கு கூடத் தெரியக்கூடாதுன்னு அடிக்கடி சொல்லிக்கிட்டே இருப்பீங்களேப்பா? நீங்களா இப்படி பேசறீங்க?

நடேசன் மாமா கிட்டே பேசும் போது... தயவு செஞ்சு அவருக்கும் அந்தக் குடும்பத்துக்கும் நீங்க செஞ்ச உதவிகளை ஞாபகம் படுத்திப் பேசாதீங்கப்பா... பேசவும் கூடாதுப்பா...

விஷயத்தை சொல்லுங்க... அவருக்கு விருப்பம் இருந்தா சம்மதிக்கட்டும், சம்மதிக்காம போனா... வருத்தப்படக்கூடாது.

எதிர்பார்ப்பை வச்சுக்காதீங்கப்பா... கங்காவோட விருப்பம் தான் இதுலே முக்கியம்.. கங்காவுக்கு சம்மதமா?ன்னு கலந்து பேசி சொல்லச் சொல்லுங்க... அவங்களுக்கு ஒருவேளை இஷ்டம் இல்லைன்னு சொன்னா... சிரிச்ச முகத்தோட அதை ஏத்துக்கோங்க... மகனுக்காக, நட்பை முறிச்சுக்காதீங்க...

ஆத்மார்த்தமான நட்பு முறியறதுக்கு நான் காரணமா இருக்கவே கூடாதுப்பா.. அப்புறமா...காலத்துக்கும் அந்த உறுத்தல் இருந்துக்கிட்டே இருக்கும்... ப்ளீஸ் அப்பா!''

''எவ்ளோ உன்னதமான மனசுப்பா உனக்கு? உன்னைப் பிள்ளையா பெத்ததுக்கு நாங்க ஜென்ம ஜென்மமா ஏதோ புண்ணியம் செய்திருக்கணும். சரிப்பா... நீ சொல்றபடியே நடந்துக்கிறேன். உன்னை மாப்பிள்ளையா அடையறதுக்கு... அவங்களுக்கு குடுத்து வச்சிருக்கணுமே...?

இந்த மட்டும் நீ மறு கல்யாணத்துக்கு சம்மதிச்சதே பெரிய விஷயம்... நல்லதையே நினைப்போம். என் நண்பன் கண்டிப்பா இதுக்கு சம்மதிப்பான்னு... நான் உறுதியா நம்பறேன்.. சரிப்பா.. இறங்கிப் போறேன்... நீயும் இறங்கி வா! ஊதல் காத்துல ரொம்ப நேரமா இங்க உலாத்திட்டிருக்கே... உடம்புக்கு ஒத்துக்காமபோயிடப்போகுது...''

''இதோ.. நானும் கூடவே இறங்கி வந்துடறேன்பா...''

அன்றிரவு முழுவதும் சிவாவுக்கு தூக்கமே பிடிக்கவில்லை. அவனையும் மீறி... அவன் மனதில் ஒரு எதிர்பார்ப்பு இருந்து கொண்டே இருந்தது.

''எதிர்பார்ப்பை வச்சுக்காதீங்கப்பா என்று அப்பாவுக்கு எடுத்துச் சொன்னவன் தான்...

ஆனால் உள்ளூர நடேசன், பர்வதம், கங்கா என்று யாருமே தன்னை நிராகரிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை மனதில் நங்கூர



மிட்டிருந்தது நிஜம்!

மறுநாள் பத்தரை மணி வாக்கில்... நடேசன் வீட்டிற்கு வரும் சமயத்தில் அவனும் அருகில் இருக்க வேண்டும் என்று அப்பா உத்தர விட்டிருந்தார்.

இனம் புரியாத டென்ஷனில் இருப்புக் கொள்ளாமல் தவித்தான் சிவகுரு.

பத்தரை மணி நெருங்க நெருங்க.. மனதில் படபடப்பு கூடிப் போனது.

நடேசன் வீட்டிற்கு வந்து பேசியதைக் கேட்டதும்... சிவாவின் மனதில் கட்டி வைத்திருந்த காதல் கோட்டை இடிந்து தூள் தூளாய் சரிந்து விட்டது.

8

"சுப்பு! இதுக்கு நாங்க குடுத்துல்ல வச்சிருக்கணும்? இந்த விஷயத்தை ரெண்டு நாளைக்கு முன்னாடி சொல் லியிருக்கக் கூடாதா?இப்போ நான் பெரிய இக்கட்டுலே மாட்டிக்கிட்டேனே?"சோகமாய் பேசிய நடேசனை... சுப்பிரமணியம் ஊன்றிப் பார்த்தார்.

"என்ன ஆச்சு நடேசா? இக்கட்டுல மாட்டிக்கிட்டியா? புரியும் படியா சொல்லுப்பா..."

விவரமாய் சொல்லி முடித்தார் நடேசன்.

"பெரிய சம்பந்தியும் பெரிய மாப்பிள்ளையும் ரொம்ப ஆர்வமா எதிர்பார்ப்போட இருக்காங்க... சாயந்தரமா மாப்பிள்ளை வீட்டுக் காரங்க பொண்ணு பார்க்க வர்றாங்க... இப்போ வர வேண்டாம்னு சொல்லித் தடுத்துட்டா... பெரிய சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் கோவம் வரும்.

பொண்ணு குடுத்த இடத்துல இப்படி ஒரு மனஸ்தாபம் வரும்னு.. நா எதிர்பார்க்கலை... கண்டிப்பா துர்காவுக்கு இதனால பிரச்சினை வரும்..."

"மாமா! வேண்டவே வேண்டாம். இப்போ நீங்க எதையும் தடுக்க வேண்டாம். பேசினபடி அவங்க பொண்ணு பார்த்துட்டுப் போகட்டும்... நீங்க எதைப் பத்தியும் விசனப்படாதீங்க மாமா..."

பெருந்தன்மையோடு பேசிய சிவாவைப் பார்த்து நெகிழ்ந்து போனார் நடேசன்.

"பொண்ணைப் பார்த்துட்டுப் போகட்டும். நைட்டுலே போன் போட்டு ஏதாவது சாக்கு சொல்லி... இந்த சம்பந்தத்துல எங்க ளுக்கு இஷ்டம் இல்லைன்னு சொல்லிடறேன்... இந்த வீட்டுக்கு மருமகளாவர்றதுக்கு கங்காவுக்கு குடுத்து வச்சிருக்கணுமே?"

"**ரொம்ப** சந்தோஷம்டா நடேசா"



மகிழ்ச்சியுடன் அவரது கரத்தை அழுத்தினார் சுப்பிரமணியம், "மாமா! அவசரப்பட்டு நீங்க இந்த முடிவை எடுத்தீங்கன்னா... அப்பவும் பிரச்சினை வரத்தானே செய்யும்? துர்காவோட வாழ்க் கையை நெனச்சுப் பார்த்து பேசுங்க மாமா!"

"சிவா! அதையே பார்த்தாக்க... எங்க குடும்பத்துக்கு நீ மருமகனா கிடைக்க மாட்டியே?"

"முடிவை கங்கா கையில ஒப்படைச்சுடுங்க... அவ முடிவு எடுக் கட்டும்... வாழப் போறவள் அவள் தானே? அவளோட முடிவு தான் முக்கியம், இல்லையா மாமா?"

"சரியா சொன்னே சிவா! நீ சொன்னது தான் சரி!"

"கங்காவை எந்தக் காரணத்தைக் கொண்டும்... நீங்க வற்புறுத்தா தீங்க மாமா! தெளிவா சிந்திச்சு... எந்த நிர்ப்பந்தமும் இல்லாம... அவ யோசிச்சு நல்ல முடிவுக்கு வரட்டும். அவளோட முடிவுக்கு நாம்ப கட்டுப்படலாம்...."

"எங்க குடும்பமே உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கு. அதைப் பத்தி இம்மியளவு கூட சுட்டிக்காட்டாம.. பெருந்தன்மையா அப் பாவும் புள்ளையும் நடந்துக்கிட்டீங்க... இந்தப் பெருந்தன்மை யாருக்கு வரும்?"

நெகிழ்ந்து போனார் நடேசன்.

அந்த பங்களாவை விட்டு வெளியில் வந்ததுமே... கங்காவுக்கு போன் செய்தார்.

விஷயத்தை தெளிவாக எடுத்துச் சொன்னார். திகைத்துப் போனாள் கங்கா.

"என்ன கங்கா? அப்பா கிட்டேயிருந்து போன் வந்ததும் அப் படியே 'ஸ்டன்' ஆயிட்டே? என்ன விஷயம்?"

துருவித்துருவிக் கேட்டாள் அகிலா.

விஷயத்தைப் போட்டு உடைத்தாள் கங்கா.

"ஒரு பக்கம் சிவா! இன்னொரு பக்கம் அரவிந்த்! யாரை நான் தேர்ந்தெடுக்கிறது?

சிவாவோட குடும்பத்துக்கு நாங்க காலத்துக்கும் நன்றிக்கடன் பட்டிருக்கோம். சிவான்னா... என்னைப் பெத்தவங்க அப்படியே சிலாகிச்சுப் போறாங்க.. அவர் மேல் நிறைய மரியாதை வச்சிருக் காங்க....

இந்த சைடு பார்த்தா.... அரவிந்த்! இவரும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராம். நாகரீகமானவர். ரொம்ப டீஸண்டா நடந்துக்கக் கூடி யவராம்... துர்கா அக்காவோட புகுந்த வீட்டுலே இவரைப்பத்தி ஆஹா ஒஹோன்னு தூக்கி வச்சுப் பேசறாங்க...

முடிவு உன்கையில தான்மா இருக்கு. இது உன் வாழ்க்கை.

நல்லா யோசிச்சு முடிவெடுன்னு... அப்பா சொல்லிட்டாரு.... நா என்ன பண்றது? ரொம்ப குழப்பமா இருக்கே?''

அகிலாவுக்கு இதைக்கேட்டதும் உடம்பெல்லாம் தீப்பற்றிக் கொண்டாற் போல் திகுதிகுவென்று எரிந்தது.

சட்டென்று அவளுக்கு சென்ற வாரத்தில் நடந்த சம்பவம்... ஞாபகத்திற்கு வந்தது.

சிவா கங்காவை மூன்று வருடத்திற்கும் மேலாக மானசீகமாய் ஒருதலையாய் காதலித்து வருவதை... அவள் ஆதாரப் பூர்வமாய் தெரிந்து கொண்டாள்.

கணக்குப் பிள்ளையின் மகளான அகிலாவை... பெற்ற மகள் போல பாவித்து நடத்தியதால் இவள் எல்லா அறைகளுக்கும் உரிமையாய் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

''வேலைக்காரி சொந்த ஊருக்குப் போயிட்டு வர்றேன்னு... நாலு நாள் லீவு போட்டிருக்கா அகி! எல்லாம் வீட்டுல போட்டது போட்டபடி கிடக்கு'' என்று தவமணி அலுத்துக்கொண்டாள்.

''நான் எதுக்கு இருக்கேன்? நீங்க மாத்திரை போட்டுக்கிட்டு ரெஸ்ட் எடுங்கம்மா.. பாத்திரம் தேய்ச்சு அடுப்பை துடைச்சுட்டு அழுக்குத் துணிகளை வாஷிங் மெஷின்லே துவைச்சு காயப்போட்டுட்டு நான் போறேன்....''

வேண்டுமென்றே சகலத்தையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தவள்... சந்தடி சாக்கில் மாடியிலிருந்து சிவாவின் அறைக்குள் துடைப்பமும் கையுமாக புகுந்து விட்டிருந்தாள்.

சுற்றும் முற்றும் பார்த்து விட்டு கள்ளத்தனமாக அவனது கட்டிலுக்கு பக்கவாட்டிலிருந்த டேபிளின் டிராயரைத் திறந்து குடைந்தாள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

கையில் டைரி சிக்கியதும்... மெல்ல வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள்.

தவமணி தலைவலி தைலத்தை நெற்றியில் தடவிக்கொண்டு 'அக்கடா' என்று தனது அறையில் படுத்துக் கொண்டதை கவனித்த அகிலா நிம்மதி பெருமூச்சு விட்டபடி மீண்டும் சிவாவின் அறைக்குள் நுழைந்து அவனது கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

சுப்பிரமணியன் சாமானியத்தில் மகனின் அறைப்பக்கம் எட்டிக் கூடப்பார்க்க மாட்டார் என்பதை அகிலா அறிவாள்.

டைரியை அவசர அவசரமாய் ஆதியோடு அந்தம் புரட்டிப் பார்த்தவளுக்கு... ஆத்திரமும் பொறாமையும் மண்டிக்கொண்டு வந்தன.

பொறாமையில் அவளது மனம் பொசுங்கியது.



'அடியே கங்கா! கிட்டத்தட்ட மூணு வருஷமா உன்னையே நெனைச்சு, சிவா உருகிட்டிருக்காரா? உன்னோட அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இந்த விஷயம் தெரிஞ்சா.. மறு கணமே உன்னை அவருக்கு தாரை வார்த்துக் குடுத்துடுவாங்களே? சிவா இந்த விஷயத்தை தனக்குள்ளேயே போட்டுப் புதைச்சு வச்சுக்கிட்டது... எனக்கு நல்லதா போச்சு!

இந்த விஷயம் உனக்கோ உன் குடும்பத்துக்கோ கடைசி வரைக்கும் தெரியக்கூடாது. எல்லா விஷயத்துலேயும் நீ என்னை தோற்கடிச்சே...

காதல்லேயும் நான் தோத்துட்டேன்டி கங்கா! நானும் ரொம்ப நாளா சிவாவை நேசிச்சுட்டு தான் இருக்கேன். எனக்கு என்னடி குறைச்சல்? சிவாவோட அவுட் ஹவுஸிலே குடியிருக்கேன்... இத்தனைக்கும் அவரோட வீட்டைச் சுத்திச்சுத்தி வர்றேன்.

நான் ஏன் இவரோட கண்ணுக்குப் படலை? நானும் அழகி தானே? சிவாவோட மனசுல நான் ஏன் இடம் பிடிக்கலை? விட மாட்டேன். இந்த விஷயத்துலேயும் நீ ஜெயிக்க.. நான் விடமாட்டேன்.

ஊர் உலகத்துல வலை வீசித் தேடினாலும்... சிவா மாதிரி உத்தமர் கிடைக்கிறது ரொம்ப ரொம்பக் கஷ்டம்!

அவரு கிடைச்சுட்டா... உலகத்திலேயே நீ தான் அதிர்ஷ்டசாலியா ஆயிடுவே...

அப்படி ஆகிறதுக்கு நான் விட மாட்டேன்.

எனக்கு கிடைக்காத சிவா... உனக்கும் கிடைக்கக்கூடாது.

நான் ஏற்கனவே சிவாவைப் பத்தி... உன் கிட்டே இல்லாததும், பொல்லாததுமா சொல்லி வச்சது நல்லதா போச்சு! நீ யாரை வேணும்னாலும் கல்யாணம் பண்ணிக்கிட்டு... எக்கேடு கெட்டும் போ!

ஆனா... காணக்கிடைக்காத பொக்கிஷம்.. இந்த சிவா! சிவா உனக்கு கிடைக்கவே கூடாது.

கிடைக்க நான் விடவே மாட்டேன். இது சத்தியம், உள்ளூர சூளுரைத்த அகிலா... அந்த டைரியை மீண்டும் எடுத்த இடத்திலேயே வைத்து விட்டு... கொதிக்கும் உள்ளத்தோடு அந்த அறையைப் பெருக்கித் தள்ளினாள்.

சிவாவின் டைரியில் அவள் வாசித்த காதல் வாசகங்கள் பெரிய பெரிய எழுத்துக்களில் அவளது மனக்கண்ணில் வந்து வந்து போயின.

வயிறு திகு திகுவென்று எரிந்தது.

''அகி! என்ன அகி ஒண்ணும் பேச மாட்டேங்கிறே? அப்படியே

ஸ்டன் ஆகி உட்கார்ந்திருக்கே? நான் என்ன முடிவு எடுக்கிறது? ஒரே குழப்பமா இருக்கே அகி!''

எதிரே அமர்ந்திருந்த அகிலாவின் கரத்தை கங்கா அழுத்திப் பிடித்ததும்.... சட்டென்று நினைவு கலைந்து சகஜ நிலைக்கு திரும்பினாள்.

''உனக்கென்ன புத்தி கெட்டுப் போச்சா கங்கா?''

''ஏன் இப்படி கேட்கிறே அகி?''

''பின்னே என்னவாம்? நான் அன்னிக்கே சொன்னேன் இல்ல? சிவாவோட வொய்ப் கல்யாணமான ரொண்டே நாள்லே.. விட்டுட்டு ஓடியே போயிட்டா... இவனோட சுயரூபம் தெரிஞ்சதால தான் அவ ஓடிட்டாள்னு சொன்னேனே? மறுந்துட்டியா?

விஷயம் தெரிஞ்சும்... நீ இப்படி குழம்பிட்டிருக்கலாமா? பைத்தியக்காரத்தனமா இருக்கே?''

''இல்ல... நீ சொல்ற விஷயத்தைத் தவிர... இது வரைக்கும் அவர் மேல வேற எந்த பிளாக் மார்க்கும் இல்லை. வீட்டுல பெரியவங்களும் அவரை சொக்கத்தங்கம்னு சிலாகிச்சுட்டிருக்காங்க... நான் சிவாவை நிராகரிச்சா.. அவங்க ரொம்ப வருத்தப்படுவாங்கன்னு... பயமா தயக்கமா இருக்கு...''

''மண்ணாங்கட்டி! அவங்களா அவன் கூட சேர்ந்து வாழப்போறாங்க? இது உன்னோட லைப் கங்கா! நீ தான் உறுதியா இருக்கணும். உன் முடிவு தான் முக்கியம்ணு... உங்கப்பாவே சொல்லிட்டாருல்ல?

பின்னே ஏன் தயங்கறே? எல்லாத்துக்கும் மேல... சிவா ஒரு கஞ்சப் பிசினாறி... வக்கணையா வகை தொகையா வாழத்தெரியாத ஆளு...

இந்தக் காலத்துல போயி.. கொஞ்சம் கூட நாகரீகமே இல்லாம பழம் பஞ்சாங்கம் மாதிரி திரியற மனுஷன்... அந்தக் காலத்து கிழம் மாதிரி சதா வேட்டி சட்டையில வீட்டுக்குள்ளே வளைய வர்றதும்... ரொம்ப சிம்பிளா டிரஸ் பண்றேன்னுட்டு காணச் சகிக்காம கன்றாவியான தோற்றத்துல நடமாடறதும்... நல்லாவா இருக்கு?

சதா வேர்த்து வழிஞ்சுக்கிட்டு.. ஹைதர் காலத்துல வாங்கின ஸ்கூட்டர்லே போயிக்கிட்டு இருக்கானே? சொத்துபத்து இருந்தா மட்டும் போதுமா? அதைக் கொஞ்சமாச்சும் அனுபவிக்க வேணாமா?

வெளியில நாலு இடத்துக்கு ஜோடியா அவன் கூட போகும் போது தான் தெரியும்... வெட்கப்பட்டு வேதனைப் படணும். இதெல்லாம் உனக்குத் தேவையா? உன்னோட பேரண்ட்ஸீக்கு இவனைப் பத்தி முழுசா தெரியலை... அதான் உனக்கு தெரிஞ்சு போச்சுல்ல?

அப்புறம் என்னத்துக்கு இந்த தயக்கம்? கம்முனு சாயந்தரமா வீட்டுக்குப்போ! அவங்க பொண்ணு பார்த்துட்டுப் போனதும் நிதானமா... எனக்கு அரவிந்தையே கட்டி வச்சுடுங்கன்னு பளிச்சுன்னு சொல்லிடு.

தயங்கிட்டு இருந்தீன்னா... உன்னைப் பிடிச்சு சிவாவுக்கு கட்டி வச்சு... உன் வாழ்க்கையைப் பாழாக்கிடுவாங்க... ஏதோ உனக்கு கொஞ்சம் நல்ல நேரம் இருக்கு போல.. அதனால தான் உன் விருப்பம் போல முடிவெடுன்னு சொல்லி சுதந்திரம் தந்திருக்காங்க...

வாய்ப்பை! நழுவ விட்டுடாதே! துணிஞ்சு நின்னு இதை சொல்லிடு! தயவு தாட்சணியம் நன்றி செஞ்சோற்றுக்கடன்னு நியாய தர்மத்தைப் பத்தி யோசிச்சா.. உன் வாழ்க்கை அம்பேல் ஆயிடும். வாழ்க்கையே சூனியமாயிடும். தப்பிச்சுக்கோ கங்கா...''

''வாஸ்தவம் அகி! இது என் வாழ்க்கை.. தயங்கிட்டிருந்தா அப்புறமா காலத்துக்கும் நான் தானே அவஸ்தைப் படணும்?

நீ பேசினதைக் கேட்டதும் மனசுல ஒரு தெளிவு பிறந்திருக்கு. அரவிந்தை நான் தேர்வு செஞ்சுட்டேன்...''

''குட் கங்கா! கை குடு....''

அகிலாவுக்கு மனதில் சந்தோஷம் ஊற்றெடுத்தது. கங்காவின் மனதைக் குழப்பி குட்டையாக்கி அதில் வெற்றி கரமாக மீன் பிடித்துவிட்டோம் என்கிற திருப்தியும் நிம்மதியும் நெஞ்சில் பரவ... நிம்மதி பெருமூச்சு விட்டாள் அகிலா. தன்னை அதல பாதாளத்தில் அகிலா தள்ளிவிட்டு விட்டதை அறியாதவளாய்.... கங்கா நன்றிப் பெருக்கோடு தோழியின் கரத்தை இறுகப்பற்றிக் கொண்டாள்.




பெண் பார்க்கும் படலம் தடபுடலாய் நடந்து கொண்டு இருந்தது.

''பொண்ணை ஏற்கனவே எங்களுக்கு பிடிச்சுப் போச்சு. அதனால தான் சம்பந்தம் பேசலாம்கிற முடிவுக்கே வந்தோம். இப்போ முறைப்படி வீட்டுக்கு வந்து பெண்ணைப் பார்த்தாச்சு.

எங்க வீட்டுல எல்லோருக்கும் பரம திருப்தி! நிச்சயத்துக்கு இன்னும் ஏன் காலத்தைக் கடத்தணும்? இன்னிக்கு நாளும் நல்ல நாள் தானே? தாம்பூலத்தட்டை மாத்திக்கிட்டு 'நிச்சயம்' பண்ணிக்கலாமே?''

அரவிந்தின் அப்பா சிரித்தபடி உரத்தகுரலில் கேட்ட போது நடேசன் தயங்கினார்.

நடேசனும் பர்வதமும் தர்மசங்கடமாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஒப்புத் தாம்பூலம்' பண்ணப் போறது தெரிஞ்சிருந்தா.. ஊர்லே இருந்து சொந்தக்காரங்களை நாங்க வரவழைச்சிருப்போமே? இன்னிக்கு வெறுமனே பொண்ணை மட்டும் பார்க்க வர்றீங்கன்னு... நாங்க நெனச்சுட்டோம்...''

மழுப்பினார் நடேசன்.

''அதனால என்ன? அவங்களுக்கு பொண்ணைப் பிடிச்சுட்ட தால..,

திடுதிப்புன்னு ' ஒப்புத்தாம்பூலத்தை' நடத்திட்டோம்னு சொல்ல வேண்டியது தானே?''

''ஆமா மாமா! எங்க சித்தப்பா சொல்றதும் சரி தானே? தாம்பூலத்தட்டை மாத்திக்கங்க மாமா! எங்க எல்லாருக்கும் திருப்தி ஆயிடும்.''

மூத்த மாப்பிள்ளை குமார் சபையில் வைத்தே நச்சரிக்க ஆரம்பித்தான்.

''இல்ல.. நா கங்கா கிட்டே கேட்கணும், இல்லையா, அவளோட சம்மதம் தானே முக்கியம்?''

''இப்பவே கேளுங்க மாமா! போங்க.. நாங்க காத்திருக்கோம். அவளுக்கு சம்மதம்னா இன்னிக்கே ஒப்புத்தாம்பூலத்தை நடத்திடலாம்...''

இங்கிதமே இல்லாமல் அவரை நிர்ப்பந்தப்படுத்தினான் குமார். வேறு வழியின்றி நடேசனும் பர்வதமும் மாடியில் இருந்த கங்காவின் அறைக்குப் போனார்கள்.

கங்கா கத்தரிப்பூ வண்ணத்தில் கிரேப் சில்க் புடவை கட்டி எளிய அலங்காரத்திலும் தேவதையாய் ஜொலித்துக்கொண்டிருந்தாள்.

''அம்மாடி! அவங்களுக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு! இன்னிக்கே ஒப்புத்தாம்பூலம் மாத்திக்லாம்னு ஒத்தைக்கால்லே நிக்கிறாங்க...

பெரிய மாபிள்ளையும் அவங்க கூடச் சேர்ந்துகிட்டு அவசரப்படுத்தறாரு.. இப்பவே உன் முடிவு என்னன்னு சொல்லிடறியாம்மா?

அவங்க கீழே காத்திருக்காங்க... உன்னோட அபிப்பிராயத்தை சங்கோஜப்படாம சொல்லிடு கங்கா'' என்றார் நடேசன்.

''காலையிலேயே அப்பா உனக்கு போன் பண்ணிட்டாரு. இல்லையா? கண்டிப்பா இதுக்குள்ளே நீ யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருப்பே அப்படின்னு நெனக்கிறேன்.

தயங்காம பளிச்சுன்னு மனசுல இருக்கிறதை சொல்லிரும்மா...'' என்றபடி அவளது கூந்தலை நீவி விட்டாள் பர்வதம்.



''ரொம்ப நேரமா யோசிச்சேன். கடைசியில சிவாவை விட அரவிந்த் பெஸ்ட்டுங்கிற முடிவுக்கு வந்திருக்கேன். உங்க ரெண்டு பேத்துக்கும் என் மேல வருத்தம் இல்லையே? அப்படி ஒரு வருத்தம் இருந்தா... என் முடிவை மாத்திக்க நான் தயார் அப்பா!

இதுவரைக்கும் உங்க பேச்சை நான் மீறினதே இல்ல. நீங்க சொன்னா எதுக்கும் நான் கட்டுப்படுவேன். என்னிக்கும் நான் உங்க கங்கா தான் அம்மா...!''

நடேசனுக்கும் பர்வதத்துக்கும் என்னவோ போலாகி விட்டது. இருவரும் பேசாமல் ஒருவரை ஒருவர் அர்த்தபாவனையுடன் பார்த்துக் கொண்டனர்.

''சரிம்மா... உன் மனசுல இருக்கிறதை நீ சொல்லிட்டே... எங்களுக்காக நீ உன் முடிவை மாத்திக்க வேண்டாம். இது உன் வாழ்க்கை, வாழப் போறவ நீ! சரி.. கீழே அவங்க காத்திருக்காங்க... ஒப்புத் தாம்பூலத்தை இன்னிக்கே வச்சுடலாம் வா பர்வதம்...!''

அறையை விட்டு வெளியே இருவரும் வந்து நிதானமாக படிகளில் இறங்கினர்.

''என்னங்க இது? இவ இப்படியொரு முடிவை எடுத்துட்டா? படிச்சவ... புத்திசாலிப் பொண்ணு... அந்தக் குடும்பத்துக்கு நாம்ப நன்றிக்கடன் பட்டிருக்கோம். சகலமும் தெரிஞ்சவ இவ... அதனால சிவாவை தான் தேர்ந்தெடுப்பாள்னு... நான் உறுதியா நம்பிட்டிருந்தேனே?

ஐயோ! சுப்பு அண்ணாவுக்கு எப்படி பதில் சொல்லப் போறீங்க? அவரோட முகத்துல எப்படி நாம்ப முழிக்கிறது? சிவா தம்பி நம்மளைப் பத்தி என்ன நினைக்கும்?''

கிசு கிசுத்த குரலில் புலம்பினாள் பர்வதம்.

''சிவா ஒண்ணும் நெனக்க மாட்டான். அவன் தானே முடிவை கங்கா தான் எடுக்கணும்னு.. எனக்கு சொல்லி அனுப்பிச்சான். அவன் ரொம்ப பக்குவப்பட்டவன். வயதுக்கு மீறி, பெரிய மனுஷத்தனம் இருக்கிற புள்ளை...!

ஹூம்..! கங்காவுக்கு குடுத்து வைக்கலை பர்வதம்! அவ்ளோ தான் நான் சொல்ல முடியும்...! சுப்பு கிட்ட பேசற தைரியம் எனக்கு இல்ல...

எனக்கே மனசு உடைஞ்சு போன மாதிரி இருக்கு. பெரிசா எதையோ இழந்துட்ட மாதிரி துக்கமா இருக்கு... சுப்பு பாவம் ரொம்ப எதிர் பார்ப்போட நம்பிக்கையோட... என் கிட்டே பேசினான். இந்த விஷயத்தை சிவா கிட்ட தான் சொல்லப்போறேன். அவன் சுப்பு கிட்டே பக்குவமா எடுத்துச் சொல்லிக்குவான்.

சே! பெரிய சம்பந்தி மூலமா இப்படியொரு சம்பந்தம் வராமலே

இருந்திருக்கலாம். ரெண்டு நாள் முந்தி கூட... சுப்பு என்னைக் கூப்பிட்டு விஷயத்தை சொல்லியிருந்தா.. எல்லாம் நல்லபடியா நடந்திருக்கும். சரி! இப்படி தான் நடக்கணும்னு விதி இருந்தா... அதை யாரால மாத்த முடியும்?''

''என்னங்க நீங்க? இவ்வளவு வருத்தம் இருக்குல்ல? பேசாம இதை கங்கா கிட்டே எடுத்துச் சொல்லுங்க... நீங்க சொன்னா எதையும் தட்ட மாட்டா.. அவ தான் இப்போ கூட உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா.. முடிவை மாத்திக்கிறேன்னு தெளிவாசொன்னாள்ளே?

அப்புறம் என்னத்துக்கு தயங்கறீங்க? வாங்க.. கங்கா கிட்டே பேசிடலாம். எனக்கும் ரொம்ப சங்கடமா இருக்குங்க... சுப்பு அண்ணா உங்களை வீட்டுக்கு கூப்பிட்டு இந்த விஷயத்தை சொல்லாம இருந்திருந்தா... எனக்கு இந்த சம்பந்தத்துல பூரண திருப்தி இருந்திருக்கும்.

விஷயம் தெரிஞ்சதுக்கு அப்புறம்... சிவாவை நாம்ப இழக்கிறோமே? காணக்கிடைக்காத பொக்கிஷத்தை... நம்ப பொண்ணு தவற விட்டுட்டாளே?ன்னு.. மன செல்லாம் பதறுது தெரியுமா?''

''உஷ்! பர்வதம்! பதட்டப்படாதே... நிதானத்துக்கு வா! எனக்கு எல்லா முடிஞ்சு போச்சு. கங்கா கிட்டே போய் நாம்ப பேசினா... நம்ம இஷ்டத்துக்கு அதிரடியா முடிவு பண்ணின மாதிரி ஆயிடும். கங்கா மனசுல நம்மைபத்தி என்ன நெனப்பா? சிவா என்னைப் பார்த்து கண்டிப்பா கேட்பானே? அவன் முகத்தைப் பார்த்தா... யாருக்குமே பொய் சொல்ல வராதே? நம்ம விருப்பப்படி முடிவு எடுத்தோம்னு சொன்னா... அவன் ரொம்பவே வருத்தப்படுவான்.

மத்தவங்க மனசுக்கும் மென்மையான உணர்வுகளுக்கும் மதிப்பளிச்சு நடக்கிற உத்தமமான பிள்ளை அவன்! கங்கா தான் முடிவு எடுக்கணும். அவளோட விருப்பம் தான் முக்கியம்னு ரொம்ப தெளிவா என்கிட்டே, சொல்லி அனுப்பினானே?

கங்காவை நாம்ப நிர்ப்பந்தப்படுத்தினா... அவனுக்கு இது தெரிஞ்சா... கட்டாயம் இதைத் தாங்கிக்க மாட்டான் வேணாம் பர்வதம்! விட்டுருவோம். நடக்கிறது நடக்கட்டும்.

இவ்ளோ யோசிக்கிறோம். மறு பக்கம் ஒண்ணு இருக்கே? அதைப் பத்தி யோசிச்சியா?''

''நீங்க எதைப் பத்தி சொல்றீங்க? எனக்குப் புரியலைங்க...'' விழித்தாள் பர்வதம்.

''இப்போ நம்ம இஷ்டத்துக்கு முடிவெடுத்துட்டு... கீழே இறங்கிப்போய்.. பொண்ணு பார்க்க வந்தவங்க கிட்டே... எங்க பொ**ண்ணுக்**கு விருப்பமில்லைன்னு சொன்னா... என்ன நடக்கும்? வந்தவங்க அதை கேஷுவலா எடுத்துக்கலாம். ஆனா... பெரிய சம்பந்தியும் நம்ப மூத்த மாப்பிள்ளையும் என்ன நெனப்பாங்க? இதை மிகப் பெரிய அவமானமா கருதி... நம்ம துர்காவை நாளைப் பின்னே.. மனசு நோகும்படி பேச மாட்டாங்களா?

அவளுக்கு இதனால கண்டிப்பா... புகுந்த வீட்டுல பிரச்சினை வரத்தான் செய்யும். நாம்ப எடுக்கப்போற முடிவால... பெரிய மகளோட வாழ்க்கையே கேள்விக்குறி ஆகும் இல்லையா?

இதை யோசிச்சு தான், சிவா தம்பி தெளிவா கங்காவோட விருப்பத்துக்கே விட்ருங்கன்னு சொல்லுச்சு''

''சிவாவுக்கு எப்படியொரு பெருந்தன்மை பாருங்க.. ஹூம்! நாம்ப குடுத்து வச்சது அவ்ளோ தான்...

சிவாவுக்கு மனைவியாகி அந்த பங்களாவுக்கு நம்ம கங்கா விளக்கேத்தி அந்தக் குடும்பத்துக்கு நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொண்டு வந்திருந்தா... எவ்ளோ நல்லா இருந்திருக்கும்?

நமக்கும் நன்றிக் கடனை தீர்த்த திருப்தி கிடைச்சிருக்கும், எதுவும் நடக்காம போச்சே? இனி காலத்துக்கும் இது நம்ம மனசை உறுத்திட்டே இருக்கப் போகுது...''

''என்ன செய்றது பர்வதம்? கீழே அவங்க காத்திட்டிருக்காங்க.. முகத்தை உம்முனு வச்சுக்காம... சிரிக்க முகத்தோட கலகலப்பா வந்து பேசறதுக்கு ஆயத்தப்படுத்திக்கோ.. வா!

ஆக வேண்டியதைப் பார்ப்போம்.''

''என்னங்க... ஒரேயொரு நிமிஷம் அவகாசம் குடுங்க. கங்கா கிட்ட ஒரு சந்தேகத்தை கேட்டு நிவர்த்தி பண்ணிட்டு வந்துடறேன்...''

''அவகிட்ட என்னத்தைக் கேட்டு தெரிஞ்சுக்கப் போறே?''

''இல்ல... இவ கெட்டிக்காரப் பொண்ணாச்சே? ஆனா இப்படி ஒரு முடிவு எடுத்திருக்காளே? அதுக்கு என்ன காரணம்? சிவாவைப் போய் நிராகரிச்சிருக்காளே... ஏதாச்சும் காரணம் இருக்கணும் இல்லையா? இவ ஏன் இந்த முடிவுக்கு வந்தா...? அப்படின்னு நான் தெரிஞ்சுக்கணும்...''

''நீ இப்படி கேட்டா... நமக்கு அவ எடுத்த முடிவுலே துளி கூட விருப்பமே இல்லைன்னு நெனச்சுப்பா... அப்புறம் நமக்காக வேண்டி... வேற விதமா பேசுவா... இதெல்லாம் தேவையா?

அவ நம்ம பொண்ணு தான்... நாம பெத்தவங்களா இருந்தாலும் நாகரீகமா நாசூக்கா நடந்துக்கணும். இதை நான் சிவா தம்பி மூலமா தெரிஞ்சுக்கிட்டேன்.

நீ எதையும் அவகிட்ட கேட்கவே கூடாது. இது என் உத்தரவு. மனசைத் தேத்திக்கிட்டு இறங்கி வா பர்வதம்!''

மெல்லிய குரலில் அதே சமயத்தில் உரிமையாய் நடேசன் அதட்டியதும்... இதற்கு மேல் பேசி பிரயோஜனம் இல்லை என்ற ரீதியில்... ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டப்படி... தனது சேலைத் தலைப்பால் முகத்தை அழுத்த துடைத்துக் கொண்டு கணவரின் பின்னால் நிதானமாக இறங்கி சென்றாள் பர்வதம்.

ஜன்னலருகே தற்செயலாக வந்து நின்ற கங்கா... நடேசனும், பர்வதமும் வருத்தம் தொனிக்க அதுவரை பேசிக் கொண்டிருந்ததை... ஒரு வரி விடாமல் செவிமடுத்து விட்டாள். அவர்களது பேச்சைக் கேட்டதும்... அவளுக்கு குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

மலர்மேனி மெல்ல நடுங்கியது. நெஞ்சில் நெருஞ்சி முள் சுருக்சுருக்கென்று குத்தியது. ஓடிச்சென்று அவர்களை தடுக்கவும் முடியவில்லை. அதே சமயத்தில் மனதும் உறுத்திக் கொண்டே இருந்தது.

ஓடிப்போய் ''ஒப்புத்தாம்பூலம்' நடக்காம தடுத்துடலாமா? தடுத்தால் என்ன ஆகும்?

குமார் அத்தான் குடும்பமே அவமானத்துல கொதிச்சுப் போய் துர்காவை இம்சை செய்யத் தொடங்கி விடுவார்களே?

நான் எடுத்த முடிவால்... அம்மாவும் அப்பாவும் காலத்திற்கும் வருத்தத்தோடும் மன உறுத்தலோடும் இருக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார்களே?

நான் தவறு செய்து விட்டேனோ? அகியின் பேச்சைக் கேட்டு கொண்டு அவசர முடிவு எடுத்து விட்டேனா?

அகியுடன் கலந்து பேசிய எனக்கு... பெற்றவர்களுடன் கலந்து பேச வேண்டும் என்று ஏன் தோன்றவில்லை?

அம்மாவும் அப்பாவும் பேசியதை வைத்துப் பார்த்தால்... சிவா என்ற அற்புதமான மனிதரை நான் தவற விட்டு விட்டேனா?

கண்ணிருந்தும் குருடியாகி விட்டேனா?

கங்காவின் மனதில் கேள்விகள் முளை விட்ட தருணத்தில் அவளது செல்போன் சிணுங்கியது.

அகிலாவின் நம்பர் திரையில் மின்னி சிரித்தது.

''ஹலோ அகி''

''ஹலோ... என்ன கங்கா? பொண்ணு பார்க்க வந்தாங்களா? என்ன சொன்னாங்க? மாப்பிள்ளை எப்படி இருக்காரு? உனக்கு பிடிச்சிருக்கா? அவருக்கு உன்னைப் பிடிச்சிருக்காமா? உன்னை எப்படி பிடிக்காம போகும்? நீ தான் ஈடு இணை இல்லாத பேரழகியாச்சே? நானே பேசிட்டிருக்கேன். புதுப்பொண்ணு வெட்கப்படாம வாயைத் திறந்து பேசேன்''

''**இன்னும்** கொஞ்ச நேரத்துல 'ஒப்புத்தாம்பூலம்' நடக்கப் போகுது...''

''ஓ... இன்னிக்கே நிச்சயதார்த்தமே பண்ணிடறாங்களா? குட்! நான் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் ஒரே வரியில பதில் சொல்லிட்டே... நீ அதிரூப தேவதை மட்டுமில்ல. அதிபுத்திசாலியும் கூட...''

மறுமுனையில் மகிழ்ச்சி தாளாமல் கலகலவென்று சிரித்தாள் அகிலா.

''எனக்கு என்னமோ மனசுல உறுத்தலாவே இருக்கு அகி''

''நீ கரெக்டான முடிவு தான் எடுத்திருக்கே கங்கா! அரவிந்த் தான் உனக்கு சகல விதத்திலேயும் பொருத்தமா இருப்பாரு.

அவர் மாடர்ன் டைப்! ரொம்ப டீஸன்டா இருப்பாருன்னு எல்லாரும் சொல்றாங்கல்ல? சிவா ஒரு பசுத்தோல் போர்த்திய புலி... அதுவும் தவிர சரியான பழம் பஞ்சாங்கம்! நாகரீகம்னா என்னன்னு தெரியாத ரகம்...!

வீட்டுல பெரியவங்க உன் மனசை கலைக்கப் பார்ப்பாங்க. நீ எடுத்த முடிவுல ஸ்ட்ராங்கா இரு!'' அதட்டினாள் அகிலா.

''இல்ல... அப்பாவும் அம்மாவும் ரொம்ப வருத்தமா பேசிக்கிட்டதை தற்செயலா கேட்டேன். அதான்...''

''பேசிட்டுப் போகட்டுமே...! அவங்க வருத்தப்படறாங்கன்னு... இரக்கப்பட்டா... நீ கால முச்சூடும் கண்ணீர் சிந்திட்டு இருக்க வேண்டியது தான்... சிவாவோட மிஸஸ் ஓடிப் போயிருக்கா... ஒரு பொண்ணு இவனை விட்டுட்டு ரெண்டு நாள்லே ஓடியிருக்காள்னா... அது சாதாரண விஷயமில்ல... யோசிக்க வேண்டிய விஷயம்! எந்த அளவுக்கு இவன் மோசமானவனா இருந்திருக்கான்.

பகல் வேஷக்காரன்கிட்டேயிருந்து நீ தப்பிச்சுக்கிட்டே... நிம்மதியா சந்தோஷமா இரு. அரவிந்த் கூட நீ அமோகமா வாழப் போறே... அதை நெனச்சு சந்தோஷப்படுவியா? கண்டதையும் போட்டு மனசைக் குழப்பிட்டு இருக்கியே கங்கா...''

''அப்பாடா... நீ பேசினதைக் கேட்டதும் தான் மனசு சமாதானமாயிருக்கு அகி! தேங்க்ஸ் அகி''

''தேங்க்ஸ் சொல்லி என்னை மூணாம் மனுஷியாக்கிடாதே கங்கா! இன்னிக்கு உனக்கு 'ஒப்புத்தாம்பூலம்' நடக்கப் போகுதுன்னு தெரிஞ்சிருந்தா... நானும் பெர்மிஷன் போட்டுட்டு ஆபீஸ்லே இருந்து உன் கூடவே கிளம்பி வந்திருப்பேனே? எனி ஹவ்! மை ஹார்ட்டி கங்கிராஜுலேஷன்ஸ் கங்கா!''

''கங்கிராட்ஸ் சொல்லிட்டு அப்படியே இருந்துடாதே... ஆபீஸ் விட்டதும் நேரா நீ நம்ம வீட்டுக்கு வா! வந்து நேர்லே

என்னை வாழ்த்திட்டு விருந்து சாப்பாட்டை சாப்பிட்டுட்டு தான் போகணும்...''

''கண்டிப்பா... வரேன் கங்கா! அதை விட வேற என்ன வேலை எனக்கு இருக்கு?'' பொங்கிப் பொங்கி சிரித்தாள் அகிலா.

செல்போனை அணைத்து விட்டு தனக்குள் பேசிக் கொண்டாள்.

'ஆயிரம் அரவிந்த் வந்து நின்னாலும்... சிவாவுக்கு ஈடாக முடியுமா? சிவாவோட கால் தூசு பெறுவானா இந்த அரவிந்த்? பைத்தியக்காரி... சிவா ஒரு கோஹினூர் வைரம்டி இந்த அரவிந்த் பயல் சாதாரண காக்கா பொன் தான்.

உன் கைக்கு கிடைக்க இருந்த வைரத்தை நான் சாமர்த்தியமா தட்டி விட்டுட்டேன். பார்த்தியா?

முதல் முறையா எனக்கு வெற்றி கிடைச்சிருக்குடி... இதைக் கொண்டாட வேணாமா? உன் வீட்டுக்கே வந்து உன் விருந்து சமையலை சந்தோஷமா சாப்பிடறேன்டி...'

விதி சிரித்தது. கங்காவை கதற வைக்க தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

## 10

**சிக்கல்** சுக்கலாக நொறுங்கிப் போய் விட்டான் சிவா. **இவனைத்** தேடிக் கொண்டு அலுவலகத்திற்கே வந்து **விட்டிருந்**தார் நடேசன்.

''**என்ன** மாமா? இவ்ளோ தூரம்? வீட்டுக்கு வந்திருக்கலாமே? ஒரு போன் பண்ணியிருந்தா நான் நீங்க இருக்கிற இடத்துக்கு வந்திருப்பேனே? வாங்க... உட்காருங்க மாமா!''

உபசரித்தான் சிவகுரு.

''உன் முகத்தை ஏறிட்டுப் பார்த்துப் பேசறதுக்கு... எனக்கு எப்படியோ இருக்கு சிவா! சுப்புவை நேர்ல பார்த்து விஷயத்தைச் சொல்றதுக்கு எனக்கு தைரியம் இல்ல... அதனால தான் உன்னைப் பார்க்க வந்தேன்...''

மிடறு விழுங்கினார்.

''கங்கா அரவிந்தை செலக்ட் பண்ணிட்டா இவ்ளோ தானே மாமா? இதுல வருத்தப்படறதுக்கு என்ன இருக்கு? அப்பாகிட்டே நான் பக்குவமா எடுத்துச் சொல்லிக்கிறேன். நீங்க வருத்தப்படாதீங்க. ரெண்டாவது பெண்ணை நல்ல இடத்துல கட்டிக் குடுக்கப் போறீங்க. உங்க கடமையை முடிக்கப் போறீங்க. சந்தோஷமா இருங்க மாமா...''

''விலை மதிக்க முடியாத மனித குல மாணிக்கம் நீ! உன்னைப் போய் கங்கா தவற விட்டுட்டாளே... எனக்கும் பர்வதத்துக்கும் ராத்திரி முழுவதும் சுத்தமா தூக்கமே இல்ல... இந்த வருத்தமும் வேதனையும் காலத்துக்கும் எங்களுக்கு இருக்கும் சிவா...''

கண்ணீர் உகுத்தப்படி பேசினார் நடேசன்.

''அட... என்ன மாமா இது? முதல்லே கண்ணைத் துடைங்க. கங்கா தான் முடிவு எடுக்கணும்னு... நான் தானே உங்ககிட்டே சொல்லி அனுப்பிச்சேன்...? நான் சொன்னபடி உங்க விருப்பத்தை அவ மேல திணிக்காம எட்ட நின்னு... அவளை இயல்பா முடிவு எடுக்க வச்சிருக்கீங்க...

என் வார்த்தைக்கு மதிப்பளிச்சு... நீங்க செயல்பட்டதை நெனச்சு நான் சந்தோஷப்படறேன் மாமா! நன்றி மாமா...''

''ஐயோ சிவா! ஏற்கனவே மனசாட்சி குத்தி என்னைக் கொன்னுட்டிருக்கு. இதுல நீ வேற நன்றி சொல்றியே? நீ பேசப் பேச வேதனை தான் அதிகரிக்குது...''

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க மாமா! நிம்மதியா இயல்பா இருங்க. அத்தைகிட்டேயும் சொல்லி வைங்க. நீங்க இப்படி இருந்தா கங்காவுக்கு ஒரு மாதிரியா நெருடலா இருக்காதா? கல்யாணப் பொண்ணுக்கு கலக்கமும், சங்கடமும் வரும்படியா நடந்துக்காதீங்க.

இன்னும் கொஞ்ச நாள்லே உங்களை விட்டுப் பிரிஞ்சு புகுந்த வீட்டுக்கு அவ போயிடுவா... இங்க இருக்கிற வரைக்கும் சந்தோஷமா அவ இருக்க வேணாமா? ப்ளீஸ்... இயல்பா கலகலப்பா இருங்க மாமா...!

இன்னாருக்கு இன்னாருன்னு இறைவன் என்னிக்கோ எழுதி வச்சுட்டாரு. அதுபடி தானே எல்லாமே நடக்கும்? நம்ம கையில ஒண்ணுமே இல்ல மாமா... பகவான் மேல பாரத்தைப் போட்டுட்டு நிம்மதியா கல்யாண வேலைகளைப் பாருங்க. ஏதாச்சும் உதவி தேவைப்பட்டா தயங்காம கேளுங்க. கங்கா கல்யாண செலவுக்கு எவ்ளோ வேணும்னாலும் பணம் தர நான் தயார்!

நான் உங்க நண்பரோட மகன் மட்டுமில்ல... உங்களுக்கும் மகன் மாதிரி தான். உரிமையா நான் என்ன செய்யணும்னு உத்தரவு போடுங்க மாமா! நான் ரொம்பவே சந்தோஷப்படுவேன்''

வாயடைத்துப் போய் விட்டார் நடேசன்.

''நாங்க கொடுத்து வச்சது அவ்ளோ தான்'' மெல்ல முணு முணுத்தபடி எழுந்து கொண்டவர் ''சுப்புகிட்ட சொல்லிடு சிவா! நான்... வரட்டுமா?'' தலையாட்டி தளர்வாய் விடைபெற்றார்.

அவரது உருவம் மறைந்ததும் அப்பாவுக்கு போன் செய்து தகவலை தெரிவித்தான்.

''இதை நான் எதிர்பார்க்கலை சிவா! கங்கா ஏன் உன்னைப் போய் நிராகரிச்சாளாம்?'' வருத்தம் தொனிக்க சுப்பிரமணியம் கேட்டார்.

''தெரியலைப்பா... ஒரு வேளை ரெண்டாம்தாரமா வாழ்க்கைப் படறதுக்கு அவ யோசிச்சிருக்கலாம்...''

''உன்னைப் பத்தி சகலமும் அந்தக் குடும்பத்துக்கு தெரியுமே... நடேசன் கங்காவுக்கு எடுத்து சொல்லியிருக்கலாமில்ல?''

''அவ படிச்சவள்... அவளோட முடிவுக்கு விடுங்கன்னு. நான் தானே நடேசன் மாமாகிட்டே அழுத்தமா சொல்லி அனுப்பி னேன்?''

''நான் போய் பேசிப் பார்க்கட்டுமா சிவா?''

''வேணாம்... நீங்க எதுவும் பேச வேணாம். ஒப்புத்தாம்பூலம் மாத்திட்டாங்கல்ல? பாதிக் கல்யாணம் நடந்த மாதிரி தான். நீங்க பேசப் போனீங்கன்னா... செய்த உதவிக்கு அந்தப் பொண்ணை கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைக்கிறதுக்காக... வந்திருக்கீங்கன்னு அந்தக் குடும்பமே ரொம்ப சங்கடப்படும்.

இந்தப் பேச்சை இத்தோட விட்டுருங்கப்பா. நான் வீட்டுக்கு வந்தா... இது விஷயமா என்கிட்ட பேச வேணாம். முடிஞ்சு போன விஷயத்தை திரும்பத் திரும்ப பேசறதிலே... எந்தப் பிரயோ ஜனமும் இல்லை. நடேசன் மாமாவுக்கு இது சம்பந்தமா நீங்க போன் பண்ணிப் பேசாதீங்கப்பா...''

''சிவா! நீ மறுகல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டதே பெரிய, விஷயம். கங்காவை உனக்கு பிடிச்சிருக்கப் போய்... நீ சம்மதிச்சே! இவளோ பக்குவமா பேசறேயில்ல? அவ இனி உனக்கு கிடைக்கப் போறதில் லைன்னு தெளிவாயிடுச்சு... கண்ணா! நாங்க வேறொரு பொண் ணைப் பார்க்கிறோம்...''

மறுமுனையில் அவர் பேசி முடிக்கும் முன்... அவசரமாக சிவா குறுக்கிட்டான்.

''வேணாம் அப்பா! தயவு செய்து இந்தப் பேச்சுக்கு இன்னிக் கோட ஒரு முற்றுப்புள்ளி வச்சுடுங்க... கல்யாணத்துக்கும், எனக்கும் ராசி இல்லைப்பா...''

''சிவா இப்படி சொன்னா எப்படிப்பா? எங்களைக் கொஞ்சம் புரிஞ்சுக்கோ...''

''அப்பா! என்னைப் பத்தி நல்லாத் தெரிஞ்ச கங்காவே... என்னை நிராகரிச்சுட்டா... எந்தப் பெண்ணுக்கும் என்னைப் பிடிக்காதுப்பா விட்டுடுங்க. இந்தக் காலத்துல இளைஞர்கள் மாதிரி நான் இல்லை யில்ல...?''

''ஐயோ! தங்கம்டா நீ! கண்ணிருந்தும் குருடியா இந்த கங்கா இப் படி பண்ணிட்டாளே?''

''விடுங்கப்பா... முடிஞ்சு போனதைக் கிளறாதீங்க. நான் இப் படியே இருந்துட்டுப் போறேன். பிளீஸ் அப்பா!''



அத்துடன் போனை அணைத்து விட்டான் சிவகுரு.

துக்கம் உள்ளூர பீறிட்டுக் கொண்டு வந்தது.

ஏமாற்றமும் இனம் புரியாத வலியும் சேர்ந்து நெஞ்சைப் பிசைந் தது.

உண்மையான காதலுக்கு சக்தி இருக்கும். அது காதலை சேர்த்து வைக்கும் என்று நம்பியிருந்தேனே?

கங்கா! மானசீகமா என் மனசுல உனக்காக கோட்டை கட்டி வச் சிருந்தேனே...

அந்த மனக்கோட்டை இப்போ சுக்குநூறா உடைஞ்சு சிதறி டுச்சே?

ஏன்? என்ன காரணம்? எதனால என்னை உனக்குப் பிடிக்காம போச்சு?

சரி... நீ எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும். உனக்கு ஒரு குறையும் வரக்கூடாது.

நீ அமோகமா வாழணும். மனசார வாழ்த்தறேன். ஆனா... ஒண்ணு மட்டும் நிச்சயம்! என் மனசுல சிம்மாசனம் போட்டு உட் கார்ந்திருக்கிற என் காதல் தேவதை கங்கா. மானசீகமா கடைசி வரைக்கும் என் கூடவே இருக்கப் போறா... என் தேவதையை நான் ஆராதனை செய்துட்டே இருப்பேன்.

அந்த கங்காவை யாரும் என்கிட்டேயிருந்து பிரிக்க முடியாது. என் காதல் தோத்துடுச்சு. நீ எனக்கு கிடைக்கலை. இதை நான் நெனச்சு வேதனைப்பட்டுட்டே இருந்தா... துக்கம் தாங்காம நெஞ்சு வெடிச்சு செத்துடுவேன். அதனால பாவனா சொரூபத்துல நான் உன்னைப் பார்க்கப் போறேன். நீ என்னை விட்டு விலகவே இல்லைன்னும் நீ எனக்கு கிடைச்சுட்ட மாதிரியும் கற்பனை பண்ணிக்கிட்டு. உன் கூட வாழப் போறேன் கங்கா! உன்னைத் தவிர வேற எந்தப் பெண் ணுக்கும் என் வாழ்க்கையில இடமே இல்லை கங்கா!''

மனதில் உள்ளதை அப்படியே டைரியில் எழுத்து வடிவில் கொ ட்டி தீர்த்தான் சிவகுரு.

## 11

நிச்சயதார்த்தம் நடந்த உடனே... அரவிந்த் சபை யில் வைத்தே ''பொண்ணுகிட்டே அஞ்சு நிமிஷம் நான் தனியா பேசப் பிரியப்படறேன்'' என்று கேட்டு விட் டான்.

''இந்தக் காலத்துல இது ரொம்ப சகஜம் தானே மாமா? என் தம்பி ரொம்பவும் பிரீடைப்! நிச்சயமும் ஆயிடுச்சல்ல? பேசி க்கட்டுமே மாமா...''

மூத்த மாப்பிள்ளை குமார் பரிந்து கொண்டு பேசியதும்... நடேச

னால் மறுத்துப் பேச முடியவில்லை.

''மாப்பிள்ளை! மாடியில தான் கங்கா இருக்கா. போய் பேசுங்க...'' அனுமதித்ததும் சந்தோஷமாய் மாடியேறிப் போனான் அரவிந்த்.

''ஹாய் கங்கா!''

கட்டிலில் அமர்ந்தபடி ஏதோவொரு வார இதழைப் புரட்டிக் கொண்டிருந்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது.

''வா... வாங்க...''

சட்டென்று எழுந்து நின்றாள்.

''ஏன் எழுந்துக்கிறே? நீ கேஷுவலா இருக்கலாம். இருக்கணும் நாம படிச்சவங்க. கணினி யுகத்தைச் சேர்ந்தவங்க. பழைய கட்டுப் பெட்டி தனத்தை எல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டு.. பிரீயா இருக் கணும், பழகணும்.

''வாழ்க்கை வாழ்வதற்கே இல்லையா? நமக்கு கிடைக்கிற ஒவ் வொரு நிமிஷமும் போனா... திரும்பக் கிடைக்காது. ஒவ்வொரு நிமிஷத்தையும் வீணாக்காம ஜாலியா ஹாயா என்ஜாய் பண்ணனும். அது தான் என் பாலிசி! சதா சந்தோஷத்தை மட்டும் அனுபவிக் கணும். சுதந்திரமா பறவைகள் மாதிரி எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாம சுற்றித் திரியணும். நானும் அப்படித்தான் இருப்பேன். என்னை சுத்தி இருக்கிறவங்களும் அப்படித்தான் இருக்காங்க. நீயும் இனிமே என்னை மாதிரியே இருக்கணும்.

நாளைக்கு என்ன நடக்கும்?னு யாராலேயும் சொல்ல முடியாது. இன்னிக்கு நம்ம கையில கிடைச்சிருக்கிற நேரத்தை சந்தோஷமா செலவிடணும். சதா ஹேப்பியாவா இருந்தா... எந்த நோயும் எப் பவும் நம்மை அண்டாது. என்ன சொல்றே?''

அவன் பேசியதைக் கேட்டு திகைத்துப் போன கங்கா... மெது வாக தலையை அசைத்தாள்.

''நீ இதுக்கு முன்னாடி எப்படி இருந்தியோ எனக்குத் தெரியாது. இந்த நிமிஷத்துலேர்ந்து... நீ டோட்டலா மாறணும். கலகலன்னு பேசணும். சிரிக்கணும். சொல்லப்போனா... என்னைப் போலவே நீயும் ஜாலி டைப்பா... பிரீடைப்பா மாறணும் சரியா?''

அதற்கும் வேறு வழியின்றி தலையை அவள் அசைத்தாள்.

''என்ன நீ? நீ பதிலே பேச மாட்டியா? எல்லாத்துக்கும் பொம்மை மாதிரி தலையாட்டினா எப்படி? கங்கா! ஏன் இப்படி இருக்கே? யூ ஆர் எஜுகேட்டட் மை டியர்...!'' பேசியபடி உரிமையாய் அவளது கட்டிலில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டான் அர விந்த்.

கங்காவுக்குள் இனம் புரியாத சங்கடம் ஜனித்தது.



அவளது கால்கள் தன்னிச்சையாய் மூன்றடி பின்னால் நகர்ந்தன.

''கமான் கங்கா! ஏதாச்சும் பதில் சொல்லேன்...''

''நான் டிரை பண்றேன்...''

''எதுக்கு டிரை பண்ணப் போறே?''

''கொஞ்சம் கொஞ்சமா என்னை மாத்திக்கிறதுக்கு டிரை பண்றேன்னு சொன்னேன்...''

''குட்! நம்ம கல்யாணத்துக்கு இன்னமும் மூணு மாசம் டைம் இருக்கு. எங்க வீட்டுல இது கடைசிக் கல்யாணங்கிறதால... ரொம்ப கிராண்டா பண்ணனும்னு பிரியப்படறாங்க. சிட்டியில இருக்கிற பிரமாண்டமான 'தீர்க்க சுமங்கலி' கல்யாண மண்டபத்துக்கு மூணு மாசத்துக்கு முன்னாடியே புக் பண்ணியாகணும்.

இப்போ... அந்த மண்டபத்துக்காக தான் நம்ம கல்யாணம் மூணு மாசத்துக்கு தள்ளிப் போயிருக்கு. மூணு மாசமா?ன்னு எனக்கு மலைப்பா தான் இருக்கு. வாட் டு டு? நீ நம்ம மேரேஜுக் குள்ளே டோட்டலா மாறிடணும். மாறிடுவேன்னு நான் நம்பறேன் சரிதானே கங்கா?''

''சரிங்க...''

''என்னங்க... வாங்க போங்க'ன்னு எல்லாம் எனக்குப் பிடிக் கலை பிரீயா அரவிந்த்'ன்னு கூப்பிடு! அரவிந்த்... வா! போ'ன்னு கேஷுவலா பேசினா ரொம்பவும் சந்தோஷப்படுவேன்...''

''அ... அது எப்படி?''

''அது அப்படித்தான்... நீயும் நானும் லைப் பார்ட்னர்ஸ். நமக்குள்ளே எந்த பார்மாலிட்டீஸும் வேண்டாம் கங்கா! யூ ஆர் ஸோ பியூட்டிபுல்! அரவிந்துக்கு வாய்ச்ச மனைவி பேரழகி மட்டு மில்ல... ரொம்ப மாடர்னாவும் இருக்காங்கன்னு எல்லாரும் சொல் லணும். அது தான் என் ஆசை...

உன்னோட போன் நம்பரைச் சொல்லு! என் 'செல்'லுல ஸேவ் பண்ணிக்கிறேன். இனி நாம நிறைய பேசணும். அடிக்கடி சந்திக் கணும்.

மேரேஜுக்கு முன்னாடி நீயும் நானும் ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிஞ்சுக்கணும். அப்பத்தான் நாம ஆதர்ஷ தம்பதியா திகழ முடியும்''

கங்கா தனது செல்போன் எண்ணை சொல்லவும்... அதை போனில் ஆர்வமாய் பதித்துக் கொண்டான்.

''என்னோட ஆபீஸ்லே... கூடிய சீக்கிரத்துல புராஜெக்ட் விஷயமா என்னை யு.எஸ்ஸுக்கு அனுப்பி வைப்பாங்க... அந்த புரா ஜெக்ட்டை திருப்திகரமா முடிச்சுக் குடுத்துட்டா... எனக்கு நல்ல பேரும் பிரமோஷனும் கொடுப்பாங்க.

நீ கூட சமீபத்துல தான் புதுசா வேலைக்கு சேர்ந்தியாமே? குமார் அண்ணா சொன்னாரு.

படிப்புலே நீ கெட்டிக்காரியாம். நம்ம மேரேஜுக்கு அப்புறமும் நீ வேலைக்குப் போகணும்னு பிரியப்பட்டா... தாராளமா நீ போகலாம். எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்ல கங்கா!''

''தேங்க் யூ...'' மெல்ல முணு முணுத்தாள் கங்கா.

''இதுலே 'தேங்க்ஸ்' சொல்றதுக்கு என்ன இருக்கு? கணவனா இருந்தாலும் உன்னோட விருப்பு வெறுப்புலே நான் தலையிட்டு கட்டுப்படுத்தமாட்டேன். நீ சுதந்திரமா இருக்கலாம். என் ஆசைப்படி நீ பிரீயா ஹாயா ஜாலியா இருக்கணும். மாறணும். உன்னை மாத்திக்கணும்... ஒகே வா? இனி போன்லே டிடெய்லா பேசிக்கலாம். வரட்டுமா கங்கா? பை... ஸீ யூ...!''

உரிமையாய் அவளது கையைப் பிடித்து குலுக்கினான். கையை படக்கென்று உருவிக் கொண்டாள் கங்கா.

அவளது திகைப்பையோ... அழகிய முகத்தில் பரவிய அதிர்ச்சியையோ... அரவிந்த் கண்டு கொண்டதாகவே தெரிய வில்லை. அவன் அறையை விட்டு வெளியேறியதும்... மழை பெய்ந்து ஓய்ந்தாற் போலிருந்தது.

என்ன இது? கட்டின மனைவியாக இருந்தாலும் அவளது விருப்பு வெறுப்பில தலையிட்டு கட்டுப்படுத்த மாட்டேன்கிறார்.

அதே சமயத்துல அவரது விருப்பத்துக்கு ஏற்ப பிரீயா ஜாலியா நீ மாறணும். உன்னை மாத்திக்கணும் என்று உத்தரவும் போடுகிறார்.

முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறாரே? மூன்று மாதத்திற்குள் என்னை முற்றிலுமாக மாற்றிக் கொள்ள முடியுமா?

அதெப்படி என் சுபாவத்தை மாற்றிக் கொள்வதாம்? சதா ஜாலியா சந்தோஷமாக இருக்க வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே என்கிறார். கட்டுப்பெட்டித்தனமா இருக்கவே கூடாது என்கிறாரே?

இவருக்கும் எனக்கும் சரிப்பட்டு வருமா?

திருமணம் ஆவதற்குள் உத்தரவே போட்டு விட்டாரே?

'டோட்டலா உன்னை மாற்றிக் கொள்' என்கிறாரே...?

அடுத்தவர்களின் மனதை... உணர்வுகளைப் புரிந்து கொள்ள முயற்சிக்காமல் தான் தோன்றித்தனமாய் அதிகாரமாக அல்லவா நடந்து கொள்கிறார்?

கேஷுவலாக இரு' என்கிறார். சரி! என் குணத்தை சுபாவத்தை முற்றிலுமாக இவருக்காக மாற்றிக் கொண்டால் நான் எப்படி கேஷுவலாக இருக்க முடியுமாம்?

ஒரு பக்கம் 'நான் ஒரு மாடர்ன் டைப்' என்கிறார். மறுபக்கம் அதிகாரத்தை நிலை நாட்டுகிறார்.



அப்பா என்னை சுதந்திரமாக முடிவெடுக்கச் சொன்னார்.

நான் தப்பான முடிவு எடுத்து விட்டேனா?'

உள்ளுக்குள் திகில் கிளை விட்டுப் பரவியது.

வருங்காலத்தை பற்றிய பயம் சொரேலென்று அடி வயிற்றை முறுக்கியது.

''என்னது இது? ஒரேடியாக இந்த அபிப்பிராயத்துக்கு வந்தால் எப்படி?

அஞ்சு நிமிஷம் பேசியதை வைத்துக் கொண்டு... ஒட்டுமொத்த குணத்தையும் தப்பாக எடை போடுவது முட்டாள்தனம் இல்லையா?

அவசரப்படாமல் நிதானமாக இருக்க வேண்டும். ஒருவேளை அரவிந்த் நல்லவராகவே இருந்து விட்டால்...?

போகப் போக தானே குணம் தெரியும். பார்க்கலாம்...'' தன்னைத் தானே கங்கா சமாதானம் செய்து கொண்டாள்.

மறுநாள் அவள் எதிர்பார்க்காத நபரை சந்தித்தபோது அதிர்ந்தே போனாள் கங்கா.




அடுத்த நாள் காலையில் ஆபீசுக்கு சென்று தற்செயலாக ஹேண்ட் பேக்கிலிருந்து செல்போனை எடுத்து தனது டேபிளில் வைத்தபோது தான் கவனித்தாள்.

ஏகப்பட்ட மிஸ்ட் கால்கள்...

''எப்படி கவனிக்காம இருந்தேன்? ஓ... சைலன்ட் மோடுலே போட்டு வச்சுட்டு மறந்துட்டேன் போலிருக்கே...''

அவள் பட்டனை அழுத்தியது தான் தாமதம்...

அதே எண்ணிலிருந்து அழைப்பு வந்தது.

பேசியது அரவிந்த் தான்.

''குட் மார்னிங் கங்கா! என்ன நீ போனை அட்டெண்ட் பண்ணவே மாட்டியா? அடிச்சு அடிச்சு ஓய்ஞ்சு போயிட்டேன் தெரியுமா?''

''சாரி! சைலன்ட் மோடுலே போட்டு வச்சுட்டு மறந்துட்டேன். இப்ப தான் பார்த்தேன்...''

''அதெப்படி? நம்பர் வாங்கினேனே? நான் போன் பண்ணுவேன்னு உனக்கு எப்படி நெனப்பு இல்லாம போச்சு? நான் தான் சதா உன் ஞாபகமா இருக்கேன் போல... உனக்கு சுத்தமா என்னைப் பத்தி நெனப்பே இல்லையா கங்கா? இட் இஸ் நாட் நைஸ்...''

உரிமை எடுத்துக் கொண்டு கடிந்து கொண்டான்.

அவள் 'சாரி' கேட்டுக் கொண்ட பின்பும்... அவன் கடுமையாகப் பேசிய விதம்... கங்காவுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

''அதான் நான் கவனிக்காம இருந்துட்டேன்'னு சொன்னேன்

இல்ல?''

''தப்பு கங்கா! கவனம் இருந்திருக்கணும். என் விஷயத்துல நீ கவனமா நடந்துக்கணும். ஓகே...! பிரண்ட்ஸ் என்கிட்ட டிரீட் கேட்டாங்க. நரேன்'னு சொல்லியிருக்கேன். என் கிளோஸ் பிரண்ட் பாரின்லேர்ந்து வந்திருக்கான். ஹோட்டல் சோழாவுல தங்கியிருக் கான்.

இன்னிக்கு ஈவ்னிங் அவனை நான் மீட் பண்ணப் போறேன். ச ாயந்தரம் ஆபீஸ் விட்டதும் நேரா நீ வீட்டுக்குப் போயிடுவியா?''

''வழக்கமா வீட்டுக்குத் தான் போவேன். ஆனா அம்மா இன் னிக்கு நேரா குன்றத்தூர் கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிக் கிட்டு வீட்டுக்கு வரச் சொன்னாங்க. நேத்தைக்கு நிச்சயம் ஆயிட்ட தால் பகவானை வேண்டிக்கிட்டு வரச் சொன்னாங்க...''

''ஸோ... நீ நேரா கோவிலுக்குப் போறே...''

''ஆமா...''

''டெய்லி பஸ்லே தான் ஆபீசுக்கு வந்து போறியா?''

''இதுவரைக்கும் அப்படி தான்... அப்பா என்னை ஸ்கூட்டி வாங்கிக்கச் சொன்னாரு. இன்னும் ஒரிரு நாள்லே வண்டி எடுத்துட லாம்னு இருக்கோம்...''

''குட்! அதான் நல்லது. பிரீயா நெனச்ச எடத்துக்கு சுதந்திரமா நிம்மதியா போயிட்டு வரலாம். இல்லையா?'' அவள் அதற்கு பதில் சொல்லாமல் அமைதி காத்தாள்.

''என்ன சைலண்டாயிட்டே?''

''இல்ல... டைமாகுது. புராஜெக்ட் ஒர்க்கை முடிச்சு... நாளை பைலை சப்மிட் பண்ணியாகணும்...''

''ஓகே... யூ கேரி ஆன்... ஸீயூ... பை!''

பெருமூச்சு விட்டபடி சேரில் சாய்ந்தமர்ந்து விழிகளை மூடிக் கொண்டாள்.

இனம் தெரியாமல் மனதில் ஒரு படபடப்பு!

படபடப்பு அடங்க சில கணங்கள் பிடித்தன. அன்று மாலை யில் குன்றத்தூர் மலையடிவாரத்தில் இருந்த கடையில் அர்ச்சனை தட்டை வாங்கிக் கொண்டு நிதானமாக படிகளில் ஏறினாள்.

இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை அரவிந்த் அவளுக்கு போன் செய்து நச்சரித்துக் கொண்டிருந்தான்.

''ஒர்க்கை முடிச்சுட்டியா?''

''பிரீயா இருக்கியா? இல்லையா?''

''எனக்கு எப்பவும் உன் ஞாபகம் தான்... உனக்கு?''

''அப்பப்போ என் நெனப்பு உனக்கு வருதா? இல்லையா?''

இப்படி ஏதாவது ஒரு கேள்விக்கணையை தொடுத்து அவளை





தொந்தரவு செய்து இம்சித்தான்.

மதியம் மூன்று மணிக்கு மேல் செல்போனில் சார்ஜ் சுத்தமாக இறங்கி ஆப் ஆனதும்... கங்காவுக்கு 'அப்பாடா' என்றிருந்தது.

'அரவிந்த் டீஸண்ட் டைப்!' என்று அத்தான் கூறியிருந்தாரே? அலுவலக நேரத்தில் போன் செய்து இடைஞ்சல் செய்யக்கூடாது என்ற நாகரீகம் கூட தெரியவில்லையே? யோசனையுடன் முன் மண்டபத்தைக் கடந்து கர்ப்பக்கிரகத்தை நோக்கி நடந்தாள்.

கோவிலில் அந்த மாலை நேரத்தில் ஓரிரு பக்தர்களே காணப்பட்டனர்.

யாரோ கணவனும்- மனைவியும் கைக்குழந்தையுடன் முதுகு காட்டி நின்றிருந்தனர்.

''யாரு பேருக்கு அர்ச்சனை?'' குருக்கள் கேட்டதும் அந்த இளம் பெண் கையிலிருந்த குழந்தையை ஒரு பார்வை பார்த்து விட்டு நிமிர்ந்தாள்.

''குழந்தை பேருக்கு... பேர் சிவகுரு. கேட்டை நட்சத்திரம் விருச்சிக ராசி'' என்றாள்.

''சிவகுரு'' என்றதும்... தூண்களில் செதுக்கப்பட்டிருந்த சிற்பங்களை ரசனையுடன் நோட்டமிட்டுக் கொண்டிருந்த கங்கா சட்டென்று திரும்பிப் பார்த்தாள்

''குழந்தை பேருக்கு ஒரு வருஷம் ஆனாத்தான் அர்ச்சனை செய்ய முடியும். இப்போ குழந்தைக்கு நாலு மாசம் இருக்குமா?'' கேட்டார் குருக்கள்.

''ஆமா ஸ்வாமி! குழந்தை பேருக்கு அர்ச்சனை செய்யாட்டி பரவாயில்ல சாமி! எங்களை வாழ வச்ச தெய்வத்தோட பேருக்கு அர்ச்சனை செய்யலாம் இல்லையா?''

''தாராளமா செய்யலாமே? பேர் நட்சத்திரம், ராசி, கோத்திரம் எல்லாம் சொல்லுங்கோ... பண்ணிடலாம்....''

''பேரு சிவகுரு. கிருத்திகை நட்சத்திரம் முதல் பாதம். மேஷ ராசி, வசிஷ்ட கோத்திரம்...'' என்றாள் அந்த இளம்பெண்.

தழுதழுத்த குரலில் கூறிய பெண்ணை திகைத்துப் போய் ஏறிட்டார் குருக்கள்.

''ஏம்மா கண் கலங்கறீங்க? உங்களை வாழ வச்ச தெய்வத்தோட பேரும் 'சிவகுரு' தானா?''

''ஆமா ஸ்வாமி! இன்னிக்கு நாங்க அமோகமா இருக்கோம். இந்த வாழ்க்கை அவரு போட்ட பிச்சை தான். எங்களைப் பொறுத்தவரை சிவகுரு சார் தான். எங்களோட கண் கண்ட தெய்வம்...''

''நான் இங்க குருக்களா வேலைக்கு சேர்ந்த ஆறு மாசம் தான் ஆகிறது. இந்த கோவில்லே ஒரு உபயதாரர் புண்ணியத்தால நித்ய பூஜை சிறப்பா நடந்துண்டு இருக்கு. அவரோட பேர் கூட 'சிவகுரு' தான்...'' என்று கூறியபடி அர்ச்சனை தட்டுடன் நகரத் தொடங்கினார் குருக்கள்.

''ஸ்வாமி! அவரே தான் இவர்...''

''ஓ... அப்படியா? நெனச்சேன். என்னோட யூகம் சரியாப் போச்சு...'' சிரித்தபடி கருவறைக்குள் புகுந்து கொண்டார் குருக்கள்.

அர்ச்சனை செய்ய ஆரம்பித்தார். கங்கா வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டாள்.

''யார் இவர்கள்? சிவகுருவின் பெயருக்கு அர்ச்சனை செய்கிறார்கள். 'வாழ வைத்த தெய்வம்...' 'கண் கண்ட கடவுள்' என்று அவரை சிலாகிக்கிறார்கள்.

குழந்தைக்கும் அவரது சிவகுருவின் அப்பா காலத்திலிருந்தே நிறைய உபயமளித்திருக்கிறார்கள் என்று அடிக்கடி அம்மாவும் அப்பாவும் கூறுவார்களே?

இவள் நமது சிவகுருவைத் தான் தெளிவாக குறிப்பிடுகிறாளே? யார் இந்தப் பெண்? முதுகு காட்டியே நின்றிருப்பதால் முகம் தெரியவில்லையே?''

உள்ளூர ஆர்வம் அதிகரிக்க... அவர்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் கங்கா.

''ஏம்மா.. இப்படி நந்தி மாதிரி மறைச்சு நின்னுக்கிட்டா... மத்தவங்க எப்படி தரிசனம் பண்றதாம்? சித்த விலகி நில்லும்மா...''

பின்னாலிருந்து வந்த வயதான மாமி அதட்டியதும்... அந்த இளம் பெண் திரும்பிப் பார்த்துவிட்டு ஓரமாய் ஒதுங்கி நின்றாள்.

கங்காவுக்கு தூக்கி வாரிப்போட்டது.

'அவளா இவள்? ஆமாம் அவளேதான்...! அவளுக்கு இடது கன்னத்தில் ஒரு அழகுமச்சம் இருக்குமே... இவளுக்கும் இருக்கிறதே...? இவள் அவளே தான். சந்தேகமே இல்லை'

கங்காவுக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

## 13

சுவாமி தரிசனத்தை முடித்துக் கொண்டு... அவர்கள் கிளம்பியதும்... வேகமாய் பின் தொடர்ந்து பிரகாரத்திற்கு வந்தாள் கங்கா.

'' எக்ஸ்கியூஸ் மீ, நான் உங்க கிட்ட கொஞ்சம் தனியா பேசணும் பிளீஸ்..'' என்றாள்.

அந்த இளம்பெண் திகைத்து குழந்தையை கணவனிடம் கொடுத்து விட்டு இவளருகில் வந்தாள். இருவரும் தூணோரமாய் அமர்ந்தனர்.

''நீங்க யாருன்னே எனக்குத் தெரியலையே?''

''ஆனா.. எனக்கு உங்களை நல்லா தெரியும், அயாம் கங்கா! சிவகுரு சாரோட கல்யாணத்துக்கு நாங்க குடும்பத்தோடு வந்திருந்தோம். சுப்பிரமணியம் மாமாவும் என் அப்பாவும் நெருங்கின நண்பர்கள்.

கல்யாணத்துல... சிவகுருவை கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு.. இந்தப் பொண்ணு ரொம்பவும் குடுத்து வச்சிருக்கணும்னு எல்லாரும் உங்களைப் பார்த்து சிலா....கிச்சாங்க ரெண்டே நாள்லே அவரை ஏன் விட்டுட்டுப் போனீங்க?

கண்டிப்பா அதுக்கு ஏதாச்சும் காரணம் இருக்கும் இல்லையா? உங்க குழந்தைக்கு அவரோட பேரை வச்சிருக்கீங்க.. யாருக்குமே நீங்க அவரை விட்டுப் போனதுக்கான... உண்மையான ரீஸன் தெரியலை... அவரும் சொல்லலை.

ஆள் ஆளுக்கு திரிச்சு.. கதை கட்டறாங்க... பிளீஸ்.. என்னை உங்க சினேகிதியா மதிச்சு... நடந்தது என்னாங்கிறதை சொல்ல முடியுமா?''

''வலது கை குடுக்கிறது... இடது கைக்கே தெரியக் கூடாதுன்னு நெனக்கிறவர் சிவகுரு சார். அதனால தான் அவரு எதையும் வெளியில சொல்லவே இல்ல... வாழறது கொஞ்ச காலம் தான்... இஷ்டமில்லாத வாழ்க்கை வாழ்றது நரகம்'னு சொல்லி... அவர் தான் என்னை அனுப்பி வச்சாரு..''

''எ... என்னது? அப்போ நீங்க விட்டுட்டுப் போகலையா? அவரு எதுக்கு உங்களை அனுப்பி வச்சாரு..''

படபடத்தாள் கங்கா.

''நானும் இவரும் ஏற்கனவே ஒருத்தரை ஒருத்தர் விரும்பிட்டிருந்தோம். ஜாதியை காரணம் காட்டி.. எங்க காதலுக்கு பெரியவங்க முட்டுக்கட்டை போட்டாங்க... வலுக்கட்டாயமா எல்லாத்தையும் மூடி மறைச்சு சிவகுருவுக்கு என்னைக் கட்டி வச்சாங்க.

காதலிச்சவரை கட்டிக்க முடியலையேன்னு அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்துச்சு. என்னோட சோகமான முகத்தைப் பார்த்துட்டு அவரு காரணத்தைக் கேட்டாரு. எல்லாத்தையும் கொட்டித் தீர்த்துக் கதறிட்டேன்.

ஸ்டன்னாகி சிலை மாதிரி அசையாம சில கணங்கள் நின்னவர்... திரும்பிப் பார்த்து காலம் முழுக்க இப்படியே கண்ணீரும் கம்பளையுமா வாழப் போறியா? இல்ல... மனசுக்கு பிடிச்சவரோடு சேர்ந்து சந்தோஷமா வாழறியா?ன்னு கேட்டப்போ... நான் அரண்டு போயிட்டேன்.

உங்க காதலை நான் வாழ வைக்கிறேன்னு சொல்லி... என் கிட்டேயிருந்து போன் நம்பர் வாங்கி இவரு கிட்டே பேசினாரு. மறுநாள் நேர்லே வரவழைச்சு கன்வின்ஸ் பண்ணி... கை நிறைய பணத்தைக் குடுத்து எங்களை ஊரை விட்டு அனுப்பி வச்சாரு.

அவங்க வீட்டுல எனக்கு ஆசை ஆசையா நகை போட்டாங்க. அந்த நகைகளோட சேர்த்து தாலியையும் கழட்டி சிவகுரு கிட்டே நான் தந்தப்போ... அவர் தாலியை மட்டும் எடுத்துக்கிட்டாரு. எங்க வீட்டுலேர்ந்து சீதனமா உனக்குப் போட்ட நகைகள், சீதனமா கொடுத்ததை திரும்பி வாங்கிக்கற பழக்கம்... எங்க பரம்பரைக்கே கிடையாது.

உங்க காதலுக்கு நான் கொடுக்கிற சீதனமா நெனச்சு... இதை வச்சுக்கோ'ன்னு சொல்லிட்டாரு. சிவகுரு சார் குடுத்த பணத்தை வச்சு சொந்தமா தொழில் தொடங்கி... இப்போ நாங்க அமோகமா இருக்கோம். பெத்த தகப்பனார் கிட்டே கூட அவரு இந்த உண்மையைச் சொல்லலையாம்.

எப்பேர்ப்பட்ட உயர்ந்த உள்ளம் அவருக்கு எனக்கொரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் குடுத்துட்டு... அவரு தனி மரமா நிக்கிறாரு.

அதைத்தான் எங்களால தாங்க முடியலை. நாங்க அப்பப்போ அவரு கிட்டே, போன்லே பேசுவோம். 'நீங்க ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக்கணும்'னு கெஞ்சுவோம்..

மழுப்பலா ஏதாச்சும் பதில் சொல்வாரு. அவரு மனசுல ஏதோ இருக்குன்னு மட்டும் என்னால புரிஞ்சுக்க முடியுது. ஆத்மார்த்தமா அவரு யாரையோ நேசிக்கிறாருன்னு புரியுது. அவரோட நல்ல மனசுக்கு... கடவுள் ஒரு குறையும் வைக்க மாட்டாருன்னு நாங்க நம்பறோம். அந்தக் காதல் ஈடேறி அவரு சந்தோஷமா வாழறதை நாங்க காது குளிரக் கேட்கணும்... அதான் எங்க பிரார்த்தனை! அவருக்கும் அவரோட குடும்பத்துக்கும் என்னால தீராத களங்கமும் அவமானமும் உண்டாயிடுச்சு. உண்டு பண்ணிட்டேன். சிவகுரு சாருக்கு நல்ல வாழ்க்கை அமையற வரைக்கும்.. மனசாட்சி என்னை அணு அணுவா கொன்னுக்கிட்டே இருக்கும்.

நெறஞ்ச மனசோட அந்த உத்தமரை ஒவ்வொரு கணமும் நெனச்சு சிலாகிக்கிறோம். அவர் அமோகமா இருக்கணும்னு சதா கடவுள் கிட்டே வேண்டிக்கிட்டு இருக்கோம்.. உங்க கிட்டே பேசினதிலே... ஏதோ பாரம் இறங்கின மாதிரி நிம்மதியா இருக்கு... அப்போ நான் வரட்டுமா?''

எழுந்து கொண்டாள் அந்தப் பெண்.

விழிகள் விரிய திகைத்துப் போய் அமர்ந்திருந்த கங்காவும் மெல்ல எழுந்தாள்.

''உங்க பேர் என்னன்னு சொல்லலையே...? ''

''என்பேர் கவுரி ஈஸ்வரன், நாங்க இப்போ பூந்தமல்லியில இருக்கோம். ஒருவித அக்கறையோட சிரத்தையோட.... உண்மையான காரணம் என்ன?ன்னு விசாரிச்சீங்க...

சிவகுருவோட குடும்பத்துக்கும் உங்க குடும்பத்துக்கும் ரொம்ப வருஷமா நல்ல நட்பு இருக்குன்னு சொன்னீங்க... ஏன் கங்கா? நீங்க ஏன் அந்த மனிதகுல மாணிக்கத்தை கல்யாணம் பண்ணிக்க கூடாது? பார்த்தா படிச்ச பெண்ணா... ரொம்ப நல்ல டைப்பா தெரியறீங்க...

கண்டிப்பா என்னை விட உங்களுக்கு.. சிவகுரு சாரைப்பத்தி நிறையவே தெரிஞ்சிருக்கும். ஏதோ உங்களைப் பார்த்ததும் எனக்கு இனம் புரியாத ஈர்ப்பு ஏற்பட்டு போச்சு. நிதானமா யோசிச்சுப் பாருங்க.. அவரு கிடைக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணும். அவர் மேல நிறைய மரியாதை வச்சிருக்கீங்க... யோசிங்க... நான் சொல்றது சரின்னு உங்க மனசுக்கே தோணும்... நான் வரட்டுமா கங்கா?''

''போயிட்டு வாங்க கவுரி'' கைகளைக் கூப்பினாள் கங்கா. மனசாட்சி ரம்பரமாய் இவளை அறுக்கத் தொடங்கியது.

## 14

கவுரி தனது கணவனுடன் படிகளில் இறங்கிச் செல்வதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் கங்கா.

'தனக்கும் தனது குடும்ப கவுரவத்துக்கும் அவமானம் ஏற்பட்டால் கூட பரவாயில்லை. இந்தப் பெண் காதலனுடன் சேர்ந்து சவுக்கியமாக சந்தோஷமாக வாழவேண்டும் என்று நினைத்து செயல்பட்டிருக்காரே சிவகுரு?

அவருக்கு எப்பேர்ப்பட்ட மனசு? யாருக்கு வரும் இந்தப் பெருந்தன்மை? இவரைப் போய் பசுத்தோல் போர்த்திய புலி என்றாளே அகிலா.? 'இவரது சுயரூபம் தெரிந்து தான்... ரெண்டே நாளில் புது மனைவி ஓடியே போய் விட்டாள்' என்று கூறினாளே? ஆனால் கவுரியோ... இவரை தெய்வமாகவே மதிக்கிறாள். ஏன் அகிலா இப்படியொரு அபாண்டமான பொய் கூறினாள்?

'சிவகுரு வெளிவேஷக்காரன். மறுபக்கத்தைத் தெரிஞ்சுகிட்டா நீ தாங்க மாட்டே' என்று ஏன் கூற வேண்டும்?

சிவகுருவிடம் நானும் நிறைய மதிப்பும் மரியாதையும் வைத்து தானே இருந்தேன்?

அகிலாவின் பேச்சை செவிமடுத்ததால்... என் மனதில் அவர் மீது தவறான அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டதே?

அவர் காட்டும் பரிவு, பணிவு, பவ்யம், மரியாதை, நேசம் அனைத்தையும் வெறும்வேஷம் என்று தப்பாய் நினைத்து விட்டேனே?



அகிலா ஏன் இப்படி இல்லாததும் பொல்லாததுமாய் என்னிடம் கூறி என் மனதைக் கலைத்தாள்?

இப்பேர்ப்பட்ட உத்தமர் மீது இவள் ஏன் சேற்றை வாரி இறைத்தாள்? சிவகுருவைப் போய் நான் நிராகரித்தேனே?

நான் ஒரு படித்த முட்டாள்!

கண்ணிருந்தும் குருடி ஆகி விட்டவள்

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் என் முடிவில் எவ்வளவு பெரிய வருத்தம்?

சே...! என்ன காரியம் செய்து விட்டேன் நான்? சுப்பு மாமாவும் தவமணி அத்தையும் என்னை... என்ன வென்று நினைப்பார்கள்?

'நன்றி கெட்டவள்' என்று தானே நினைப்பார்கள்?

செய்த நன்றியை சிறிதும் எண்ணிப் பார்க்காமல்.. படித்த திமிரில் சுயமாய் முடிவெடுத்து விட்டாள் என்று தானே நினைப்பார்கள்?

சிவா என்னைப்பற்றி என்னை நினைத்தாரோ? தெரியவில்லையே?

அவரைப் பற்றி தவறாக எண்ண வைத்து விட்டாளே அகிலா..? இதில் இவளுக்கு என்ன லாபம்?

ஐயோ... சிவாவை மோசமான பேர்வழி என்று நினைக்கும்படி ஏன் அவள் செய்தாள்?

முதலாளியின் குடும்பத்தின் மீது அவளுக்கு ஏன் இந்த வஞ்சம்? கடவுளே! மனசாட்சி ரம்பமாக அறுக்கிறதே?

நல்ல காலமாக... நான் யாரிடமும் மூச்சு விடாமல் மனதோடு வைத்திருந்தேனே?

உத்தமரை தவறாக நினைப்பது மகாபாவம் அல்லவா?

இந்தப் பாவத்தை நான் கங்கையில் கரைத்தாலும் தீரவே தீராதே? முள்ளாய் மனம் குத்துகிறதே?

சிவகுருவை நேரில் சந்தித்து மன்னிப்பு கேட்கலாமா? எதற்கு மன்னிப்பு கேட்பதாம்?

தவறாக நினைத்ததற்கு மன்னிப்பு கேட்கவா? இல்லை... நான் அவரை நிராகரித்ததற்கு மன்னிப்பு கேட்வா?

சிவாவின் விஷயத்தில் இரண்டு தப்புகள் நான் செய்து விட்டேன். இதற்கு என்ன பரிகாரம்.?

இந்த கவுரியின் விஷயத்தை வீட்டில் சொல்லாமா? வேண்டாமா?

"சொல்லி வைத்தால் தான் நல்லது.''

சொல்லி விட்டால்... என்னை நடக்கும்?

"இப்பேர்ப்பட்டவரைப் போய் நீ நிராகரிச்சியே?''

நீ எவ்ளோ பெரிய முட்டாள் தனம் பண்ணியிருக்கேன்னு...

புரியுதா கங்கா?' என்று அப்பாவும் அம்மாவும் கடித்து கொள்வார்கள்.

ஒரு பெண்ணை வாழ வைத்திருக்கிறார். அவளது காதலனுடன் சேர்த்து வைத்து அந்தக் காதலை ஜெயிக்க வைத்திருக்கிறார்.

அப்பாவும் அம்மாவும் என்னைக் கடிந்து கொண்டாலும் பரவாயில்லை. இந்த விஷயத்தை சொல்லியே ஆக வேண்டும். அப்பாவின் மூலமாக சுப்பு மாமாவுக்கும் இதைத் தெரியப்படுத்தியாக வேண்டும்.

மகனின் பெருந்தன்மையையும். சகல அவமானத்தையும் இடிதாங்கிபோல் தாங்கிக் கொண்டு இருக்கும் சகிப்புத் தன்மையையும் அவர் செய்திருக்கும் புண்ணிய காரியத்தையும்.. சுப்பு மாமா தெரிந்து கொள்ளத் தான் வேண்டும்.

நான் இந்த விஷயத்தைச் சொன்னால் மறு கணமே அப்பா "கங்கா! சிவா தம்பி சொக்கத்தங்கமாச்சே? அவர் கிட்டே என்ன குறையை நீ கண்டுட்டே?" என்று கேட்பாரே?

எளிமையாக அவர் உடை அணிவதும் அவர் அணிந்திருக்கும் சாதாரண கண்ணாடியும் அடிக்கடி வேட்பு சட்டையில் உலாவுவதும் பிடிக்கவில்லை என்று நான் கூற முடியுமா?

ஊ கூம்... இந்த விஷயத்தை இப்போதைக்கு நான் வெளியில் சொல்லாமல் இருப்பதே நல்லது.

இது முழுக்க முழுக்க சிவகுரு அந்தரங்கமாக மறைத்து வைத்திருக்கும் ரகசியம் ஆயிற்றே..?

இதை நான் பகிரங்கப்படுத்துவதில் ஏதாச்சும் பிரச்சனை வந்தால்?

பிரச்சினை வராவிட்டாலும்.. சிவகுருவுக்கு இதில் கண்டிப்பாக உடன்பாடு இருக்காது.

இது யார் மூலமாக வெளியில் வந்தது? என்று சிவகுரு கிளறினால்?

கங்கா தான் அத்தனையையும் அம்பலப்படுத்தி விட்டாள் என்று தெரியவந்தால்... அவர் என்னைப்பற்றி மிகவும் தவறாக நினைப்பார் அல்லவா?

வேண்டாம்... நான் அங்கு யாரையும் பார்க்கவில்லை. எனக்கு எந்த உண்மையும் வெட்ட வெளிச்சமாகவில்லை என்று நினைத்துக் கொள்ள வேண்டியது தான்...

இதை மூடி மறைக்க என்னால் இயலாது போலிருக்கிறதே?

சிவகுருவைப் பற்றி யாராவது சிலாகித்துப் பேசினால்... என்னையும் மீறி உண்மை வெடித்துக் கொண்டு வெளியில் வந்து விடுமே?



உண்மை தெரிந்தால்.. அப்பாவுக்கு சிவாவின் மீது இருக்கும் மரியாதையும் பாசமும் இன்னமும் பன்மடங்காகும்.

அப்பாவுக்கு மட்டுமில்ல... வேறு எந்த நபராக இருந்தாலும் சிவாவைப் பார்த்து பிரமிக்கத் தான் செய்வார்கள்.

அப்பா ஒருவேளை நடந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்தி விட்டு... நண்பருடன் பேசி சிவாவுக்கு என்னைக் கட்டி வைக்க முயற்சிப்பாரோ?

அப்பா அப்படி செய்யக் கூடியவர் தான்.

அப்பா அந்த மாதிரி பூகம்பம் வெடிக்குமே?

துர்காவின் எதிர்காலமே பாதிக்குமே? அக்காவின் வாழ்க்கை பாதித்தால்... வீட்டில் பெரியவர்களின் நிம்மதி பறி போய் விடுமே?

என் மூலமாக யாருக்கும் எந்தப் பிரச்சினையும் வர வேண்டாம்.

அதனால்.. எதையும் கண்டு கொள்ளாமல் இனிமேல் விதி விட்ட வழியில் நடப்பது தான் நல்லது.

அகி ஏன் இப்படி செய்தாள்? எதற்கு என் மனதைக் குழப்பிவிட்டாள்?

இதை அவளிடம் நேரடியாக கேட்கலாமா? கேட்டால் உண்மையான பதில் அவளிடமிருந்து வருமா? என்று தெரியவில்லையே?

அவளிடமும் எதையும் நான் கேட்கக் கூடாது. உண்மைக்கு ஒரு சக்தி உண்டு. அதை யாராலும் புதைத்து வைக்க முடியாது.

உண்மை வெடித்துக் கொண்டு வெளியில் வந்து விடும் என்று கூறுவார்களே?

அதன்படி ஒருநாளைக்கு இதுவும் வெளிப்படும். அப்போது தெரிந்து கொள்ள வேண்டியது தான்...

அர்ச்சனையை முடித்துக் கொண்டு பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்து விட்டு கொடி மரத்துக்கு அருகே விழுந்து கும்பிட்டு விட்டு நிமிர்ந்த போது... அருகில் நிழலாடியது.

சாக்ஸ் அணிந்த கால்களைப் பார்த்துவிட்டு ஏறிட்டபோது... மந்தகாசமான முகத்துடன் அரவிந்த் நின்று கொண்டிருந்தான்.




"குட் ஈவ்னிங் கங்கா."

"குட் ஈவ்னிங்! யாரோ ஒரு பிரண்டைப் பார்க்கப் போகணும்னு சொன்னீங்களே?"

திகைத்துப் போய் கேட்டு விட்டாள் கங்கா.

"இல்ல... போக விட்டால் தானே நான் போக முடியும்?"

"என்ன சொல்றீங்க? யார் உங்களைப் போகவிடாம தடுத்தாங்க?"

''நீ தான் கங்கா.''

''நானா? நான் ஒண்ணுமே சொல்லலையே? சுத்தி வளைக்காம.. நேரடியாக விஷயத்தைச் சொல்றீங்களா பிளீஸ்?''

''நீ ஒண்ணும் சொல்லலை தான்... ஆனா மறைமுகமா என்னை ஆட்டிப் படைக்கிறே தெரியுமா? என்னை ஒரு வேலையும் செய்ய விடறதில்லை. சதா உன் ஞாபகமாகவே இருக்கு காந்தமா அப்படியே ஈர்த்துட்டே இருக்கே..

எப்பவும் உன்னைப் பார்த்துக்கிட்டே இருக்கணும் போலிருக்கு உன் பக்கத்துலேயே இருக்கணும். உன் அருகாமை வேணும்னு மனசு கிடந்து தவிக்குது

அந்த தவிப்பு தான் என்னை இங்கே இழுத்துக்கிட்டு வந்துடுச்சு. தெரியுமா?'' என்று சொல்லி விட்டு கலகல வென்று சிரித்தான்.

இவளைப் பார்ப்பதற்காக மலைக்கோவிலுக்கு அவன் ஏறி வருவான் என்று கொஞ்சமும் எதிர்பார்க்காததால் திகைப்பு விலகாத முகத்துடன் கோவில் வாசலை நோக்கி நடந்தாள்.

''ஒண்ணும் சொல்லாம போனா எப்படி கங்கா?''

குழைவுடன் கேட்டான்.

''இதை நான் கொஞ்சம் கூட எதிபார்க்கலை..''

''நான் என்ன கேட்கிறேன்? நீ என்ன சொல்றே? நான் எதிர் பார்த்த பதில் உன் கிட்டேயிருந்து வரலையே?''

வாசலைக் கடந்ததும் ஓரமாய் இருந்த பாறைத்திட்டின் மீது ஸ்டைலாக அமர்ந்தபடி கேட்டான்.

கங்கா பதில் பேசாமல் மலைப்படிகளின் மீது ஏறி வந்து கொண்டிருந்த பக்தர்களின் மேல் பார்வையைப் பதித்து ''ஜனங்க நிறைய பேரு வந்துட்டிருக்காங்க'' என்றாள். ''வரட்டுமே? இப்போ அதுக்கு என்னவாம்? பேச்சை மாத்தாதே கங்கா''

''என்னபதில் எதிர்பார்த்தீங்க அரவிந்த்?''

வேறு வழியின்றி சலிப்புடன் கேட்டாள்.

''குட்! முதல் முறையா என் பேரைச் சொல்லி கூப்பிட்டிருக்கே... அயாம் ஹேப்பி... என்ன பதில் எதிர்பார்த்தேன் தெரியுமா?

'எனக்கும் அப்படித்தான் இருக்கு அரவிந்த்! சதா உங்க ஞாபகம் தான்... எப்பவும் உங்க கூடவே இருக்கணும்னு ஏக்கமா இருக்கு அரவிந்த்' அப்படின்னு நீ சொல்லியிருக்கணும்... அப்படி பதில் சொல்லியிருந்தா... அந்த செகண்ட்லே அப்படியே குஷி பிச்சுக்கிட்டு போயிருக்கும். ஜாலியா ஹாயா மேகத்தோட மேகமா பறக்கிற மாதிரி ஒரு பரவசம் மனசுல பரவியிருக்கும்...

நீ அப்படி பதில் சொல்லாததால... பயங்கர ஏமாற்றம் ஏற்பட்டுடுச்சு.. மூட் அவுட் ஆயிடுச்சு தெரியுமா?''



''ஓ... எப்பவும் எதிலேயும் எதிர்பார்ப்பு வச்சுக்கவே கூடாது. எதிர்பார்த்தது கிடைக்கலைன்னா... அது நடக்கலைன்னா... மனசு ரொம்பவே சங்கடப்படும். அதனால மனசுல எதிர்பார்ப்பே இருக்க கூடாது'ன்னு.. புத்தகத்துல நான் வாசிச்சிருக்கேன். அதன் படி தான் இதுவரைக்கும் நடந்துட்டு வர்றேன்..''

''இப்பவும் நீ சொல்ற பதில் சரியில்லை. மூட் அவுட் ஆயிடுச்சுன்னா... நீ என்ன சொல்லணும்? சாரி அரவிந்த்! மெல்ல மெல்ல உங்க மனசுக்கேத்த படி நடந்துக்க ட்ரை பண்றேன்'னு சொல்வேன்னு பார்த்தா... ஏதோ ஞானிகள் மாதிரி சித்தாந்தம் பேசிட்டிருக்கே..

காதல் டயலாக் பேசுவேன்னு ஆசையா வந்தா... நீ இப்படி தத்துவம் உதிர்த்தா எப்படி? இது உனக்கே நல்லாயிருக்கா கங்கா?''

குற்றம் சாட்டும் தொனியில் அவன் பேசியதை திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'என்னது இது? கோவிலுக்கு சாமி கும்பிட வந்திருக்கிறேன். என்னைத் தேடி இங்கு வந்து விட்டு... இவனுடன் காதல் ரசம் கொட்ட நான் சம்பாஷணை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறானே?

விவஸ்தை இல்லாமல் மனதில் உள்ள எண்ணத்தை என்னிடமே வெளிப்படுத்துகிறானே?

கொஞ்சம் கூட இங்கிதமே இல்லாமல்... தொடர்ந்து தொந்தரவு செய்கிறானே?'

என எண்ணமிட்டாள் கங்கா.

அவளையே கண் இமைக்காமல் பார்த்த அரவிந்த் ''சரி' ரெண்டே நாள்லே நான் எதிர்பார்க்கிற மாதிரி நீ நடந்துக்கணும்னு எக்ஸ்பெக்ட் பண்றதும்... சரியில்லை தான்... ஓ.... லெட் மீ வெயிட்!'' என்று முறுவல் பூத்தான்.

''நேரமாகுது.. அப்புறம் வீட்டுல பயந்து தேட ஆரம்பிச்சுடுவாங்க.. செல்... போன்லே வேற சுத்தமா சார்ஜ் இறங்கிடுச்சு'' என்றாள் கங்கா.

''ஓ... சார்ஜ் இல்லையே? நான் ட்ரை பண்ணினப்போ ஸ்விட்ச் ஆப்'னு அறிவிப்பு வந்தது. நீ தான் வேணும்னே ஆப் பண்ணி வச்சுட்டியோ?'ன்னு நான் நெனச்சேன்...! ஓகே..! நான் மலைப்பாதை வழியா கார்லே வந்துட்டேன்.

என் கூட கார்லே வாயேன் கங்கா! நான் உங்க விட்டுல டிராப் பண்ணிட்டு... அப்படியே ஒரு கப் காபி சாப்பிட்டுட்டுப் போறேன்..''

மறுத்துப் பேசினாலும் அரவிந்த் விவாதம் பண்ண ஆரம்பித்து

விடுவானோ? என்ற பயத்தில் மெல்ல தலையாட்டினாள்.

''இதோ பக்கவாட்டுல தான் நான் காரை நிப்பாட்டி இருக்கேன்...'' ஆர்வமாய் எழுந்து நடந்தான்.

இருட்டத் தொடங்கி விட்டதால் மலையடிவாரத்தின் சுற்றிலும் இருந்த வீடுகள் கடைகளில் பளிச்சென்று விளக்கு எரிய ஆரம்பித்து.. மேலே இருந்து பார்க்கும் போது ஜெக ஜோதியாய் கண்களை ஈர்த்ததை... ரசிக்கும் மனநிலை அந்த நேரத்தில் கங்காவுக்கு இருக்கவில்லை.

அரவிந்த் காரில் ஏறி அமர்ந்து கொண்டு ஏதேதோ ஜோக்குகளைக் கூறி விட்டு... தானே சிரித்துக் கொண்டு காரையோட்டினான்.

''பத்துநிமிஷம் கூட ஆகலை... அதுக்குள்ளே உங்க வீடு வந்துடுச்சே கங்கா?''

''வீடு வரலை. நாம்ப தான் வீட்டுக்கு வந்திருக்கோம்.''

''குட் ஜோக்!'' என்று கூறி விட்டு வாய் விட்டு சிரித்தான்.

அரவிந்த் வந்திருக்கிறான் என்று தெரிந்ததும்... அப்பா விரைந்து வந்து வரவேற்றார்.

ஹாலில் அமர்ந்து வெங்காய பஜ்ஜியை சாப்பிட்டுக் கொண்டிருந்த மூத்த மாப்பிள்ளை குமாருக்கு குஷி பிய்த்துக் கொண்டது.

''வா அரவிந்த்! துர்காவையும் குழந்தையையும் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்! வந்து பத்து நிமிஷம் தான் ஆச்சு. நீயும் வந்துட்டே...'' என்றான் குமார்.

''எனக்கு வெங்காய பஜ்ஜின்னா... ரொம்பவும் பிடிக்கும்'' என்றபடி அவனருகில் அமர்ந்து கொண்டான் அரவிந்த்.

''வாங்க.. உங்க ரெண்டு பேத்துக்கும் நல்ல ஜோடிப் பொருத்தம். செஞ்சு வச்ச ஜோடி பொம்மைங்க மாதிரி இருக்கீங்க..'' ?என்று பவ்யமாய் கூறினாள் துர்கா.

''தேங்க்ஸ் அண்ணி!''

பர்வதம் சேலைத் தலைப்பால் வலது தோளையும் சேர்த்துப் போர்த்திக் கொண்டு தட்டில் வெங்காய பஜ்ஜிகளையும் காபி குவளையையும் எடுத்து வந்து மோடாவில் வைத்தாள்.

''வாங்க மாப்பிள்ளை! வீட்டுல எல்லோரும் நல்லாயிருக்காங்களா?''

''எல்லோரும் நல்லாயிருக்காங்க அத்தே...'' என்றவன், உரிமையாய் வெங்காய பஜ்ஜியை எடுத்து சுவைக்க ஆரம்பித்தான்.

''நான் கங்காவை என்னோட கார்லே கூட்டிட்டு வந்தேன். உங்களுக்கு இதுலே அப்ஜெக்ஷன் இல்லையே? எதுவா இருந்தாலும் ஓபனா சொல்லிடுங்க... கங்கா என் கூட பிரீயா பேசறதுக்கு கூட தயங்கறாளே? அதுக்கு தான் கேட்கிறேன்..''

நடேசன் இதற்கு என்ன பதில் சொல்வது? என்று ஒருகணம் தயங்கினார்.

அதற்குள் அவரை முந்திக் கொண்டு மூத்த மாப்பிள்ளை குமார் ''உங்களுக்கு தான் நிச்சயம் ஆயிடுச்சே? பாதி கல்யாணம் நடந்த மாதிரி தானே? உன் வருங்கால மனைவியை... நீ கார்லே எங்க வேணும்னாலும் கூட்டிட்டுப் போகலாம். கங்கா கொஞ்சம் சர்வட்டைப் தான்... போகப்போக சரியாயிடும். நான் சொல்றது சரிதானே மாமா?''

வேறு வழியின்றி தலையாட்டி வைத்தார் நடேசன்.

''தேங்க்யூ... பஜ்ஜி ரொம்ப சூப்பரா இருக்கு. அத்தைக்கு நல்ல கைப்பக்குவம்...''

பர்வதத்திற்கு உச்சி குளிர்ந்து போனது.

''அத்தைக்கு மட்டுமல்ல. நம்ம துர்காவுக்கும், கங்காவுக்கும் கூட நல்ல கைப்பக்குவம் தான்... சமைக்கிறதிலே அக்காவும் தங்கையும் எக்ஸ்பெர்ட் தெரியுமா?'' என்றான் குமார்.

''ஓ.. சந்தோஷம்! அத்தை அந்த அளவுக்கு இவங்களை நல்லா ட்ரெயின் பணணியிருக்காங்க. ஸோ... இந்த கிரெடிட் எல்லாமே அத்தையைத் தான் சாரும்...'' பாராட்டுப் பத்திரம் வாசித்தான் அரவிந்த்.

''கங்கா அப்படியே மாமா ஜாடைதான். நறுக்குத் தெறிச்சாப்ல பேசறது எல்லாம் கூட அவரை மாதிரி தான் இருக்கா... மாமா! மனசு விட்டு சொல்றேன். உங்களுக்கு மருமகனா வர்றதுக்கு நான் குடுத்து வச்சிருக்கணும்''

அநியாயத்திற்கு ஐஸ் வைத்துக் கொண்டே போனான் அரவிந்த்.

நடேசனுக்குள் இருந்த இறுக்கம் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்தது.

அவருக்கும் அரவிந்தனை நிரம்பவே பிடித்துப் போனது.

''என்ன மாப்பிள்ளை? இப்படி சொல்லிடீங்க? இது நாங்க சொல்ல வேண்டிய வார்த்தை..''

அதற்கு மேல் பேச்சு வெகு கலகலப்பானது.

சுவாரசியமாய் சிரித்துப் பேசி விட்டு... வெகுநேரம் கழித்து தான் வீட்டை விட்டுப் போனான் அரவிந்த்.

நாகரீகம் கருதி ஹாலில் துர்காவின் அருகில் வந்து நின்றாலும்... எதிலும் பட்டுக் கொள்ளாமல் மவுனமாய் தலை குனிந்தபடி இருந்தாள் கங்கா.

''சிவகுரு தான் எங்களோட கண்கண்ட தெய்வம்..'' என்று கவுரி கூறிய வார்த்தைகள்... திரும்பத் திரும்ப அவளது செவிகளில் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்தன.

## 16

மறுநாளே பழங்கள் இனிப்பு வகையறாக்களை பெரிய பை நிறைய வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டான் அரவிந்த்.

''நேத்தைக்கு ஒண்ணும் வாங்கிட்டு வரலை நிச்சயத் துக்கு அப்புறம் முதல் முறையா நான் வந்தப்போ வெறும் கையோட வந்துட்டோமே? ன்னு பீல் பண்ணினேன்...''

''என்ன மாப்பிள்ளை நீங்க? எதுக்கு இந்த சம்பிரதாயம் எல்லாம்? நீங்க யாரு? இந்த வீட்டு மாப்பிள்ளை... எப்ப வேணும்னாலும் உரி மையோட வந்து போகலாம்... இது உங்க வீடு..'' என்றார் நடேசன்.

''தேங்க்ஸ் மாமா''

''மறுபடியும் பாருங்க.. உரிமை பட்டவங்க கிட்டே எல்லாம் நன்றி சொல்லக் கூடாது. சொன்னா அது அந்நியப்படுத்தற மாதிரி இருக்கும்.''

''அப்படியா மாமா? இனிமே நீங்க சொல்றபடி நடந்துக்கிறேன். மாமா...! பெரியவங்க நீங்க... எது சொன்னாலும் சரியாத்தான் இருக்கும்...''

நடேசனுக்கு சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை. நடேச னுக்கு உள்ளூர மனசாட்சி குடைந்து கொண்டு தான் இருந்தது.

'தனக்கு எவ்வளவோ உதவிகள் செய்த நண்பன் சுப்பிரமணியத் தின் ஆசையை நிறைவேற்ற முடியவில்லையே? சிவா தங்கமான இளைஞன். அவனுக்கு கங்காவை கட்டிடத்தர இயலவில்லையே?

செய்த நன்றியை மறந்தாற் போலாகிவிட்டதே? சுப்புவும், சி வாவும் தவமணியும் உள்ளூர ரொம்பவும் வருத்தப்படுவார்களே' என்று நினைத்துப் புழுங்கிக் கொண்டிருந்தார்.

எறும்பு ஊற ஊற கல்லும் தேயும் என்பார்கள். அதைப்போல் அனுதினமும் அரவிந்த் வீட்டிற்கு வந்து அவரிடம் பணிவாய், பாச மாய் பேசி.... அவரது மனதை மாற்றிவிட்டுருந்தான்.

''சே! அரவிந்துக்கு என்ன குறை? பார்க்க லட்சணமா, நாகரீக மா இருக்காரு... இந்தக்காலத்து இளைஞரா இருந்தாலும் அதுவும் பெரிய பதவியில இருந்தாலும் பெரியவங்களை மதிச்சுப் பேசறாரு. ஓஹோன்னு வாழற குடும்பத்தைச் சேர்ந்தவரு... கங்கா அவசரப் பட்டு இவரைத் தேர்ந்தெடுத்துட்டாளே?ன்னு வருத்தப்பட்டோமே? அது தப்பு!

எனக்கு அவரை ரொம்பவே பிடிச்சு போச்சு'' என்று தனது மனை வியிடம் தனிமையில் சிலாகித்தார் நடேசன்.

கங்காவுக்கு தான் திண்டாட்டமாகிப் போனது. வீட்டில் உள்ள வர்களை தன் கைக்குள் போட்டுக் கொண்டு... அவளை தன்னி ஷ்டத்திற்கு ஆட்டிப் படைத்தான்.

அலுவலக நேரத்தில் போனில் அவ்வப்போது பேசியே கழுத்தை அறுத்தான்.

உணவு இடைவேளையின் போது நேரிலேயே அலுவலகத்திற்கு வர ஆரம்பித்தான்.

மாலை நேரத்தில் கழுகுபோல் மிகச் சரியாக காரில் வந்து நின்று.. வா! உன்னை வீட்டில் டிராப் பண்ணிடறேன் என்றான்.

இவனை எப்படித் தவிர்ப்பது என்று இவள் மூளையைக்கசக்கி ஸ்கூட்டியை அவசரமாய் வாங்கி அதில் வரத் தொடங்கினாள்.

'' சாரி அரவிந்த்! சாயந்தரம் நீங்க காரை எடுத்திட்டு வர வேணாம். நான் ஸ்கூட்டியில் தான் வந்தேன். ஸ்கூட்டியில் போயிக்கிறேன். நீ ங்க சிரமப் படாதீங்க...''

நாசூக்காய் சொல்லி நகரப்பார்த்தாள்.

அன்று சாயந்தரமே '' உன் ஸ்கூட்டியில் டபுள்ஸ் போலாமா ?'' என்று அசடு வழிந்தான் அரவிந்த்

இவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

'' தினமும் சாய்ந்தரம் உன் ஆபீசுக்கும் வீட்டுக்கும் வந்து பழகிட் டேன். வராம உன்னைப்பார்க்காம இருக்க முடியலை... அதான்!''

'' எனக்கு டபுள்ஸ் ஓட்டி பழக்கமில்ல அரவிந்த் நீங்க வேணு ம்னா என் ஸ்கூட்டியில வீட்டுக்குப்போங்க... நான் பிரண்ட் சோடசேர்ந்து பஸ்ஸில் வந்துடறேன். பிளீஸ்...''

திட்ட வட்டமாய் மறுத்துப்பேசியதும்...'' ஓகே ! உன் ஸ்கூட்டியிலேயே நீ போ! நான் என் நண்பனுக்கு போன் பண்ணி என்னை பிக்கப்பண்ணிக்கச் சொல்றேன்...''கோபமும் ஏமாற்றமு மாய் விருட்டென்று வெளியேறி விட்டான் அரவிந்த் கங்காவுக்கு தர்ம சங்கட மாய் இருந்தது.

இவன் செய்யும் இடைஞ்சல்களைப்பற்றி வீட்டில் வெளிப்படை யாய். அவளால் சொல்ல முடியவில்லை.

ஏனென்றால் அரவிந்த் அவள் தேர்ந்தெடுத்த நபராயிற்றே அவ னைப்பற்றி குறைசொன்னால். என்ன கேள்வி வரும் என்று அவ ளுக்கு தெரியும்.

போதும் போதாதற்கு தினமும் வீட்டிற்கு வந்து. பெரியவர்க ளிடம் பணிவாய் பாசமாய் பேசுவது போல் பாசாங்கு செய்து அவர் கள் மனதில் இடம் பிடித்து விட்டிருந்தான்.

இனி. கங்கா அவனைப்பற்றி ஏதாவது சொன்னால் அவளது

பேச்சு அங்கு எடுபடாது என்பதை அவள் நன்கு புரிந்து கொண் டாள்.

கவுரியை கோவிலில் சந்தித்து அவள் மூலமாக சிவாவைப் பற்றி உண்மையைத்தெரிந்து கொண்டதும். கங்கா உஷாராகி விட்டாள்.

இனிமேல். தோழி அகிலாவின் விஷயத்தில் வெகு ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும் என்று உள்ளூர முடிவு செய்து விட்டாள் நான்கு தினங்களுக்கு முன்பு அகிலா பதறியடித்துக்கொண்டு இவளது கேபினுக்கு வந்தாள்.

'' கங்கா! எங்கம்மா மயக்கம் போட்டு விழுந்துட்டாங்களாம். திடீர்னு வாந்தி எடுத்திருக்காங்க. சாப்பிட்டதுலே புட் பாய்ஸன் ஆயிடுச்சோ ? என்னவோ...நான் கிளம்பறேன்.''

'' பஸ்சுக்காக காத்திருந்தா டைம் ஆயிடும் என்னோட ஸ்கூட்டி எடுத்துக்கிட்டு சீக்கிரமா போய் அம்மாவைப்பாரு அகி'' என்று சாவியைக்கொடுத்து அனுப்பினாள்

யோசனையுடன் அகிலாவின் டேபிளுக்கு வந்த போது... அவள் பதற்றத்தில் ஹேண்ட் பேக்கை விட்டுப்போயிருப்பதைக்கண்டு மெல்ல அதை எடுத்துக்கொண்டு தனது கேபினுக்கு வந்தாள்.

கங்காவுக்கு வேலையே ஓடவில்லை. அகிலாவின் பேக்கைதி றந்து ஆராய்ந்தாள்.

முதலில் அவளது கைக்கு சிக்கிய புகைப்படத்தை எடுத்துப் பார்த்து அதிர்ந்தே போனாள்.

அது சிவகுருவின் புகைப்படம் ! புகைபடத்தின் மறுபக்கத்தில் 'ஐ லவ் யூ சிவா ' என்று எழுதியிருந்தாள் அகிலா.

' ஓ... அகி சிவாவை நேசிக்கிறாளா ? அதனால தான் சிவாவைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக சொல்லி என் மனதைக்க லைத்து விட்டாளா?

எங்கே நான் சிவாவை தேர்ந்தெடுத்து விடுவேனோ ? என்று பயந்து அவர் மீது பழியைப் போட்டிருக்கிறாள் ?

ஒரு நல்லவர் மீது அபாண்டம் சுமத்தி இருக்கிறாள். ஆருயிர் சிநேகிதியான என் மனதில் விஷத்தை கலந்திருக்கிறாள்.

சே ! பச்சை துரோகி ! பெற்றவர்களிடமோ அக்காவிடமோ கூட....நான் கலந்து ஆலோசிக்காமல் இவளை முழுதாக நம்பி இவ ளிடம் ஆலோசனை கேட்டு முடிவு செய்தேனே?

இவளது பேச்சைக்கேட்டு கொண்டு. அரவிந்தை நான் தேர்வு செய்தேனே ?

என்ன சூழ்ச்சி என்ன தந்திரம் ? என்ன வஞ்சனை மனதில் நஞ்சை வைத்துக்கொண்டே ... இது காலம் வரை என்னுடன் பழகி இருக்கிறாள்.



இவளால் நான் சிவ குருவை தவறாக எண்ணி விட்டேனே ? நட்புக்கு துரோகம் செய்து விட்டாள் சேச்சே வெளிப்படையான எதிரியைக் கூட....நம்பி விடலாம்.

உள்ளுக்குள் வினையை வைத்துக்கொண்டு சிரித்துப்பேசும் இவளை நம்பவே கூடாது, என்ற முடிவுக்கு வந்தாள் கங்கா அதற்கு மறு நாளிலிருந்து பட்டும் படாமலும் தான் பழகிவந்தாள். ''என்ன கங்கா, நீ முன்ன மாதிரி கலகலப்பா பேச மாட்டேங்கிறி யே ? '' என்று அவள் கேட்டதற்கு.எதையோ கூறி மழுப்பி வந்தாள்.

இன்று... அரவிந்த் விருட்டென்று கோபித்துக்கொண்டு சென் றதும்... ஒரு வித டென்ஷனுடன் தான் வீட்டிற்குச் சென்றாள் கங்கா.

அவள் வருவதற்கு முன்பே அத்தான் குமார் வந்து விட்டிருந் தான் '' என்ன கங்கா இது ? ஏன் இப்படி நடந்துக்கிறே? படிச்ச பொண்ணு தானே நீ அரவிந்த் எனக்கு.. போன் பண்ணி ரொம்ப.. பீல் பண்ணினான் தெரியுமா ? '' என்று ஊசிபட்டாசாய் பொரிந் தான்

'' நான் என்ன மாமா பண்ணினேன் ?''

'' கட்டிக்கப்போற மாப்பிள்ளை கிட்டே முகத்துல அடிச்ச மாதிரி பேசி அனுப்பியிருக்கே? சரி... உனக்கு டபுள்ஸ் ஓட்டத்தெரியா துன்னா... அரவிந்தை ஓட்ட வச்சு நீ பின்னாடி உக்காந்து வந்திருக் கலாம் இல்ல ?

பஸ்ஸில் வந்துக்கிறேன் நீங்க வேணுமின்னா போங்கன்னு நிர் தாட்சணியமா படார்னு பேசியிருக்கே ?''

இதற்கு பதில் ஒன்றும் கூறாமல்... மாடிக்கு விரைந்தாள் கங்கா .

''பார்த்தீங்களா அத்தே ? பேசிக்கிட்டிருக்கும் போதே.. மதிக்காம மேல போறா... இப்படி எல்லாம் நடந்தா என்ன நெனப்பாங்க... படிச்ச திமிரு... அதிலும் வேலைக்குப்போய் சம்பாதிக்கிற திமிருல பொண்ணு ஆட்டம் போடறான்னு எல்லாரும் பேசுவாங்களா... இல்லையா ?''

'' அது வந்து... '' திணறினாள் பர்வதம்.

''கொஞ்சம் அவளுக்கு புத்தி சொல்லுங்க... நிச்சயம் மட்டும் தான் ஆயிருக்கு இன்னும் கல்யாணம் நடக்கலை. கோபத்துல டென்ஷன்லே இந்தப்பொண்ணைப் பிடிக்கலை. கல்யாணத்தை நாங்க நிறுத்திடறோம்னு சொல்றதுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் ? நஷ்டம் யாருக்கு ? நமக்கு தானே ? என் தம்பியோட படிப்பு, பதவி,வசதி,ஸ்டேட்டஸ் இதுக்கெல்லாம் கண்டிப்பா பெரிய பெரிய இடத்துலேர்ந்து பொண்ணுங்க கிடைப்பாங்க பொண்ணு

கண்ணுக்கு லட்சணமா இருந்ததால...

அதுவும் நாங்க ஏற்கனவே இந்த வீட்டுல பொண்ணு எடுத்திருந்ததால. அவங்க இஷ்டப்பட்டு வலிய வந்தாங்க...

இது உங்களுக்கு தெரியுமில்லையா அத்தே ? எல்லாத்தையும் விளக்கமா எடுத்துச்சொல்லிப்புரிய வைங்க. நஷ்டம் நமக்கு தான். அப்படீங்கிறதை அவ புரிஞ்சுக்கணும். சரி? மாமா வந்தா. நான் இங்க வந்து போனதை அவசியம் சொல்லுங்க நான் வரேன்...'

விருட்டென்று குமார் வெளியேறி விட்டான். அத்தான் குமார் சென்று விட்டான் என்று தெரிந்தது மெதுவாக தனது மாடி அறையை விட்டு வெளியில் வந்தாள் கங்கா

பர்வதம் மவுனமாக மகளை ஏறிட்டாள்.

'' என்னம்மா ஒண்ணுமே கேட்காம இருக்கே ?''

'' நீ புத்திசாலி பொண்ணு அறிவுக்களஞ்சியம் உன்னை நான் எதுவும் கேட்கப் போறதில்ல... நீ பண்ணினது சரி தான் ஏன்னா... உன்னோட வளர்ப்பு அப்படி!

ஆனா. அதே சமயத்துல என்னோட அடி வயிறு பிசைஞ்சு பிசைஞ்சு வலிக்குதும்மா. பயம் குடலை முறுக்குது நிச்சயம் முடிஞ்சு போனதுக்கு அப்புறமா. கல்யாணம் நின்னு போச்சுன்னா... இந்த விஷயம் உறவுக்காரங்களுக்கும் ஊருக்கும் தீயா பரவிடுமே ?

கண்ணு மூக்கு காது வச்சுப்பேசி. உன் தலையை அப்படியே உருட்டித் தள்ளு வாங்களே கங்கா ? அதுக்கு தான் பயப்படறேன்.

மாப்பிள்ளையும் இதைத்தான் சொல்றாரு நஷ்டம் நமக்கு தான்னு சொல்லிட்டு போறாரு உன்னோட கல்யாணம் நடக்காம போயிட்டா அதை என்னால தாங்கிக்க முடியாது கங்கா !....''

தழுதழுத்த குரலில் பேசிவிட்டு... கண்ணீரை புடவைத்து தலைப்பால் துடைத்த படியே அடுக்களைக்குள் அடைக்கலமானாள் அம்மா.

அந்த நேரத்தில் அவளது செல் போன் அலறியது.

எடுத்துப்பார்த்த போது அப்பாவின் பெயர் திரையில் ஒளிர்ந்தது.

'' சொல்லுங்கப்பா'' என்றாள்.

'' நான் பயந்தது மாதிரியே ஆயிடுச்சும்மா '' மறு முனையில் அப்பாவின் குரலில் துக்கம் வழிந்தது,

'' என்னப்பா ? என்னாச்சு ?''

பதற்றம் இவளுக்குள் கிளை விட்டுப்பரவியது.

'' நம்ம சிவாவோட அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் ! மேஸிங் அட்டாக்காம் என் நண்பன் சுப்புவுக்கு இப்படியொரு நிலைமை வந்து



டுச்சே ? என் மனசாட்சி அறுக்குதும்மா....''

விசும்பினார் நடேசன் இதைகேள்விப்பட்டதும் கங்காவுக்கு சகலமும் பதறியது.

காலடியில் தரை நகர்ந்து செல்வது போலிருந்தது.




தனது ஸ்கூட்டியில் அம்மா பர்வதத்தை அமர வைத்துக்கொண்டு வீ.ஆர். மருத்துவமனையை நோக்கிப்பறந்தாள் கங்கா.

' இந்த நிலைமைக்கு நான் தானே காரணம் ? நான் சிவாவை நிராகரித்து விட்டேன் என்று தெரிந்ததும். அதிர்ச்சி தாளாமல் சுப்புமாமாவுக்கு ' அட்டாக்' வந்துவிட்டது.

கடவுளே ! அவருக்கு எதுவும் ஆகக்கூடாது காலமுச்சூடும் குற்ற உணர்ச்சியில் நான் கலங்கும்படி நடந்துடக் கூடாது.

பகவானே...! கருணை காட்டு மாங்காட்டு காமாட்சி அம்மா ! உனக்கு குளிரக்குளிர அபிஷேகம் பண்ணி குங்குமக்காப்பு சாத்தறேன்...

தவமணி அத்தையோட மஞ்சள் குங்குமத்தை நீ தான் நிலைக்கும் படி செய்யவேணும்....'

குற்ற உணர்வு உள்ளூர புழுவாய் குடைந்தது தாரை தாரையாய் கண்ணீர் வழிந்தோடியது

ஐ.ஸி.யூ.வுக்கு வெளியே சோர்ந்த முகத்துடன் நின்றிருந்தான் சிவா அங்கிருந்த நீளமான பெஞ்சில் தேம்பி அழுது கொண்டிருந்தாள் தவமணி.

நடேசன் சிவாவின் அருகே பீதியுடன் நின்றிருந்தார்.

'' வா கங்கா! வாங்க அத்தே !''

மெல்லிய குரலில் பேசியவனின் விழிகளை ஊன்றி கவனித்தாள்

நேருக்கு நேர் இவளைப்பார்த்த பார்வையில்... உன்னால தான் எங்கப்பாவுக்கு இப்படி ஆயிடுச்சு என்ற குற்றச்சாட்டு கடுகளவு தெரியவே இல்லை.

'' எதுக்கு மாமா ? வீட்டுக்கு போன் பண்ணினீங்க ? பாவம்...கங்காவையும் அத்தையும் வீணா ஏன் கலவரப்படுத்தினீங்க? பதறிப் போய் வந்திருக்காங்க...'' என்றாள்.

'' சுப்பு அண்ணாவுக்கு ஒண்ணுன்னா... எங்களால தாங்கிக்க முடியுமா ? அண்ணாவுக்கு இப்போ எப்படி இருக்கு தம்பி''

விசும்பினாள் பர்வதம்

தவமணியின் கையை ஆறுதலாய் பற்றிக்கொண்டான்.

''கவலைப்படாதீங்க அத்தே ! இப்ப தான் டாக்டர் வெளியில வந்து சொல்லிட்டுப் போறாரு அப்பா அபாய கட்டத்தைத்தாண்டிட்டாராம்

டாக்டர்ஸ் போராடி அவரோட உயிரைக்காப்பாத்திட்டாங்க..

ஆனா ஐ.ஸி.யூ. வில் இன்னும் ரெண்டு நாளைக்கு அவர் இருக்கணுமாம் ... அதுக்கு அப்புறம் தான் ரூமுக்கு ' ஷிப்ட்' பண்ணுவாங்களாம்.....''

நெஞ்சில் கை வைத்து அப்பாடா என்ற ரீதியில் பெரு மூச்சு விட்டவளை கவனித்தான் சிவா.

அவளது கண்ணில் கரகர வென்று கண்ணீர் வழிந்து கொண்டிருந்ததையும் கவனிக்கத்தவறவில்லை.

அந்த தருணத்தில் ஒரு நர்ஸ் வெளியில் தலையை நீட்டி '' இந்தாங்க சார்! இந்த இஞ்ஜெக்ஷனை உடனடியா வாங்கிட்டு வாங்க '' என்றாள்.

அதை வாங்கிக்கொண்டு அவசரமாய் பார்மஸியை நோக்கி விரைந்தான் சிவா.

மின்னல் வேகத்தில் மருந்தை வாங்கி கொடுத்து விட்டான்

தனிமையில் அவனிடம் பேசும் சந்தர்ப்பத்திற்காக காத்து கொண்டிருந்தாள் கங்கா '' அத்தே அம்மாவுக்கு நீங்க எடுத்து சொல்லுங்க..

அவங்களும் பி.பி. சுகர் பேஷன்ட் தான் ! சாப்பிடாம மாத்திரை போட்டுக்காம இங்கேயே இருந்தா... என்னாகும் கிளம்பி வீட்டுக்குப்போகச் சொல்லுங்க... மாமா ! நீங்களும் சொல்லுங்க

அப்பா தான் அபாய கட்டத்தை தாண்டிட்டாரே ?''

நடேசனும் பர்வதமும் தவமணியைத்தேற்றி வற்புறுத்தியதும் மெல்ல எழுந்தாள் தவமணி.

'' நீங்க ரெண்டு பேரும் அம்மா வோட வீட்டுக்குப்போங்க மாமா ஆறுதலா கூட இருங்க... சாப்பிட வச்சு மாத்திரை போட்டுக்க வச்சுடுங்க...''

''கண்டிப்பா தம்பி'' மூவரும் காரிலேறிச் சென்றுவிட்டனர்.

''கங்கா ! வா... உன்னை ஆட்டோவுல ஏத்தி விட்டுடறேன்...'' என்றான்.

''இல்ல சிவா! நான் உங்க கிட்ட தனியா பேசணும்னு துடிச்சுட்டிருந்தேன்...''

இது காலம் வரை ' சார் ' என்றவள். இப்போது உரிமையாய் பெயரைச் சொல்லி அழைக்கிறாளே ? என்ற ரீதியில் திகைத்துப் போய் அவளைப்பார்த்தான்.

''நான் ரெண்டு வாரத்துக்கு முன்ன கோவில்லே வச்சு கவுரியைப் பார்த்தேன் அவங்க குழந்தைக்கு உங்க பேரை வச்சிருந்தாங்க. உங்களை வாழவைத்த தெய்வம்னு சொல்றாங்க. சகலத்தையும் என் கிட்டே சொல்லிட்டாங்க.

அதைக்கேள்விப்பட்ட மாத்திரத்துல. என் மனுசுல நீங்க கோபுரமா உசந்து நின்னுட்டீங்க.யூ.ஆர்.ஸோ கிரேட்!

நான் என் வாழ்நாள்லே நேர்லே இப்படிப்பட்ட உயர்ந்த மனிதரைப்பார்த்ததே இல்ல...

இடையில் உங்களை பத்தி எனக்கொரு தவறான அபிப்பிராயம் இருந்தது. இப்பேர்ப்பட்டவரைப்போய் இப்படி நெனச்சோமேன்னு அனு தினமும் குற்ற உணர்ச்சியில் நான் புழுங்கிக்கிட்டிருக்கேன். அயாம் ஸோ ஸாரி சிவா!

நான் வந்து... என்னால தானே...'' அதற்கு மேல் பேச முடியாமல் தொண்டையில் பந்தாய் துக்கம் வந்து அடைத்துக்கொண்டது.

'' வேணாம் கங்கா ! கடந்து போனதைப்பத்தி நினைக்கவும் கூடாது பேசவும் கூடாது கடவுள் ஏன் நமக்கு ரெண்டு கண்களை முன்னாடி படைச்சிருக்காரு தெரியுமா ? இதுக்கு தான்... லீவ் இட் கங்கா! எல்லாம் விதி வசம் ! எது நடந்தாலும் அது நன்மைக்கேன்னு. நினைச்சுக்கணும். நேரமாகுது வீட்டுக்கு கிளம்பு கங்கா!''

அவளை வற்புறுத்தி வாசல் வரை வந்து அனுப்பி வைத்தான்.

தினமும் மாலை நேரத்தில் ஆஸ்பத்திரிக்கு வந்து போய் கொண்டிருந்தாள் கங்கா.

சுப்பிரமணியும் தனி அறைக்கு மாற்றப்பட்டு விட்டிருந்தார் நாள் முழுவதும் கூடவே இருந்தார் நடேசன். தவமணிக்கு ஆறுதலாய் பர்வதமும் இருந்தாள்.

அன்று கோபித்துக்கொண்டு சென்ற அரவிந்த்.. மாலை நேரத்தில் காரில் இவளது அலுவலகத்திற்கு வருவதை நிறுத்தி விட்டிருந்தான்.

உணவு இடைவேளையின் போது மட்டும் வந்து சென்றான். போன் செய்வதையும் பாதியாக குறைத்திருந்தான் இன்று காலையிலேயே அரவிந்த் கங்காவுக்கு போன் செய்து '' பிரண்ட் சுக்கு பார்ட்டி அரேஞ்ஜ் பண்ணியிருக்கேன்.

எங்க எம்.டி உட்பட முக்கியமானவங்க அவங்கவங்க மனைவியை அழைச்சுட்டு வர்றாங்க... இன்னிக்கு ஈவ்னிங் எங்க பண்ணை வீட்டுல பார்ட்டி வச்சிருக்கோம்.

நீ சரியாக ஆறுமணிக்கு வந்துடு இது வெறும் பிரண்ட்ஸ் மட்டுமே கலந்துக்கிற பார்ட்டிங்கிறதால... எங்கப்பா அம்மாவைக் கூட நான் கூப்பிடலை சாக்கு போக்கு சொல்லாம நேரத்துக்கு வரப்பாரு...கங்கா!''

பதிலுக்கு கூட காத்திராமல் போனை அணைத்து விட்டான்.

''இதுக்கு நீ போகாம இருந்தா நல்லாயிருக்காது கங்கா பிரச்சினை எதுக்கு, அவங்க பண்ணை வீடு குன்றத்தூர் கோவிலுக்கு கூப்பிடு தொலைவில தான் இருக்கு. பார்ட்டி முடிஞ்சதும். போன் பண்ணு. அப்பா வந்து உன்னைக்கூட்டிட்டு வந்தடுவாரு.... '' என்றாள் பர்வதம்.

அலுவலகத்திலிருந்து வந்ததும் அவசரமாய் குளியலை முடித்து கரும்பச்சை வண்ணத்தில் மைசூர் சில்க் புடவையை அணிந்து தனது ஸ்கூட்டியில் ஏறி பண்ணை வீட்டை நோக்கிப்பயணித்தாள்

அவள் பண்ணை வீட்டை அடைந்த போது மணி ஆறு இருபது ஆகிவிட்டிருந்தது.

"வா கங்கா... உள்ளே வா! '' என்று கூறி விட்டு பிஸியாக யாருடனோ போனில் பேசிக்கொண்டிருந்தான் அரவிந்த்

உள் அலங்கார அமைப்பை வேடிக்கை பார்த்த படி அமர்ந்திருந்தாள் கங்கா.

காரிலும் பைக்கிலுமாக ஜோடி ஜோடியாக வந்து இறங்கிய தம்பதியரை திகைத்துப்பார்த்தாள்.

ஆண் பெண் பாகுபாடு இன்றி ஒருவரை ஒருவர் கை குலுக்கியும் அணைத்தும் கலகலத்துக்கொண்டிருந்தவர்களை பார்க்கவே என்னவோ போலிருந்தது நேரம் நத்தையாய் நகர்ந்தது

இருட்டியும் விட்டது. விதவிதமான உணவு வகைகள் பப்பே சிஸ்டத்தில் பரிமாற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்கத்திய இசை ஒலித்தது.

''இந்த பார்ட்டி மறக்க முடியாத பார்ட்டியா இருக்கணும் இப்போ இந்த கேமை தொடங்கப்போறோம் அவங்கவங்க கார் சாவிகளையும் பைக் சாவிகளையும் இந்த ஜார்லே போடுங்க. அப்புறமா இந்த ஜார்லே கண்ணை மூடிக்கிட்டு... ஏதாச்சும் ஒரு சாவியை எடுக்கணும் கேம் என்னன்னு புரியுதா ?'' '' என்று கேட்டு விட்டு கண்ணடித்தான் அரவிந்தின் நண்பன்.

'' ஓஹோ... ஆஹா.. ஹாஹ்ஹா...'' ஆண்களும் பெண்களும் உற்சாகக்குரல் கொடுத்தனர்.

கங்கா திரு திருவென்று விழித்தாள் கேம் தொடங்கியது. '' இவர் தான் எங்க எம்.டி '' என்று ஏற்கனவே ஒருவனை அறிமுகம் செய்து வைத்திருந்தான் அரவிந்த்

அந்த நபரோ '' இது யாரோட கார் சாவி ?''

என்று கேட்க... அரவிந்த் குஷியாய் '' இது என்னோடது பாஸ்'' என்றான்

'' அப்படின்னா... உன்னோட பியான்ஸி தான் இன்னிக்கு எனக்கு கம்பெனி குடுக்கப்போறா..'' சிரித்தான் எம்.டி.

'' எஸ்... எனக்கு நண்பனோட பைக் சாவி கிடைச்சிருக்கு ஸோ...எனக்கு இன்னிக்கு அவனோட மனைவி .... ஹா...ஹா..''

பகபக வென்று சிரித்தான் அரவிந்த்

இதெல்லாம் எங்களுக்கு ரொம்ப சகஜம் என்பது போல் படு கேஷுவலாக வேறு வேறு ஆண்களோடு மாறி மாறி அந்தப்பெண்கள் நெருங்கி அணைத்தபடி ஆடத் தொடங்கினார்கள்.

''என்ன கங்கா ? எங்க எம்.டி.க்கு கம்பெனி குடு ... ஆடத் தெரியாதா முழிக்கிறியே ? போகபோக எல்லாம் பழகிடும். இதுல எவ்ளோ ஜாலி இருக்கு தெரியுமா ? ஹாய்யா ஹேப்பியா இருக்கணும் நேரத்தை வீணாக்காதே... ஆடி களைச்சுப்போனா... ரூமுக்



குப்போயிடலாம். மாடியில் நிறைய ரூம்ஸ் இருக்கு... என்ஜாய் !''

நண்பனின் மனைவியை அணைத்தபடி இலேசாய் ஆடிய படி பேசிய அரவிந்த்.. நல்ல போதையில் இருந்தான்.

யூ லுக் ஸோ பியூட்டி புல் ! டயத்தை வேஸ்ட் பண்ணாம மேல ரூமுக்குப்போலாமா டியர் என்ற படி அருகில் வந்த எம்.டி.யின் முகத்தில் காறித்துப்பினாள்

''தூ ! மானம் கெட்ட ஜென்மங்களா ? அதுக்கு வேற ஆளைப்பாருடா... பொறுக்கி ராஸ்கல் ''

வெகுண்டு போய் கத்தியவள்... புள்ளி மானைப்போல் வாசலை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

''டாமிட் என்னோட எம்.டி.க்கு இன்னிக்கு நீ தான் விருந்து... உன்னை விட மாட்டேன்டி...''

வெறி கொண்ட மிருகமாய் அவளைப்பின் தொடர்ந்து ஓடினான் அது பண்ணை வீடு ஆதலால்...சுற்றியும் பச்சை மரங்கள் இருளில் பூதாகரமாய் நின்றிருந்தன.

அரவிந்துடன் அவனது நண்பர்கள் சிலரும் நாய்களாய் அவளை விரட்டிக்கொண்டு வந்தனர்.

உயிரைக்கையில் பிடித்த படி ஓடிய கங்கா... யார் மீதோ மோதி கொண்டு வீலென்று அலறினாள்.

''நான் தான் கங்கா... சிவா! பயப்படாதே'' அவனது குரல் கேட்டதும் தான்... அவளுக்கு உயிரே வந்தது.

தேம்பி அழுதபடி அவனது மார்பில் சாய்ந்து விட்டாள் கங்கா ''இந்த பாவி கிட்டேயிருந்து என்னைக்காப்பாத்துங்க சிவா'' அரற்றினாள்

'' ஏய்... அவளை என் கிட்டே விட்டுட்டுப்போ ! அவ என் பியான்ஸிடா...'' என்று நெருங்கி வந்த அரவிந்தின் கன்னத்தில் இடியாய் தன் கையை இறக்கினான் சிவா அரவிந்த் சிலைபோல் நின்று விட்டான்.

''இன்னொரு அடி எடுத்து வச்சா... உன் உயிர் உடம்புல தங்காதுடா...'' கர்ஜித்தான் சிவா. பின்னால் ஓடி வந்த அரவிந்தனின் நண்பர்கள் பீதியுடன் பின் வாங்கி ஓடினார்கள்.

சிவாவின் கரத்தை இறுகப்பற்றிக்கொண்டாள் கங்கா.

'' வா கங்கா ! நம்ம கார் அங்கே நிக்குது''

'' சிவா ! இவனைப்போய் ரொம்ப டீஸண்ட்... நாகரீகமானவன்னு நெனைச்சு இவனைத்தேர்ந்தெடுத்தேனே ? தூ... சாக்கடைப்புழு..! நாகரீகமா டீசண்டா டிரஸ் பண்ணிக்கிடறதில்லை... பொருத்தமே இல்லாத கண்ணாடி அந்தக்காலத்து மனுஷர் மாதிரி அப்பப்போ வேட்டிசட்டையில திரியறவர்னு உங்களை நான் குறைச்சு மதிப்பிட்டதுக்கு எனக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்....

நீங்க மட்டும் வராம இருந்திருந்தா... என் நிலைமை என்னா

யிருக்கும் ? சிவா நிஜமா சொல்றேன் நிச்சயமான மறு தினத்துல இருந்தே... கவுரியை நான் சந்திச்சதிலிருந்தே.. என் மனசு பூராவும் நீங்க தான் நிறைஞ்சிருக்கீங்க... என்னை நீங்க ஏத்துப்பீங்களா சிவா! எனக்கு அந்த வரத்தை தருவீங்களா?''

கண்ணீர் மல்கப் பேசியவாறு அவனது விழிகளை ஏறிட்டாள்.

"நிஜமாவே என்னை உனக்கு பிடிச்சிருக்கா கங்கா?''

'' நிஜமா... சத்தியமா... என் இதயம் முழுவதும் உங்க வசம் தான் என் மனசுல விஸ்வரூபமெடுத்து வியாபிச்சுட்டீங்க சிவா.ஐ.லவ்.யூ ஸோ மச்...''

''நானும் தான்... கடந்த நாலு வருஷமாவே உன்னை மனதார நேசிச்சுட்டிருக்கேன்.''

''இது தெரியாம போச்சே ? வைரத்தோட அருமை தெரியாம கண்ணாடிக்கல்லை தேர்ந்தெடுத்தேனே ? நான் ஒரு படிச்ச முட்டாள் சிவா! ''

'' நோ அப்படி சொல்லாதே...அதோ கார் கிட்டே யாரு இருக்காங்க பாரேன்...''

அங்கே துர்காவும் அத்தான் குமாரும் பேயறைந்த முகங்களோடு நின்றிருந்தனர்.

''நான் குடோனுக்குப் போயிட்டு வந்துட்டிருந்தேன். இவங்க வழியில் நின்னுட்டிருந்தாங்க பைக் ரிப்பேர் ஆயிடுச்சாம்...உங்கம்மா துர்காவுக்கு போன் பண்ணி உனக்கு துணையா பண்ணை வீட்டுக்குப் போகச் சொன்னாங்களாம். பைக் ரிப்பேர் ஆனதால ஆட்டோவுக்காக வெயிட் பண்ணிட்டிருந்தாங்க....

நான் நம்ம கார்லே ஏத்திட்டு இங்க வந்துட்டேன் நல்ல காலம் நாங்க வந்தோம்... துர்காவோட கணவருக்கு ரொம்ப அவமானமா இருக்கு..தன்னோட தம்பி அரவிந்த் இவ்வளவு இழிவா மானக்கேடா நடந்துட்ருக்கானேன்னு கொதிச்சுப்போயிட்டாரு... '' என்றான் சிவா

'' கங்கா என்னைப்பத்தி கவலைப்படாதே... புகுந்த வீட்டுல எனக்குப்பிரச்சனை வந்திடுமோன்னு பயந்து தானே இவனை நீ தேர்ந்தெடுத்தே... அதான் இவரே இவனோட லட்சணத்தை கண்கூடா பார்த்துட்டாருல்ல ?

தம்பியோட அடாத செயலைப்பார்த்துட்டு வெகுண்டு போய் இருக்காரு இவரே பெரியவங்கிட்டே இவனைப்பத்திவிலாவாரியா சொல்லிடுவாரு...

கவலைப்படாதே...! சிவகுரு சார் உனக்கு கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கணும்...'' என்று கூறி விட்டு நாசூக்காய் ஒதுங்கி நின்றாள் துர்கா.

''கல்யாணத்துக்கு முன்னாடியே இவனோட உண்மையான சுயரூபம் வெளிப்பட்டதே ? அதுக்கு நான் கடவுளுக்கு நன்றி சொல்லணும்...'' என்று நிம்மதி பெருமுச்சு விட்டாள் கங்கா

''உண்மையான காதலுக்கு ஒரு சக்தி இருக்கும். அந்த சக்தி என் காதலை ஜெயிக்க வைக்கும்னு நான் உறுதியா நம்பிட்டிருந்தேன் கங்கா ! அது சரியா போச்சு'' என்று சிரித்தான் சிவா

''வெளுத்ததெல்லாம் பாலுன்னு முட்டாள் தனமா... அகிலாவை என்னோட உயிர்த்தோழியா நம்பிட்டிருந்தேன் உள்ளுக்குள்ளே விஷத்தை வச்சுக்கிட்டே பழகி கழுத்தை அறுத்திருக்கா அந்த அகிலா...''

''என்னைத்தவிர நீ எல்லாரையும் நம்பியிருக்கேன்னு சொல்லு'' முறுவல் பூத்தான் சிவா.

'' சாரி! சாரி ! அயாம் ஸோ சாரி சிவா அதுக்கு பிராயச்சித்தமா வாழ்நாள் பூராவும் உங்களுக்கு பாத பூஜை செய்ய நான் தயாரா இருக்கேன் சிவா''

சட்டென்று அவனது பாதங்களில் பணிந்தாள் கங்கா

'' மக்கு ! எழுந்திரு... நீயும் நானும் லைப் பார்ட்னர்ஸ் என்னுள் பாதி .நீ... நீ என் அடிமையில்ல. அழகு தேவதை என் மகாராணி '' என்ற படி அவளது முகத்தைப்பற்றித்தூக்கி நிறுத்தினான்.

'' ஐ.லவ்.யூ. ஸோ மச் சிவா'' என்றபடி அவனது கரத்தை எடுத்து தனது கன்னத்தில் பொருத்திக்கொண்டாள் கங்கா.

**முற்றும்**

# பட்டுச்சேலை
## பரிசுபெற்றவர்கள்

**ஆகஸ்ட்-15, 2012** **பதில்: சாய்னா நேவால்**

1. எச். பிரமிளா, கோவை - 641 107.
2. ஜெ. ஜெயந்தி, கரூர் - 639 001.
3. எஸ். சையது முகமது, சென்னை - 600 093.
4. ஆர். ராஜம், திருச்சி - 621 010.
5. கே. ஆனந்தன், நாகப்பட்டினம் - 609 001.

Deviyin KANMANI -Tamil Fortnightly September-15,2012 Regd.No. TN/CH(C)/ 360 / 12-14 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.



# என்னைப்பற்றி...

## இந்த நாவல் குறித்து...

பார்த்துப் பார்த்து பட்டுச் சேலைகளை தேர்ந்தெடுப்பதில் காட்டும் நிதானம் கவனத்தை வாழ்க்கைப் பிரச்சினையில் கடைப்பிடிக்க தவறுகிறார்கள் பல பெண்கள்.

'இதயம் முழுதும் உனது வசம்' நாவலின் கதாநாயகன் கங்கா 'வெளுத்ததெல்லாம் பால்' என்று நம்பும் ரகம். நட்புக்கு துரோகம் செய்யும் சிநேகிதியின் ஆலோசனைப்படி... சிவகுருவை விடுத்து தவறான நபரை வாழ்க்கைத் துணையாக தேர்வு செய்கிறாள். அவனோ அவளது பெண்மைக்கே பேராபத்தை விளைவித்து படுகுழியில் தள்ளப் பார்க்கிறான்.

கங்கா கடைசியில் தப்பித்தாளா? இல்லையா? என்பதை வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள்

லட்சுமி பிரபா